விலை: 30.00
பக்கங்கள்: இருபத்து நான்கு
website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com, valampurii@sltnet.lk

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம் 1000/= மட்டுமே

சங்கு 19 வள்ளுவர் ஆண்டு 2049 கார்த்திகை 08 சனிக்கிழமை (24.11.2018) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 340

## வடக்கு, கிழக்கில் 6 நீதிபதிகளுக்கு இடமாற்றம்

(யாழ்ப்பாணம்)

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் அமைந்துள்ள நீதிமன்றங்களில் கடமையாற்றும் மாவட்ட நீதிபதிகளுக்கு நீதிச் சேவைகள் ஆணைக்குழுவால் இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது. 24

## தென்மராட்சியில் மணல் அகழ்வு; ஒருவர் கைது

(சாவகச்சேரி)

தென்மராட்சி மறவன்புலவுப் பகுதியில் சட்டவிரோத மணல் அகழ்வில் ஈடுபட்ட நபர் ஒருவர் சாவகச்சேரி பொலிஸாரால் நேற்று வெள்ளிக்கிழமை காலை 6.30மணியளவில் கைது செய்யப்பட் 24

122 பாரா. உறுப்பினர்கள்

## பிரதமர் மகிந்தவுக்கு எதிராக நீதிமன்றில் மனு தாக்கல்

(கொழும்பு)

பாராளுமன்றில் பெரும்பான்மையை நிரூபித்துள்ள பாராளுமன்ற உறுப்பினர்கள் மேன்முறையீட்டு நீதிமன்றில் மனு ஒன்றை தாக்கல் செய்துள்ளனர். 24

## சபாநாயகருக்கு எதிரான மனு ஒத்திவைப்பு

(கொழும்பு)

பாராளுமன்றை கலைக்கும் ஜனாதிபதியின் உத்தரவுக்கு உயர் நீதிமன்றால் இடைக்காலத் தடை விதிக்கப்பட்டுள்ள நிலையில் பாராளுமன்றை மீளக்கூட்டிய 23

புலிகளின் கொடி, சின்னங்களை பயன்படுத்தத் தடை

## மாவீரரை நினைவுகூர தடையில்லை யாழ். நீதவான் நீதிமன்றம் கட்டளை

(யாழ்ப்பாணம்)

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் கொடிகள் மற்றும் சின்னங்களைப் பயன்படுத்தி மாவீரர் நாள் நிகழ்வை நடத்த யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றம் தடை விதித்துள்ளது.

ஆயினும் நினைவுகூருவதற்கு எந்த தடையையும் நீதிமன்றால் வழங்கப்படவில்லை.

கோப்பாயில் மாவீரர் நாள் நிகழ்வை நடத்துவதற்கு தடை விதிக்கக்கோரி கோப்பாய் பொலிஸார் தாக்கல் செய்த மனு விசாரணையின் போதே மேற்குறித்த கட்டளை நேற்று வழங்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் கோப்பாயில் 51 வது படைத் தலைமையகம் உள்ள காணிக்கு (மாவீரர் துயிலும் இல்லம்) எதிரே உள்ள வீரசிங்கம் சிறிதரன் என்பவருடைய 23

போலி நாணயத்தாள்

## இரு இளைஞர்கள் தென்மராட்சியில் நேற்றுக் கைது

(சாவகச்சேரி)

போலி நாணயத்தாள்களைப் பயன்படுத்தி பொருள் கொள்வனவில் ஈடுபட்ட இரண்டு இளைஞர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மந்துவில் கிழக்கு கொடிகாமத்தை சேர்ந்த 19 வயது மற்றும் 21 வயதுடைய இருவரையே கொடிகாமம் பொலிஸார் நேற்று 23

# தெரிவுக்குழு நியமனத்துக்கு 121 உறுப்பினர்கள் ஆதரவு

## சபையிலிருந்து மகிந்த அணி வெளிநடப்பு

**(கொழும்பு) பாராளுமன்ற தெரிவுக்குழு தொடர்பான சபாநாயகரின் முடிவுக்கு 121 உறுப்பினர்கள் ஆதரவு தெரிவித்த அதேவேளை, மகிந்த தரப்பினர் நேற்று சபை அமர்வை புறக்கணித்து சபையிலிருந்து வெளியேறியுள்ளனர். இந்நிலையில் அடுத்த 27-ம் திகதி வரை சபை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.**



பாராளுமன்றம் நேற்று காலை 10.30 மணிக்கு கூடியது. இதன்போது தெரிவுக்குழு உறுப்பினர்களின் எண்ணிக்கை குறித்து சபாநாயகர் அறிவித்தார். அதன்படி, ஐக்கிய தேசிய முன்னணியில் 5 உறுப்பினர்களும், ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் 5 உறுப்பினர்களும், மக்கள் 23

## எனக்கு எதிராக பிரேரணை நிறைவேற்றினால் நான் மகிழ்வேன்

சபாநாயகர் கரு ஜெயசூரிய தெரிவிப்பு



(கொழும்பு)


எனக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டு வந்து நிறைவேற்றினாலோ அல்லது புதிய அரசாங்கம் தங்களுக்குரிய பெரும்பான்மை சக்தியை நிரூபித்தாலோ நான் மகிழ்ச்சியடைவேன் என சபாநாயகர் கரு ஜெயசூரிய தெரிவித்துள்ளார். 23

## வட, கிழக்கு மக்களுக்கு தற்போது அரசியல் தீர்வே அவசியமானது

நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

வட, கிழக்கு மக்களுக்கு தற்போது அரசியல் தீர்வே முக்கியமானது. எமது அமைதி சூழலையும் பாரம்பரியங்களை அழிக்க இடம்கொடுக்க முடியாது என தெரிவித்த வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் என்னுடைய காரியங் 23



## அரசியலமைப்பை மீறியே சபாநாயகர் செயற்படுகிறார்!

மகிந்த அணி சாடல்

(கொழும்பு)

அரசியல் அமைப்பையும், பாராளுமன்ற கட்டளைகளை மீறியுமே சபாநாயகர் கரு ஜெயசூரிய தொடர்ச்சியாக செயற்பட்டு வருகின்றார். இவ்வாறான பக்கச்சார்பான சபாநாயகரையோ அவரது தீர்மானங்களையோ ஒருபோதும் ஏற்றுகொள்ள மாட்டோம் என ஆளும் 23

## ஞானசாரருக்கு எதிரான மனு மீளப்பெறப்பட்டது

(கொழும்பு)

ஞானசார தேரருக்கு எதிராக சட்டமா அதிபரால் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டிருந்த மனு விலக்கிக் கொள்ளப்பட்டுள்ளது.

நேற்று வெள்ளிக்கிழமை இடம்பெற்ற வழக்கு விசாரணையின் போதே சட்டமா அதிபர் இந்த விடயத்தினை தெரிவித்து 23

## இலங்கைக்கு சர்வதேச தடை விதிக்கப்படும் ஆபத்து!

சஜித் பிரேமதாஸ எச்சரிக்கை



(கொழும்பு)

இலங்கைக்கு சர்வதேச தடை விதிக்க வாய்ப்புகள் உள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார். ஜப்பான், அமெரிக்கா போன்ற நாடுகள் இலங்கைக்கு வழங்கியிருந்த உதவியை நிறுத்தியு 24

## இலங்கையின் அரசமைப்புக்கு உட்பட்டே செயற்படுகிறேன்

பொது நலவாய செயலாளரிடம் மைத்திரிபால சிறிசேன தெரிவிப்பு

(கொழும்பு)

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தான் இலங்கையின் அரசமைப்பிற்கு உட்பட்ட விதத்திலேயே செயற்பட்டுள்ளதாக பொது நலவாய செயலாளர் நாயகம் பரொனொஸ் பட்ரீசியா ஸ்கொட்லாண்டிடம் தெரிவித்துள்ளார்.

நான் தொடர்ந்தும் ஜனநாயக நடைமுறைகளை பின்பற்றுவேன் எனவும் சிறிசேன தெரிவித்துள்ளார்.

பொது நலவாயத்தின் செயலாளர் நாயகத்துடனான தொலைபேசி உரையாடலின் போதே 23

# சந்தர்ப்பத்தை சரியாக பயன்படுத்த த.தே.கூட்டமைப்பு தவறியுள்ளது

## சிவசக்தி ஆனந்தன் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

நாட்டில் அரசியல் நெருக்கடிகள் தோற்றம் பெற்றுள்ள இச்சந்தர்ப்பத்தை உரிய முறையில் கையாள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தவறியுள்ளது என, வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் தெரிவித்தார்.

நேற்று முன்தினம் வியாழக் கிழமை இரவு அவரது இல்லத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். மேலும், எதிர்க்கட்சி தலைவரோ அல்லது அவர் சார்ந்த பாராளுமன்ற உறுப்பினர்களோ தமிழ் மக்களின் நலன் சார்ந்து எந்த வொரு முடிவையும் எடுக்காது வெறுமனே ஐக்கிய தேசிய கட்சியையும், ரணில் விக்கிரமசிங்கவையும் பாதுகாக்கும் செயற்பாட்டில் ஈடுபட்டுள்ளதாகவும் அவர் குற்றம் சாட்டினார். (3)

# பாராளுமன்றில் குழப்பங்களை தவிர்க்கவே வெளியேறினோம்

## அமைச்சர் சுசில் தெரிவிப்பு



(கொழும்பு)

பாராளுமன்றத்திற்குள் மோதல்களும், குழப்பங்களும் தோற்றம் பெறுவதை விரும்பாத நிலையிலேயே சபையிலிருந்து வெளியேறினோம் என அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

நேற்று வெள்ளிக்கிழமை பாராளுமன்ற அமர்வுகளின் போது, ஆளுந்தரப்பினர் சபையிலிருந்து இடைநடுவே வெளியேறினர். இது தொடர்பாக கருத்துத் தெரிவிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார். இது தொடர்பாக கருத்து தெரி வித்த அமைச்சர், பாராளுமன்றத் தெரிவுக் குழுவுக்கு ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியிலிருந்து 7 பேரின் பெயர் சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிலையில், ஐ.ம.சு.மு. மற்றும் ஐ.தே.மு. ஆகிய இரு கட்சிகளிலிருந்தும் சமமான எண்ணிக்கையிலான உறுப்பினர்கள் தெரிவுக்குழுவில் நியமிக்கப்பட்டுள்ளனர்.

சபாநாயகரின் தன்னிச்சையான மற்றும் பக்கசார்பான நடவடிக்கையினாலேயே இவ்வாறான நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

இதற்கு நாம் எதிர்ப்பு தெரிவித்தோம். ஆனால், இதனால் நாடாளுமன்றத்திற்குள் குழப்பம் ஏற்படுவதை தவிர்த்துக்கொள்ளும் வகையில் சபையிலிருந்து வெளியேறினோம்.

சபாநாயகரின் தீர்மானங்கள் அனைத்தும் ஐக்கிய தேசிய முன்னணிக்கு பக்கசார்பானவையாகவே அமைந்து வருகின்றன எனவும் குற்றம் சாட்டினார். (3)


## வேலைவாய்ப்பு

O/L பரீட்சை எழுதிய இளைஞர், யுவதிகள், இருபாலருக்குமான பயிற்சியுடன் கூடிய முகாமைத்துவ பதவி வெற்றிடங்கள்

பயிற்சியின் போது 12000/= - 18000 /=

பயிற்சியின் பின்னர் 45000/= + E.P.F / E.T.F

தொழில் நிரந்தரமாக்கப்படும்

வயது 18 - 28

தங்குமிடவசதி, மருத்துவம் இலவசம்

(6542)

Granton International (pvt) Limited

அழைக்கவும் :

077 999 4807 / 076 770 7759

## வலம்புரி

விளம்பரத் தொடர்புகளுக்கு

021 221 7603

021 567 1532

## சவுதி அரேபிய வேலைவாய்ப்பு

சம்பளம் 69,000/- அலுமினியம் ஃபிற்றர்

Emerald Isle
Manpower & Travel Services
The Sri Lankan Recruitment Specialists
License No. 2268

ஆரம்பக் கட்டணம் இல்லை

பதிவுக் கட்டணம் 200/- மட்டுமே

வடக்கின் 1வது & ஒரேயாகு வெளிநாட்டு வேலைவாய்ப்பு நிறுவனம்

077 00 38 215 ☎ 021 222 00 11 (C-4501)

221-1/1. மின்சார நிலைய வீதி. (2ம் ஒழுங்கை). யாழ்ப்பாணம்

www.emeraldisle.lk email: Jaffna@emeraldisle.lk


# சுன்னாகம் பகுதியில் இரு இளைஞர்கள் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு சித்திரவதை

## ம.உ.ஆணைக்குழு விசாரணை முன்னெடுப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் சுன்னாகம்பகுதியில் இரு இளைஞர்கள் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு சித்திரவதைக்குள்ளாக்கப்பட்ட சம்பவம் தொடர்பில் மனித உரிமைகள் ஆணைக்குழு விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாக ஆணைக்குழுவின் யாழ் பிராந்திய பணிப்பாளர் ரி.கனகராஜ் தெரிவித்துள்ளார்.

ஏழாலை வடக்கில் வசிக்கும் பாலசிங்கம் நிரஞ்சன் (29) மற்றும் பாலசிங்கம் பிரகாஸ் (26) ஆகிய இளைஞர்கள் கடந்த 19 ஆம் திகதி இரவு 10.30 மணியளவில் தமது வீடு நோக்கி சென்றுள்ளனர்.

வீட்டுக்கு அருகில் வீதி சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டு இருந்த சுன்னாகம் பொலிஸார் குறித்த இளைஞர்களை மறித்து சோதனை மேற்கொண்டுள்ளனர். வாகனத்தின் ஆவணங்களை சோதித்துவிட்டு அடையாள அட்டையை கோரியுள்ளனர்.

அதற்கு இளைஞர்கள் அடையாள அட்டை இல்லை சாரதி அனுமதிப்பத்திரம் இருப்ப தாக தெரிவித்துள்ளனர். அதனை ஏற்க மறுத்த பொலிஸார் குறித்த இருவரையும் பொலிஸ் நிலையத்துக்கு அழைத்து சென்றுள்ளனர்.

அங்கு நிரஞ்சன்என்ற இளைஞரை தலைகீழாக கட்டி தொங்க விட்டு தாக்கியுள்ளனர். மற்றைய இளைஞரையும் மோசமாக தாக்கியுள்ளனர். அடுத்த நாள் பொலிஸ் பிணையில் விடுவித்துள்ளார்கள். களவு சம்பந்தமான சம்பவம் ஒன்று தொடர்பில் சந்தேகத்தின் பேரில் விசாரணை மேற் கொண்டதாக உறவினர்களுக்கு பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மேலும் இளைஞர்களிடம் இருந்த 3 ஆயிரம் ரூபாய் பணத்தையும் எடுத்துள் ளார்கள் என சம்பவத்துடன் தொடர்புடைய வர்கள் தெரிவித்துள்ளார்கள்.

தாக்குதலில் காயமடைந்த இளைஞர்கள் இருவரையும் தெல்லிப்பழை வைத்திய சாலையில் உறவினர்கள் அனுமதித்ததுடன், யாழ் மனித உரிமைகள் ஆணைக்குழுவிலும் முறைப்பாட்டை பதிவு செய்துள்ளார்கள். (3-9)


# வலிகாமம் தெற்கு பிரதேச சபை, சுன்னாகம்

### 2019 ஆம் ஆண்டிற்கான 2வது மீள் கேள்வி அறிவித்தல்

வலிகாமம் தெற்கு பிரதேச சபையின் எல்லைக்குட்பட்ட மரக்கறிச் சந்தைகள், மீன் சந்தைகள், கருவாட்டுக் கடைகள், இறைச்சிக்கடைகள் என்பனவற்றை 2019.01.01ஆம் திகதி தொடக்கம் 2019.12.31ஆம் திகதி வரை குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்விகள் கோரப்படுகின்றன.

| | | |
|---|---|---|
| கேள்விப் பத்திரம் வழங்கும் காலம் | - | 26.11.2018 - 03.12.2018 பி.ப 2.00 மணி வரை |
| கேள்விப் பத்திரம் ஏற்கும் இறுதித்திகதி | - | 04.12.2018 பி.ப 1.30 மணி வரை |
| கேள்விப் பத்திரம் திறக்கப்படும் திகதி | - | 04.12.2018 பி.ப 2.00 மணிக்கு |
| கேள்விப் பத்திரம் திறக்கப்படும் இடம் | - | வலிகாமம் தெற்கு பிரதேசசபை, தலைமையலுவலகம். |

| தொ இ | விபரம் | மீளளிக்கப்படாத கேள்விப் பத்திரத் தொகை (VAT,NBT தவிர) | மீளளிக்க கூடிய கேள்வி வைப்பு | ஏற்றுக் கொள்ளக் கூடிய ஆகக் குறைந்த கேள்வித் தொகை (VAT,NBT தவிர) | மாத வாடகை (VAT,NBT தவிர) |
|---|---|---|---|---|---|
| | **சுன்னாகம் உப அலுவலகம்** | | | | |
| 1 | சுன்னாகம் பொதுச் சந்தை, (மீன் சந்தை மற்றும் மீன் வெட்டுமிடம் வாகன தரிப்பிடம் உட்பட) | 3,000.00 | 30,000.00 | 10,502,000.00 | |
| 2 | உடுவில் கீளிச் சந்தை | 1,000.00 | 10,000.00 | 180,000.00 | |
| 3 | கருவாட்டுக் கடை இல 03 | 750.00 | 7,500.00 | 39,700.00 | 250.00 |
| 4 | முட்டைக் கடை இல 04 | 750.00 | 7,500.00 | 49,650.00 | 250.00 |
| 5 | கோழிக்கடை இல 07 | 1,000.00 | 10,000.00 | 189,000.00 | 250.00 |
| 6 | பொது மலசலகூடம் | 750.00 | 7,500.00 | 36,800.00 | |
| | **உடுவில் உப அலுவலகம்** | | | | |
| 1 | மருதனார்மடம் சந்தை (வாகன தரிப்பிடம் உட்பட) | 3,000.00 | 30,000.00 | 21,625,000.00 | |
| 2 | மருதனார்மடம் சந்தை பொது மலசலகூடம் | 750.00 | 7,500.00 | 45,000.00 | |
| | **ஏழாலை உப அலுவலகம்** | | | | |
| 1 | ஏழாலை மயிலங்காடு மாட்டிறைச்சிக் கடை | 1,000.00 | 10,000.00 | 257,422.00 | 250.00 |
| 2 | ஏழாலை மயிலங்காடு ஆட்டிறைச்சிக் கடை | 750.00 | 7,500.00 | 40,500.00 | 250.00 |

கேள்வி சம்பந்தமான மேலதிக விபரங்களை 2018.10.17ம் திகதிய உதயன், தினக்குரல், வலம்புரிப் பத்திரிகைகளிலும் எமது அலுவலகத்தில் அலுவலக நேரத்திலும் பெற்றுக்கொள்ளலாம்.

**க.தர்ஷன்**
**தவிசாளர்**
**வலிகாமம் தெற்கு பிரதேசசபை,**
**சுன்னாகம்.**
**23.11.2018**

(C-4499)

## தேவை

**Air Ticketing** இல்

அனுபவமுள்ள வேலையாட்கள் தேவை

தொடர்புகளுக்கு

077 108 3481

(C-4496)

## மலிவு விலையில்

1. கொங்கிறிற் கலவை இயந்திரம்

தொடர்பு - 077 220 9583

(C-4495)

## ஓமான், குவைத், கட்டார், அவுஸ்ரேலியாவில் ஹொட்டேல்துறை வேலைவாய்ப்பு

சம்பளம் Rs.47,000/- முதல் Rs.577,458/-

Kitchen Helper, Steward, Waiter, Housekeepers, Supervisor, Sandwich Maker, Barista, Commis I, II, III, Chef

பயிற்சி, முன்னனுபவம் இல்லாதவர்களுக்கு

Tourism & Hospitality Management

FAST TRACK - ENTRY LEVEL - DIPLOMA

கற்கைநெறியுடன் வேலைவாய்ப்பு ஏற்பாடு!

SIKARAM ACADEMY
Business - Hospitality - Media
FAST TRACK to CAREERS
Sri Lankan Enterpreneur of the Year 2017

0777 324 004
021 222 00 11

(C-4501)

221-1/1. மின்சார நிலைய வீதி. (2ம் ஒழுங்கை), யாழ்ப்பாணம்


www.sikaram.lk Sikaram Academy

# ஆட்சியைத் தீர்மானிக்கும் சக்தியாக இலஞ்சம், ஊழல் இருக்க முடியாது

## இரா.சம்பந்தன் எடுத்துரைப்பு

(கொழும்பு)

**“பிரதமர் ஒருவர் நாட்டை ஆட்சி செய்ய வேண்டுமாயின் அதற்கான அங்கீகாரம் பெறப்பட வேண்டும். மாறாக இலஞ்சமும்மோசடியும்இந்தச் சபையை ஆளத்தீர்மானிக்க முடியாது” என எதிர்க்கட்சித் தலைவர் இரா. சம்பந்தன் தெரிவித்துள்ளார்.**



மக்கள் விடுதலை முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத்தால் நேற்று வெள்ளிக்கிழமை நாடாளுமன்றில் கொண்டு வரப்பட்ட சபை ஒத்திவைப்பு வேளை பிரேரணை மீதான விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றியபோதே சம்பந்தன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

'நாட்டைபிரதமர்ஆளவேண்டுமாயின் அதற்கு அங்கீகாரம் பெற வேண்டும். இலஞ்சமும்ஊழலும்ஆளும்சக்தியை தீர்மானிக்க முடியாது.

நாட்டின் இன்றைய நடத்தை காரணமாக, அதன் மதிப்பை இழந்துவிட்டது. சபாநாயகர் ஆசனம் தாக்கப்பட்டது. தேவையற்ற குழப்பங்கள் தோற்றுவிக்கப்பட்டன. இவை ஏன் ஏற்பட்டது.

நாடாளுமன்ற உறுப்பினர்களான நாங்கள் அரசியலமைப்பை மீறமுடியாது. நாங்கள் அரசியலமைப்பை மதிப்பதற்கு உரித்துடையவர்கள். இந்த சபை கௌரவமாகவும் கண்ணியமாகவும் நடத்தப்பட வேண்டும்.

இந்த நாட்டின் பிரதமராக செயற்பட வேண்டுமென மகிந்த நினைக்கிறார். அதற்கான அங்கீகாரம் கிடைத்தால்தான் செல்லுபடியானதாகும். அதுவே எனது நிலைப்பாடு" என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# ஐ.தே.க.குழுக்கூட்டத்தில் பங்கேற்க வேண்டிய அவசியம் எமக்கில்லை

## வெளிநடப்பு குறித்து நாமல் விளக்கம்



(கொழும்பு)

சபாநாயகர் கரு ஜெயசூரிய தலைமையிலான ஐ.தே.க. குழுக்கூட்டத்தில் கலந்து கொள்ள வேண்டிய அவசியம் எமக்கில்லை என, நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.

மேலும், இதனாலேயே தாம் நேற்று நாடாளுமன்றத்திலிருந்து வெளிநடப்பு செய்ததாகவும் அவர் தெரிவித்தார்.

நாடாளுமன்ற அமர்வுகளின் இடைநடுவே ஆளுந்தரப்பு வெளியேறிய நிலையில், நாடாளுமன்ற வளாகத்தில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

“சபாநாயகர் என்பவர் பக்கச்சார்பின்றி சுயாதீனமாக செயற்பட வேண்டும் ஆனால், தற்போதைய சபாநாயகர் கரு ஜெயசூரிய ஐ.தே.கவின் சபாநாயகராகச் செயற்பட்டு வருகிறார்.

அது மாத்திரமின்றி, நாடாளுமன்றில் ஐ.தே.க. குழுக் கூட்டத்தை சபாநாயகர் நடத்தி வருகிறார். அவ்வாறாக ஐ.தே.கவின் குழுக் கூட்டத்தில் பங்கேற்க வேண்டிய அவசியம் எமக்கில்லை.

சபாநாயகர் நடுநிலையாகச் செயற்படும் வரை நாடாளுமன்ற அமர்வுகளைப் புறக்கணிக்கவே தீர்மானித்துள்ளோம். அது மாத்திரமின்றி சபாநாயகர் பக்கச்சார்பின்றி செயற்படும் பட்சத்தில் நாம் பெரும்பான்மையை நிரூபிப்போம்.

நாடாளுமன்றில் (நேற்று) நாம் ஒருவருக்கொருவர் தாக்கிக் கொண்டு மோதலில் ஈடுபடுவோம் என அவர்கள் எண்ணியிருப்பார்கள் ஆனால், அவ்வாறானதொரு குழப்ப சூழ்நிலையைத் தோற்றுவிப்பதற்கு நாம் தயாரில்லை" எனவும் நாமல் தெரிவித்தார். (இ-7)

# இந்தச் சபாநாயகர் இருக்கும் வரை தீர்மானம் ஒன்றுக்கு வரமுடியாது

## திலங்க சுமதிபால தெரிவிப்பு



(கொழும்பு)

பாராளுமன்ற தெரிவுக் குழுவில் பெரும்பான்மை பலத்தை இந்த அரசாங்கத்துக்கு தராவிடின், இந்த சபாநாயகர் இந்தப் பாராளுமன்றத்தில் இருக்கும் வரையில் தீர்மானம் ஒன்றுக்கு வர முடியாது என முன்னாள் பிரதி சபாநாயகர் திலங்க சுமதி பால தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையில் அவர் இதனைத் தெரிவித்தார்.


அரசாங்க தரப்புக்கு தெரிவுக்குழுவில் பெரும்பான்மைப் பலத்தை வழங்குவது பாராளுமன்ற' சம்பிரதாயம் என வும் அவர் தெரிவித்தார். (இ-7)

# கணக்கு வாக்கெடுப்பு போலியானது அரச ஊழியர்களுக்குச் சிக்கல்

## மங்கள சமரவீர எச்சரிக்கை

(கொழும்பு)

அமைச்சரவையில் அங்கீகரிக்கப்பட்டதாக கூறப்படும் கணக்கு வாக்கெடுப்பு போலியானதென்றும், அதனால் பாரிய சிக்கலை எதிர்நோக்கவேண்டி ஏற்படும் என்றும் ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் மங்கள சமரவீர எச்சரித்தார்.



நாடாளுமன்றில் நேற்று வெள்ளிக்கிழமை இடம்பெற்ற சபை ஒத்திவைப்புவேளை பிரேரணை மீதான விவாதத்தில் பங்கேற்று உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு எச்சரித்தார்.

தற்போதைய அமைச்சரவை போலியானதென்றும், அந்த போலியான அமைச்சரவையில் அங்கீகரிக்கப்பட்டவை செல்லுபடியற்றதென்றும் மங்கள தெரிவித்தார்.

அத்தோடு, குறித்த கணக்கு வாக்கெடுப்பு நாடாளுமன்றிற்கு வரும்போது, ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பினருக்கு பெரும்பான்மை இல்லாததால் அதனை நிறைவேற்றிக்கொள்ள முடியாது.

அவ்வாறு நிறைவேற்ற முடியாத சந்தர்ப்பத்தில், எதிர்வரும் ஜனவரி மாதத்திலிருந்து அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான ஊதியம், சமுர்த்தி கொடுப்பனவு, ஓய்வூதிய கொடுப்பனவு, பாடசாலை சீருடை, உரமானியம் என எதனையும் வழங்க முடியாதென மங்கள சமரவீர மேலும் தெரிவித்தார். இதனால் நாடு பாரிய நெருக்கடியை எதிர்கொள்ளும் என்றும் எச்சரித்தார். (இ-7)

# பாராளுமன்றத் தேர்தல் தொடர்பில் உயர் நீதிமன்றமே தீர்மானிக்கும்

## லக்ஷ்மன் பியதாச கூறுகிறார்

(கொழும்பு)

பாராளுமன்ற தேர்தலை எப்போது நடத்த வேண்டும் என்பதை உயர்நீதிமன்றமே தீர்மானிக்கும் என ஸ்ரீ லங்கா சுதந்திர கட்சயின் பொதுச்செயலாளர் ரோஹண லக்ஷ்மன் பியதாச தெரிவித்துள்ளார்.

அத்துடன் 2020 இல் தான் பாராளுமன்ற தேர்தல் நடத்த வேண்டும் என்று எவருக்கும் உறுதியாக குறிப்பிட முடியாது. பாராளுமன்றத்தின் பதவிக்காலம் முடிவதற்கு முன்னரே நாட்டின் அரசியல் நெருக்கடிக்கு தீர்வு காணும் முகமாக மக்களின் நலனை கருத்திற் கொண்டு ஜனாதிபதி பாராளுமன்ற தேர்தலை நடத்த தீர்மானிக்கலாம்.

பாராளுமன்றம் கலைக்கப்பட்டமைக்கும், பாராளுமன்ற தேர்தலை நடத்த திகதி நிர்ணயித்தமைக்கும் தற்காலிக தடையுத்தரவை பிறப்பித்துள்ளது. உயர்நீதிமன்றம் எவ்வகையான தீர்ப்பினை வழங்கும் என்று எவராலும் எத்தணிக்க முடியாது.

பிறப்பிக்கப்படுகின்ற தீர்ப்பிற்கு அனைவரும் கட்டுப்பட வேண்டும் .ஒரு வேளை சாதகமான தீர்வு கிடைக்கப் பெறுமாயின் அடுத்த வருடம் பாராளுமன்ற தேர்தல்சில வேளை இடம்பெறலாம் எனவும் அவர் தெரிவித்தார். (இ-7)

# மகிந்த தரப்பினரும் எங்களை சந்தித்தனர்

## அம்பலப்படுத்தினார் ஜேர்மன் தூதுவர்



(கொழும்பு)

இலங்கையில் பணியாற்றும் இராஜதந்திரிகளுக்கு எதிராக முன்வைக்கப்படும் விமர்சனங்கள் குறித்து இலங்கைக்கான ஜேர்மன் தூதுவர் ஜோர்ன் ரொஹ்டே கவலை வெளியிட்டுள்ளார்.

கனடாவின் உயர்ஸ்தானிகரிற்கு எதிராகவும் வெளிநாட்டு இராஜதந்திரிகளிற்கு எதிராகவும் ஏன் தேவையற்ற விமர்சனங்கள் முன்வைக்கப்படுகின்றன என அவர் தனது டுவிட்டரில் கேள்வி எழுப்பியுள்ளார்.

கடந்த செவ்வாய்க்கிழமை நாங்கள் ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பின் நான்கு முக்கிய நாடாளுமன்ற உறுப்பினர்களை சந்தித்தோம் என ஜேர்மனியின் தூதுவர் தெரிவித்தார்.

அவர்களின் வேண்டுகோளின் பேரிலேயே இந்த சந்திப்பு இடம்பெற்றது. அவர்கள் இந்த சந்திப்பு குறித்து இரகசிய தன்மையை பேணுமாறு கேட்டுக்கொண்டதால் நாங்கள் இதனை பகிரங்கப்படுத்தவில்லை எனவும் தூதுவர் தெரிவித்தார்.

இதன் பின்னர் எங்களை சந்திப்பதற்கான அழைப்பை தமிழ்த் தேசிய கூட்டமைப்பும் விடுத்திருந்தது என குறிப்பிட்டுள்ள ஜேர்மன் தூதுவர் நாங்கள் ஜனாதிபதி, சபாநாயகர் உட்பட அனைத்துத் தரப்பினரையும் சந்தித்துள்ளோம். அனைவரையும் செவிமடுப்பதே எங்கள் பணி எனவும் தெரிவித்துள்ளார். (இ-7)

# பாராளுமன்றை கூட்டி நெருக்கடியை தீவிரப்படுத்தும் சபாநாயகர் மீது சரத் வீரசேகர பாய்ச்சல்



(கொழும்பு)

பாராளுமன்றம் கலைக்கப்பட்டமைக்கு எதிராக உயர்நீதிமன்றம் தற்காலிக தடையுத்தரவை பிறப்பித்துள்ள நிலையில் பாராளுமன்றத்தை மீண்டும் கூட்டி அரசியல் நெருக்கடியினை மேலும் தீவிரப்படுத்தியுள்ள சபாநாயகரின் செயற்பாடு வன்மையாக கண்டிக்கத்தக்கது என அட்மிரல் சரத் வீரசேகர தெரிவித்துள்ளார்.

எமது நாட்டின் இறையாண்மைக்கு எதிராகவே இன்று சர்வதேச அமைப்புக்கள் எல்லை மீறி செயற்படுகின்றன.

சில வரையறைகளுக்குட்பட்டே ஜனநாயகத்தை பாதுகாப்பதாக குறிப்பிடப்படும் சர்வதேச அமைப்புக்கள் செயற்பட வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார். (இ-7)

# பொங்கினார் பேர்ஸ்டோவ்

## சதம் கடந்து அசத்தல்
## இங்கிலாந்து அபாரம்


சதம் அடித்து ஆர்ப்பரிக்கும் பேர்ஸ்டோவ்

இலங்கைக்கு எதிரான எஸ்.எஸ்.சி டெஸ்டில் துடுப்பாட்டத்தில் மிளிர்ந்த இங்கிலாந்தின் ஜொனி பேர்ஸ்டோவ் சதம் கடந்து கைகொடுத்தார்.

இலங்கை வந்துள்ள இங்கிலாந்து அணி, மூன்று போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் பங்கேற்கிறது.

முதலிரண்டு டெஸ்டில் வென்ற இங்கிலாந்து 2-0 என ஏலவே தொடரை கைப்பற்றியது.

இந்நிலையில் இரு அணிகளுக்கும் இடையிலான மூன்றாவதும் இறுதியுமான டெஸ்ட் கொழும்பில் நடக்கிறது.

நாணயச்சுழற்சியில் வென்ற இங்கிலாந்து அணியின் தலைவர் ஜோ ரூட் துடுப்பாட்டத்தை தேர்வு செய்தார்.

இங்கிலாந்து அணிக்கு ரோரி பேர்ன்ஸ் (14), ஜென்னிங்ஸ் (13) ஜோடி ஏமாற்றியது. பின் இணைந்த ஜொனி பேர்ஸ்டோவ், அணித் தலைவர் ஜோ ரூட் ஜோடி பொறுப்பாக ஆடியது. இவ் இணை மூன்றாவது விக்கெட்டுக்காக 100 ஓட்டங்களைச் சேர்த்தபோது ரூட் (46) ஆட்டமிழந்தார். அபாரமாக ஆடிய பேர்ஸ்டோவ் சதம் கடந்தார். இவருக்கு ஒத்துழைப்பு கொடுத்த ஸ்ரோக்ஸ் (57) அரைச்சதமடித்தார்.

சதமடித்து பேர்ஸ்டோவ் 110 ஆட்டமிழந்தார். ஜோஸ் பட்லர் (16), (13) நிலைக்க இந் றைய முத ஆட்டம் நிறை போது, இங்கி முதல் இன் விக்கெட்டுக் இழந்து 312 களை எடுத்து

அசத்திய ஓட்டங்களில் பென் போக்ஸ் வில்லை. நிலையில் நேற் லாம் நாள் வுக்கு வந்த லாந்து அணி னிங்சில் 7 களை ஓட்டங் ஸ்திரமான நிலையில் உள்ளது. அலி (26), ரஷித் (13) ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

# நயீம் சாதனை


விக்கெட் ஒன்றை வேட்டையாடிய பின் நயீம் ஹசன்

சிட்டகொங் டெஸ்டில் பங்களாதேஷின் நயீம் ஹசன் 'சுழலில்' சிக்கிய மே.தீவுகள் அணி முதல் இன்னிங்சில் 246 ஓட்டங்களுக்கு சுருண்டது.

பங்களாதேஷ் சென்றுள்ள மே.தீவுகள் (அதிகாரப்பூர்வமாக விண்டீஸ்) அணி இரண்டு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் பங்கேற்கிறது.

இத்தொடரின் முதல் போட்டி சிட்டகொங்கில் நடக்கிறது. நாணயச்சுழற்சியில் வென்று முதலில் துடுப்பெடுத்தாடிய பங்களாதேஷ் அணி நேற்று முன்தினம் முதல் நாள் ஆட்டநேர நிறைவில் 8 விக்கெட்டுக்களை இழந்து 315 ஓட்டங்களை எடுத்திருந்தது.

நேற்றைய 2ஆம் நாள் ஆட்டத்தில் முதல் இன்னிங்ஸை தொடர்ந்த பங்களாதேஷ் அணி 324ஓட்டங்களுக்குசகலவிக்கெட்டுக்களையும் இழந்தது.

பின், முதல் இன்னிங்சை ஆரம்பித்த மே.தீவுகள் அணிக்கு கெய்ரன் பவெல் (14) விரைவில் திரும்பினார். சகிப் சுழல்பந்துவீச்சில் ஹோப் (1), அணித் தலைவர் பிராத்வைட் (13) ஆட்டமிழந்தனர். நயீம் ஹசன் 'சுழல்' வலையில் ரோஸ்டன் சேஸ் (31), அம்ப்ரிஸ் (19) ஆட்டமிழந்தார். ஹெட்மயர்(63), டவ்ரிச் (63*) அரைச்சதம் கடந்து ஆறுதல் கொடுத்தனர்.

மே.தீவுகள் அணி முதல் இன்னிங்சில் 246 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுக்களையும் இழந்தது.

பந்துவீச்சில் பங்களாதேஷ் அணி சார்பில் அதிகபட்சமாக நயீம் ஹசன் 5 விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

78 ஓட்டங்கள் முன்னிலையுடன் இரண்டாவது இன்னிங்சை ஆரம்பித்த பங்களாதேஷ் அணிக்கு இம்ருல் (2) ஒற்றை இலக்கில் திரும்பினர். சேஸ் 'சுழலில்' சௌமியா சர்கார் (11), மொமினுல் (12) வெளியேறினர். மொஹமட் மிதுன் (17), அணித் தலைவர் சகிப் (1) ஜொலிக்கவில்லை.

இந்நிலையில் நேற்றைய 2ஆம் நாள் ஆட்டம் நிறைவுக்கு வந்தபோது, பங்களாதேஷ் அணி இரண்டாவது இன்னிங்சில் 5 விக்கெட்டுக்களை இழந்து 55 ஓட்டங்களை எடுத்திருந்தது.

இதன்மூலம் 5 விக்கெட்டுக்கள் கைவசமிருக்கும் நிலையில் 133 ஓட்டங்களால் முன்னிலை பெற்றிருந்தது.

இப்போட்டியில் பங்களாதேஷ் அணி சார்பில் அறிமுக டெஸ்டில் களமாடிய சுழற்பந்து வீச்சாளர் நயீம் ஹசன் மிரட்டினார். மொத்தம் 14 ஓவர்கள் வீசிய இவர் 61 ஓட்டங்களைக் கொடுத்து 5 விக்கெட்டுக்களை கைப்பற்றினார்.

இதன்மூலம், டெஸ்ட் அரங்கில் அறிமுக போட்டியில் ஒரே இன்னிங்சில் 5 விக்கெட்டுக்கள் கைப்பற்றிய இளம் வயது (17 வயது, 355 நாள்) பந்துவீச்சாளர் என்ற உலக சாதனை படைத்தார்.

இதற்கு முன், அவுஸ்திரேலியாவின் கம்மின்ஸ் (எதிர் தென்னாபிரிக்கா, ஜொகனஸ்பேர்க்) 18 வயது 193 நாட்களில் இந்த இலக்கை எட்டியதே சாதனையாக இருந்தது. ஒட்டுமொத்த டெஸ்ட் அரங்கில் 5 விக்கெட் வீழ்த்திய இளம் வீரர்கள் பட்டியலில் நான்காவது இடம் பிடித்தார். பங்களாதேஷ் பந்துவீச்சாளர்களில் இந்த இலக்கை எட்டிய 8ஆவது வீரரானார்.

# டிரோக்பா ஓய்வு



ஐவரி கோஸ்ட் கால்பந்து நட்சத்திரம் டிரோக்பா கால்பந்து அரங்கிலிருந்து விடை பெற்றார்.

ஐவரி கோஸ்ட் கால்பந்து அணியின் தலைவர் டிடியர் டிரோக்பா (வயது-40), ஐவரி கோஸ்ட் சார்பில் அதிக கோல் அடித்தவர்கள் (105 போட்டிகள், 65 கோல்) பட்டியலில் முதலிடத்தில் உள்ளார்.

செல்சி கழகத்துக்காக 381 போட்டிகளில் 164 கோல்கள் அடித்துள்ளார். பிரிமியர் லீக் மற்றும் எப்.ஏ., சலஞ்ச் கிண்ண தொடரில் நான்கு முறை கிண்ணம் வென்ற அணியில் இடம்பிடித்துள்ளார்.

சமீபகாலமாக, அமெரிக்காவின் போனிக்ஸ் ரைசிங் அணிக்காக விளையாடி வந்தார். இந்நிலையில், சர்வதேச கால்பந்து அரங்கிலிருந்து ஓய்வு பெற்றுள்ளார். இதன் மூலம், 20 ஆண்டு கால்பந்து வாழ்க்கை முடிவுக்கு வந்தது.

இது குறித்து டிரோக்பா 'டுவிட்டரில்' வெளியிட்ட செய்தியில், 'கால்பந்து அரங்கிலிருந்து விடைபெறுகிறேன். இதுவரை எனக்கு ஆதரவு கொடுத்த அணி நிர்வாகம், சக வீரர்கள், பயிற்சியாளர்கள், ரசிகர்களுக்கு நன்றி. கடின மாக உழைத்தால் கனவுகளை நனவாக்கலாம்," எனத் தெரிவித்துள்ளார்.

# மழையால் தகர்ந்தது நெஞ்சம் மெல்போர்னிலும் தொடர்ந்தது சோகம்


அவுஸ்திரேலிய அணியின் ஆரம்ப விக்கெட்டுக்களை தகர்த்தெறிந்த மகிழ்ச்சியில் இந்தியாவின் கலீல் அகமட்

அவுஸ்திரேலிய அணிக்கு எதிரான இரண்டாவது 'ரி20' போட்டியில் இந்திய பந்துவீச்சாளர்கள்சிறப்பான பந்துவீசசை வெளிப்படுத்தியபோதிலும் மழை காரணமாக போட்டி பாதியில் ரத்தானது.

அவுஸ்திரேலியா சென்றுள்ள இந்திய அணி, அங்கு மூன்று போட்டிகள் கொண்ட 'ரி20' தொடரில் பங்கேற்கிறது. முதல் போட்டியில் தோற்ற இந்திய அணி 0-1 என தொடரில் பின்தங்கி இருந்தது.

இந்நிலையில் இரு அணிகள் மோதிய 2ஆவது ரி20 போட்டி நேற்று மெல்போர்னில் நடந்தது.

நாணயச்சுழற்சியில் வென்ற இந்திய அணியின் தலைவர் ஹோலி களத்தடுப்பை தேர்வு செய்தார். இந்திய அணியில் எவ்வித மாற்றமும் செய்யப்படவில்லை. அவுஸ்திரேலிய அணியில் பயிற்சியின்போது கணுக்காலில் காயமடைந்த ஸ்டான்லேக் நீக்கப்பட்டு நேதன் குல்டர் நைல் சேர்க்கப்பட்டார்.

**கலீல் நம்பிக்கை**

அவுஸ்திரேலிய அணிக்கு அணித் தலைவர் பின்ச், ஷோர்ட் ஜோடி ஆரம்பம் வழங்கியது. புவனேஷ்வர் வீசிய 2ஆவது பந்தில் பின்ச் 'டக்' அவுட்டானார். இவரது அடுத்த ஓவரின் முதல் பந்தில் கிறிஸ் லின் கொடுத்த "பிடி" வாய்ப்பை ரிஷாப் பன்ட் கோட்டை விட்டார். எனினும் இவர் 13 ஓட்டங்களுடன் கலீல் 'வேகத்தில்' ஆட்டமிழந்தார். தொடர்ந்து மிரட்டிய இவர், ஷோர்ட்டை (14) போல்டாக்கினார்.

முதல் போட்டியில் தொல்லை கொடுத்த மக்ஸ்வெலை, குர்னால் பாண்ட்யா போல்டாக்கினார். கேரி (4), குல்தீப் சுழல் அடுத்த வந்த பும்ரா, தன் பங்கிற்கு ஸ்டாய்னிசை (4) வெளியேற்றினார். குல்டர் நைல் 18 ஓட்டங்கள் எடுக்க, கலீல் வீசிய 18 ஆவது ஓவரில் 2 பவுண்டரிகள், ஒரு சிக்சர் உட்பட 19 ஓட்டங்கள் எடுக்கப்பட்டன.

அவுஸ்திரேலியா அணி 19 ஓவர்களில் 7 விக்கெட்டுக்களை இழந்து 132 ஓட்டங்கள் எடுத்திருந்தபோது மழை காரணமாக போட்டி நிறுத்தப்பட்டது.

**மழை தொல்லை**

தொடர்ந்து மழை நீடித்தது. ஒரு வேளை போட்டி நடந்தால் இந்திய அணி 11 ஓவர்களில் 90 ஓட்டங்கள் எடுக்க வேண்டும் என இலக்கு நிர்ணயிக்கப்பட்டது. மீண்டும் மழை தொடர 5 ஓவர்களில் 46 ஓட்டங்கள் என இலக்கு மாற்றப்பட்டது. இதற்கும் இயற்கை வழிவிடாததால், இரண்டாவது 'ரி20' போட்டி கைவிடப்பட்டது.

# நிறைவேற்று அதிகாரத்தை அங்கீகரிக்காத சபாநாயகரை நாங்களும் ஏற்கமாட்டோம்

## உதய கம்மன்பில உடும்புப்பிடி

(கொழும்பு)

**ஜனாதிபதியின் நிறைவேற்று அதிகாரத்தை ஏற்காத சபாநாயகரை நாங்களும் ஏற்றுக் கொள்ள மாட்டோம் என்று பிவித்துரு ஹெல உறுமயவின் தலைவர் அமைச்சர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.**



நேற்று வெள்ளிக்கி ழமை இடம்பெற்ற நாடாளுமன்ற அமர்வின்போது தெரிவுக் குழுவிற்கான வாக்கெடுப்பு நடத்தப்பட்டது. இதன்போது ஆளுந்தரப்பில் அமர்ந்திருந்த ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பினர் சபையிலிருந்து வெளியேறினர். அதன் பின்னர் நாடாளுமன்ற கட்டட தொகுதியில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே உதய கம்மன்பில மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நாடாளுமன்ற தெரிவுக் குழுவில் 5 பேரை தமது அணிக்கு தந்ததை ஒருபோதும் ஏற்றுக்கொள்ள மாட்டோம் என்றும் அவர் தெரிவித்தார்.

நாடாளுமன்றில் 19 பேருக்கு ஒருவர் என்ற எண்ணிக்கையிலேயே தெரிவுக்குழுவின் உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட வேண்டும் என்றும், அவ்வாறான நிலையில் தமிழ் தேசியக் கூட்டமைப்பிற்கும் மக்கள் விடுதலை முன்னணிக்கும் ஒவ்வொரு வரை வழங்க முடியாதென கூறினார். குறித்த இரு கட்சிகள் சார்பில் தெரிவுக்குழுவிற்கு ஒருவரையே நியமிக்கலாம் என்றும் தெரிவித்தார்.

இந்நிலையில், தற்போதைய தெரிவுக்குழு நியமனத்தை தமது அணியினர் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள் என உதய கம்மன்பில மேலும் தெரிவித்தார். (இ-7)


15 ஆம் வருட

நினைவலைகள்



உதிர்வு மறைவு

1948 - 10 - 07

2003 - 11 - 24

அமரர் திருமதி.

எட்வேட் றீற்ரா (ராணி)

வான் மழையாய் பாசம் பகிர்ந்து
கனிவான வார்த்தைகள் உதிர்ந்து
இரங்கிடும் நல்லுள்ளம் நீயாக
நாடிடும் உள்ளங்கள் கரம்பற்றி
சுற்றங்கள் மகிழ்ந்திடவே உரமூட்டி
வழிகாட்டி நீயாக உணர்வூட்டி
மெழுகாக ஒளிர்ந்து அணைந்து
ஆண்டுகள் பதினைந்தால் உருகியே
நிழலாகும் நின்வதனம் நினைந்தோம்

அன்னம்ஸ்,
சங்கானை

நினைந்துருகும்
குடும்பத்தினர்

(6512)


## "சமகால அரசியல் நெருக்கடிகள்" கிளிநொச்சியில் இன்று கருத்தரங்கு

(மல்லாவி )

கிளிநொச்சி ஆய்வு அறிவியல் கழகத்தின் ஏற்பாட்டில் "சமகால அரசியல் நெருக்கடிகள்" என்ற தலைப்பிலான கருத்தரங்கு" கிளிநொச்சி ஆய்வு அறிவியல் கழகத்தின் தலைவரும் ஊடகவியலாளருமான கருணாகரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இன்றைய அரசியல்நிலை தொடர்பாக அறிந்து கொள்ள விரும்பும்ஆர்வலர்கள் அனைவரையும் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு கிளிநொச்சி ஆய்வு அறிவியல் கழகத்தினர் அழைப்பு விடுத்துள்ளார்கள்.

இந் நிகழ்வு இன்று சனிக் கிழமை காலை 9.30. மணிக்கு ஏ-09 வீதியில் உள்ள கரைச்சி பகுதி பல நோக்கு கூட்டுறவுச் சங்க கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இதன் போது, "தெற்கின் அதிகார மோதல்களும் தமிழர் தரப்பின் அணுகு முறைகளும்" என்ற தலைப்பில் அரசியல் ஆய்வாளரும் ஊடகவியலாளருமான "ஜதீந்திரா" வளவாளராக கலந்து கொண்டு கருத்துக்களை வழங்கவுள்ளார்.

இதனையடுத்து, "ஆதிக்க அரசியல் போட்டியும் எதிர் தரப்புக்களின் சவாலும்" என்ற தலைப்பில் அரசியல் ஆய்வாளர் "வழதி" கருத்துக்களை வழங்கவுள்ளார்.

அத்துடன், "நாடு எங்கே போகின்றது? அரசியல் குழப்பமும் அவிழ்க்கப்பட வேண்டிய முடிச்சுகளும்" என்ற தலைப்பில் கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த அரசியல் ஆய்வாளரும், ஊடகவியலாளருமான "சிராஜ் மஸ்ஹூ" கருத்துக்களை வழங்கவுள்ளார். (2-15)

## இராசி பலன்

**மீனம்:** இளைய சகோதர வழியில் உதவிகள் கிடைக்கும், செய்தொழிலில் சிறப்புக்கள் வந்து சேரலாம், காரிய அனுகூலமுண்டு, வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**மேடம்:** உங்களின் கருத்துக்களை பலரும் ஏற்று நடப்பர், எடுத்த காரியங்களில் அதிக பிரயாசை காட்டும் சூழ்நிலை உருவாகும், பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள்.

**இடபம்:** போசன சுகமுண்டு, பெரிய மனிதர்களின் சந்திப்புக்கள் இடம்பெறும் வாய்ப்புண்டு, ஆழ்ந்த சிந்தனையுண்டு ஆன்மீக சிந்தனை மேலோங்கும் நாள்.

**மிதுனம்:** மனதில் இனம்புரியாத சஞ்சலங்கள் தோன்றி மறையும், எடுத்த காரியங்களில் அதிக பிரயாசை காட்டும் சூழ்நிலை ஏற்படலாம், தேக நலனில் அக்கறை காட்ட முற்படுவீர்கள்.

**கும்பம்:** புதிய முயற்சிகளில் ஆர்வம் காட்டுவீர்கள், நண்பர்கள் நம்பிக்கைக்குரியவர்களாக நடந்து கொள்வர், சுப செலவுகள் கூடும் நாள்.

| | | | |
|---|---|---|---|
| | | சந் | |
| செவ் | இராசி பலன் | | ராகு |
| கேது | கிரகநிலை | | |
| சனி | குரு. சூரி | சுக். புத | |

கிரகநிலை

சந்திராஷ்டமம்
விசாகம்,அனுசம்
இரவு 4.54 மணிக்கு
மிது- சந்

24.11.2018

கார்த்திகை 08, சனிக்கிழமை

சூரிய உதயம் காலை 06.11 மணிக்கு

பிரதமை முற்பகல் 10.50 மணிவரை

ரோகிணி பிற்பகல் 5.32 மணிவரை

சுபநேரம் 3.11-4.41 மணிவரை

இராகுகாலம் 9.11-10.41 மணிவரை

அமிர்த சித்தம்

வளவன்

**கடகம்:** வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், பெருமையான சம்பவங்கள் இடம்பெறலாம், பொது வழியில் புகழ் கூடும், காரிய அனுகூலமுண்டு.

**மகரம்:** புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், பிள்ளைகளின் தேவைகளை பூர்த்தி செய்யும் எண்ணம் உருவாகும், தாழ்ந்த சுபாவமுண்டு.

**சிம்மம்:** செயற்பாடுகளில் தீவிரம் காட்டுவீர்கள், போசன சுகமுண்டு, தூரதேசத்திலிருந்து சுப செய்திகள் வந்து சேரலாம், தேகாரோக்கியத்தில் தெளிவு பிறக்கும் நாள்.


**தனுசு:** எடுத்த காரியத்தில் முன்னேற்றம் ஏற்படும் நாள், தன்னம்பிக்கையுடன் பணியாற்றி சாதனை படைக்கும் நாள், உறவினர்கள் அனுசரணையாக நடந்து கொள்வர்.

**விருச்சிகம்:** சென்ற இடத்தில் செல்வாக்கு மேலோங்கும் நாள், விருந்துகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு, பொருளாதார நிலையில் முன்னேற்றமுண்டு.

**துலாம்:** பொது வாழ்வில் வீண் பழிகள் ஏற்படாமல் பார்த்துக் கொள்வது நல்லது, கடவுளை வழிபட்டு காரியம் தொடங்க வேண்டிய நாள், கடன்தொல்லை அதிகரிக்கும்.

**கன்னி:** ஆன்றோர்களின் சந்திப்பு இடம்பெறலாம், புதிய முயற்சிகளில் ஆர்வம் காட்டுவீர்கள், தித்திக்கும் பயணங்கள் இடம்பெறலாம், வாக்கு மேன்மையுண்டு.

# சாட்டி மாவீரர் துயிலுமில்லத்தில் சிரமதானம்





(யாழ்ப்பாணம்)

தீவகம் வேலணை சாட்டி மாவீரர் துயிலுமில்லத்தில் மாவீரர் தினத்தை முன்னிட்டு ஒழுங்குபடுத்தல் வேலைகள் முன்னெடுக்கப்படு கின்றன. மாவீரர்களின் குடும்ப உறவுகள் மற்றும் ஊர் மக்கள் எனப் பலரும் வருகை தந்து சிரமதானப் பணியில் ஈடுபடுகின்றனர்.

இதனை தீவக கோட்ட செம்பகம் தமிழ் பண்பாட்டு கழகத்தின் அமைப்பாளர்கள் முன்னின்று செயற்படுத்தி வருகின்றனர். (இ-7)

# ஸ்ரீ சாயி கலைக்கழகத்தின் வெள்ளிவிழாவும் வாணி விழாவும்

(யாழ்ப்பாணம்)

ஸ்ரீ சாயி கலைக்கழகத்தின் வெள்ளி விழாவும் வாணி விழாவும் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு உரும்பிராய் இந்துக்கல்லூரியின் கற்பக விநாயகர் கலையரங்கில் நடைபெறும்.

கோப்பாய் தேசிய கல்வியியற் கல்லூரி விரிவுரையாளர் திருமதி ஜெயலட்சுமி உதயகுமார் தலைமையில் இடம் பெறும் இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக பேராசிரியர் செ.கிருஷ்ணராசா கலந்து கொள்வார். (இ)




# நடமாடும் சேவை இடமாற்றம்

(யாழ்ப்பாணம்)

யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நட்டஈடு சம்பந்தமான கோவைகள் பூர்த்தி செய்யும் நடமாடும் சேவை நாளை 25 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணியளவில் யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறும் எனக் குறிப்பிடப்பட்டிருந்தது. தவிர்க்க முடியாத காரணத்தால் இந்த நிகழ்வு யாழ்.வேம்படி மகளிர் கல்லூரியில் நடைபெறும் என யாழ்.மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகன் அறிவித்துள்ளார். (இ)

# இயற்கை அனர்த்தத்தால்

# பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு உரிய நேரத்தில் இழப்பீடுகள் வழங்க நடவடிக்கை எடுக்கவும்

(யாழ்ப்பாணம்)

இயற்கை அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு உரிய நேரத்தில் இழப்பீடுகள் வழங்கப்படுவதில்லை என பாதிக்கப்பட்ட விவசாயிகள் விசனம் வெளியிட்டுள்ளனர்.

யாழ்.குடாநாட்டில் அண்மையில் ஏற்பட்ட இயற்கை அனர்த்தம் காரணமாக விவசாயிகள் பலர் பாதிக்கப்பட்டுள்ளனர். இழப்புக்கள் ஏற்பட்டுள்ள விவசாயிகளுக்கு உரிய காலத்தில் இழப்பீடுகள் வழங்கப்படுவதில்லை என குற்றம் சாட்டியுள்ளனர். குறிப்பாக நிசா புயல் இடம்பெற்ற காலத்தில் ஏற்பட்ட இழப்புகளுக்கு கூட இதுவரை உரிய இழப்பீடு பல விவசாயிகளுக்கு வழங்கப்படவில்லை.

அதே போன்றே இழப்பீடு தருவதற்கென ஒவ்வொரு அழிவுகளின் போதும் பிரதேச உத்தியோகத்தர்களால் சேத விபரம் திரட்டப்படுகிறது. ஆனால் இழப்பீடுகள் வழங்கப்படுவதில்லை.

ஏனைய மாகாணங்களில் இயற்கை அனர்த்தத்தால் அழிவுகள் ஏற்பட்டால் உடனடியாக நிவாரணங்கள், இழப்பீடுகள் பொதுமக்களுக்கு வழங்கப்படுகின்ற போதிலும் யாழ்.குடாநாட்டில் இழப்பீடுகள் வழங்கும் செயற்றிடம் மந்தகதியிலேயே இடம்பெறுகிறது.

இந்த நிலையில் தற்போது இடம்பெற்ற அனர்த்தத்துக்கு உரிய முறையில் பதிவுகள் மேற்கொண்டு இழப்பீடுகள் வழங்கப்படுமா என்ற சந்தேகம் எழுந்துள்ளது எனவும் விவசாயிகள் தெரிவித்தனர். இது தொடர்பில் மக்கள் பிரதிநிதிகள் மற்றும் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கூடிய கவனம் எடுத்து விவசாயிகளுக்கு 'இழப்பீடு வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் எனக் கேட்டுக்கொண்டுள்ளனர். (இ-9)

# சமாதான நீதவானாக சத்தியப்பிரமாணம்



(யாழ்ப்பாணம்)

சிவகுருநாதர் வீதி, நீராவியடி யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த திருமதி இரகுலேசன் நளாயினி தீவு முழுவதற்குமான அகில இலங்கை சமாதான நீதவானாக மாகாண மேல் நீதிமன்ற நீதிபதி அ.பிரேமசங்கர் முன்னிலையில் கடந்த 19 ஆம் திகதி சத்தியப் பிரமாணம் செய்து கொண்டார். (இ)

# நாற்பது வருடங்களுக்கு மேலாக புனரமைப்பின்றிக் காணப்படும் வீதி

## இனியாவது கவனம் செலுத்துங்கள் – மக்கள் கோரிக்கை



(வரணி)

சாவகச்சேரி பிரதேச சபையின் நிர்வாகத்திற் குட்பட்ட வரணி பிரதேச வைத்தியசாலைக்கு அருகாமையில் இருந்து ஆரம்பிக்கும் இடைக்குறிச்சி-கரம்பைக் குறிச்சி மேற்கு ஊர் எல்லை வீதியானது பல வருடங்களாக புனரமைப்பு செய்யப்படாமல் குண்டும் குழியுமாகக் காணப்படுகின்றது. இவ் வீதியின் குறிப்பிட்ட அளவு தூரம் பிரதேச சபையினால் இந்த வருடம் ஆரம்பிக்கப்படுகின்றது.

இவ்வீதியின் குறிப்பிட்ட அளவு தூரம் பிரதேச சபையினால் இந்த வருடம் ஆரம்பத்தில் புனரமைப்புச் செய்யப்பட்டது. மிகுதி 2 கிலோ மீற்றர் நீளமான பகுதி இதுவரைக்கும் புனரமைப்புச் செய்யப்படவில்லை.

இதனால் இந்த வீதி யைப் பயன்படுத்தும் பொது மக்கள், பாடசாலை மாணவர்கள், வியாபாரிகள், நோயாளர்கள் போன்றோர் பல்வேறு இன்னல்களுக்கு முகம்கொடுத்து வருகின்றனர்.

மழை காலத்தில் குழிகளில் நீர் தேங்கி வீதியை மூடி நிற்பதால் பயணிப்போர் தடுக்கி விழுந்த சம்பவங்களும் உண்டு.

அதுமட்டுமன்றி பாடசாலை மாணவர்களின் சீருடைகளும் அழுக்கு நீர்பட்டு அசுத்தமடைகின்றன.

மேலும் பயணிகள் மாற்றுப் பாதைகளின் ஊடாகவே மழைகாலத்தில் தமது தேவைகளைப் பூர்த்தி செய்கின்றனர்.

எனவே 40 வருடங்களுக்கு மேலாக புனரமைப்பு இன்றிக் காணப்படும் ஊர் எல்லை வீதியைப் புனரமைத்து மக்களின் சௌகரியமான போக்குவரத்திற்கு உதவுமாறு பிரதேச மக்கள் உரிய தரப்பினரிடம் வேண்டுகோள் முன்வைத்துள்ளனர். (இ-103)

# வருடாந்த குருதிக்கொடை நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

மக்கள் வங்கி, யாழ் பிராந்திய இலங்கை வங்கி ஊழியர் சங்கத்தின் (CBEU) ஏற்பாட்டில் வருடாந்த குருதிக் கொடை நிகழ்வை நாளை 25 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணிமுதல் பிற்பகல் 2 மணி வரை யாழ். ஸ்ரான்லி வீதி மக்கள் வங்கிக் கிளையில் நடத்தவுள்ளது.

இதில் பிரதம விருந்தினர்களாக யாழ். போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி த. சத்தியமூர்த்தி;இரத்த வங்கியின் குருதிமாற்று பிரயோக சேவை வைத்திய நிபுணர் திருமதி கே.சி.டி செனவிரட்ன ஆகியோர் கலந்து கொள்வர். (இ-5)





உரும்பிராய் கிழக்கு காந்திஜி சனசமூக நிலைய புலம்பெயர் மண்ணின் மைந்தர்களின் அனுசரணையுடன் நடத்திய சிறுவர், முதியோர், ஆசிரியர் கௌரவிப்பு விழா அண்மையில் தே.ரமணதாசன் தலைமையில் நடைபெற்றது. இதில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட தலைவர் யுவபிரண்ஸ் பவுண்டேஷன் பணிப்பாளர் க.செவ்வேள் முதியோர்களை கௌரவித்த போது... (படங்கள்:-நல்லூர் செய்தியாளர்)







குருநகர் தொடர் மாடியில் மலக்கழிவு நீரை அகற்றும் தொட்டி நீண்ட காலமாக திருத்தப்படாமையால் அக் கழிவு நீர் வாய்க்கால் ஊடாக வெளியேறுவதால் குடியிருப்பாளர்கள் பெரும் அசௌகரியங்களைஎதிர் கொண்டுவருகின்றனர். 160 குடும்பங்கள் வாழ்ந்து வரும் இக்குடியிருப்பு வளாகத்தில் இப்படியொரு துர்ப்பாக்கிய நிலையும் துர்நாற்றமும் நுளம்புத் தொல்லையும் காணப்படுவதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (படங்கள் : குருநகர் செய்தியாளர்)

**மலிவு விற்பனை**

''ஸ்ரீ சௌபாக்கியவிலா'' பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணத்தில் மலிவு விலையில் சாறிகள், சல்வார்கள் விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு:-
077 470 9841

(6316)

# வாள், கைக்கோடரி, இரும்புக் கம்பிகளுடன் சாவகச்சேரி பொலிஸாரால் மூவர் கைது!

(சாவகச்சேரி)

சாவகச்சேரி நகர்ப் பகு தியை அண்மித்த சாவ கச்சேரி கச்சாய் வீதிப் பகு தியில் ஆபத்தை ஏற்படுத்தக் கூடிய கூரியவாள், கைக் கோடரி.இரும்புக் கம்பி களுடன் ஆட்டோவில் நடமாடிய மூவர் சாவகச் சேரி பொலிஸாரால் நேற்று முன் தினம் வியா ழக்கி ழமை இரவு 9 மணியள வில் கைது செய்யப்பட்டு ள்ளதுடன் அவர்கள் பய ணித்த ஆட்டோ மற்றும் ஆயுதங்கள் என்பனவும் பறிமுதல் செய்யப் பட்டுள்ள தாக சாவகச்சேரி பொலி ஸார் தெரிவித்துள்ளனர். இது தொடர் பாக மேலும் தெரியவருவதாவது.

கூரிய ஆயுதங்களுடன் ஆட்டோவில் குழு ஒன்று சாவகச்சேரி கச்சாய் வீதிப் பகுதியில் நடமாடுவதுடன், பொதுமக்க ளுக்கும் இடையூறு விளைவி ப்பதாக சாவகச்சேரிப் பொலி ஸாருக்கு தகவல் கிடைத் துள்ளது. உடனடியாக விரை ந்து செயற்பட்ட சாவகச்சேரி பொலிஸார் ஆட்டோவில் ஆயுதங்களுடன் பயணித்த 22,23,25 ஆகிய வயது டைய மூன்று இளைஞர் களைக் கைது செய்துள்ள துடன் அவர்கள் பயணித்த ஆட்டோ மற்றும் கூரிய ஆயுதங்களையும் பறிமு தல் செய்துள்ளனர். இதன் போது அவர்களிடம் இரு ந்து 750 மில்லிகிராம் அள விலான போதைப் பொருள் மீட்கப்பட்டதாகவும் பொலி ஸார் தெரிவித்துள் ளனர். கைது நடவடிக்கை களை சாவகச்சேரி பொலிஸ் நிலை யப் பொறுப்பதிகாரி கே.எம். ஏ.கே. கோணார, உபபொலிஸ் பரிசோதகர் ஜெயரோசன் ஆகியோர் தலைமையி லான பொலிஸ் குழுவினர் முன்னெ டுத் திருந்தனர். இது தொடர் பாக சாவகச் சேரி பொலி ஸார் தெரிவிக்கையில்,

தற்போது யாழ். மாவட் டத்தில் ஆவா. ஐ போன்ற குழுக்களைச் சேர்ந்தவர்கள் மக்களுடைய உயிருக்கும், உடைமைகளுக்கும் பாதி ப்பை ஏற்படுத்தி வருவதாகத் தெரிவித்துள்ளனர்.(இ-30)



**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை**
**திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையம்**

**வெளிவாரிப் பரீட்சைகள்-2017**
**வியாபார முகாமைத்துவமாணிக் கற்கைநெறி (வெளிவாரி)**

1. முதலாம் வருட 1ம் அரையாண்டுப் பரீட்சை 2017
2. இரண்டாம் வருட 1ம் அரையாண்டுப் பரீட்சை 2017
3. மூன்றாம் வருட 1ம் அரையாண்டுப் பரீட்சை 2017

மேற்படி பரீட்சைகளை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் 19.01.2019 தொடக்கம் நடாத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இப்பரீட்சைக்கு தோற்றத் தகுதியான பரீட்சார்த்திகள் திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையத்திலோ அல்லது www.codl.jfn.ac.lk எனும் இணையத்தள முகவரியிலோ விண்ணப்பப்படிவத்தினைப் பெற்றுக் கொள்ளலாம். மேற்படி பரீட்சைகளுக்கான பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்வதற்கான இறுதித் திகதி 31.12.2018 (திங்கட்கிழமை) ஆகும்.

மேலதிக விபரங்களைப் பெற விரும்புவோர் 021 222 3612 என்ற தொலைபேசி எண்ணுடன் தொடர்பு கொள்ளலாம்.

(சி-4498) பதிவாளர்

**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை**
**திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையம்**

**வெளிவாரிப் பரீட்சைகள்**
**கலைமாணித் தேர்வு பகுதி-II-2015 (வெளிவாரி)**

மேற்படி பரீட்சையை 17.12.2018 (திங்கட்கிழமை) தொடக்கம் 31.12.2018 (திங்கட்கிழமை) வரை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் நடாத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.பரீட்சைகள் தொடர்பான நேர அட்டவணையையும், பரீட்சை அனுமதி அட்டைகளையும் 10.12.2018 (திங்கட்கிழமை) தொடக்கம் திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம். மேலதிக விபரங்களுக்கு 021 222 3612 என்ற தொலைபேசி எண்ணுடன் தொடர்பு கொள்ளவும்.

(சி-4497) பதிவாளர்

**அகவை நிறைவில் அகமகிழ்ந்து வாழ்த்து**



சைவ சித்தாந்த சாகரம்
பிரதிஷ்டா பூஷணம் சைவக்
குருக்கள் சிரோன்மணி
சிவஸ்ரீ. சோமஸ்கந்த
தண்டபாணிக தேசிகர் (J.P)
(வல்லை முத்துமாரியம்மன்
தேவஸ்தான பிரதமகுரு,
ஆதீனஹர்த்தா புற்றளை சித்தி
விநாயகர் தேவஸ்தானம்,
புலோலி)

பாரினில் பான்மையுடன் மங்கள குரு வாகி சிவம் நிரப்பி
பேரினில் பெருமைமிகு குரு பணிகளை யாக்கி சேவை செய்து
சீரினில் சிறப்பார்ந்த அருட் கலைகளை யாக்குவித்து
மகிழ்வினில் இறை பணிகள் ஓங்க வாழ்த்துக்கள்
அன்னை யருள் ஓங்க வாழ்த்தும் அன்பர்கள்

*சைவ சித்தாந்த பண்டிதர் சிவகாம உபசூரிய வனப்பதி*
*சிவஸ்ரீ தியாக சோமாஸ்கந்த ராஜக்குருக்கள்*
(B.A.Dip.in Ed.MA)
*ஆதீன ஹர்த்தா பிரதமகுரு, இந்து மத குரு*
*நெல்லண்டைப் பத்திரகாளியம்மன் கோவில்*
*இலட்சுமணன் தோட்டம் ஸ்ரீவீரமாகாளியம்மன்*
*வடபத்திர காளியம்மன், பருத்தித்துறை.*
*தற்புருட சிவாச்சாரியார் நித்திய பூஜாதுரந்தரர்*
*அன்னை யருட் சீலர் பிரதம குரு இந்து மதகுரு*
*சிவஸ்ரீ. சோமாஸ்கந்த- தனஞ்சயன் குருக்கள்*
*கரவெட்டி கிழக்கு தல்லையப்புலம்*
*வீரபத்திரகாளியம்மன் கோவில்.*

(6358)

**நெல்லண்டை, தும்பளை, பருத்தித்துறை.**

## 122 உறுப்பினர்கள் ஆதரவு

# தெரிவுக்குழுவின் பெரும்பான்மை எமக்கு வழங்கப்படல் வேண்டும்

## ஹக்கீம் உரிமைக் கோரிக்கை

(கொழும்பு)

நாடாளுமன்றத்தில் 122 தெளிவான பெரும்பான்மையை ஐக்கிய தேசிய முன்னணி கொண்டிருப்பதாகவும், அந்தவகையில் தெரிவுக்குழுவின் பெரும்பான்மை எமக்கு வழங்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையை சபாநாயகர் ஏற்றுக் கொண்டதாகவும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

நேற்று நாடாளுமன்ற அமர்வை முன்னிட்டு இடம் பெற்ற கட்சித் தலைவர்கள் கூட்டத்தின் பின்னர் ஹக் கீம் மேற்கண்டவாறு தெரி வித்தார்.

இந்த முடிவை சபாநா யகர் சபையில் அறிவிப்பார் என்றும், அவ்வாறில்லா விட்டால் வாக்கெடுப்புக்கு விடப்படும் என்றும் தெரி வித்தார்.

13 உறுப்பினர்கள் கொண்ட நாடாளுமன்றத் தெரிவுக் குழுவில் சபாநாயகர் தலைவராகச் செயற்படுவார்.

ஏனைய பன்னிரண்டு பேரும் ஆளும் மற்றும் எதி ரணியிலிருந்து தெரிவு செய்யப்படும் நிலையில், பெரும்பான்மை தொடர்பாக இரு தரப்பிற்கும் பிரச்சி னைகள் ஏற்பட்டு வருகின் றமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# குப்பை கொட்டுவதை நிறுத்தக்கோரி யாழில் நேற்று கவனயீர்ப்புப் போராட்டம்









(யாழ்ப்பாணம்)

புத்தளத்தில் குப்பை கொட் டுவதை நிறுத்த கோரி, யாழ். நகரில் கவனயீர்ப்பு போராட்டம் முன்னெடுக்க ப்பட்டது.

யாழ்.கிளிநொச்சி முஸ் லிம் சம்மேளனம் மற்றும் சமூக நீதிக்கான வெகுஜன அமைப்பு உட்பட யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் கிளின் புத்தளம் உள்ளிட்ட அமைப்புக்கள் ஒன்றிணைந்து யாழ்.மத் திய பேருந்து நிலையத்தின் முன்பாக நேற்று பிற்பகல் 1.30 மணியளவில் இந்தக் கவனயீர்ப்புப் போராட்டத்தை முன்னெடுத்தன.

குப்பை கொட்டுவதற்கு எதிராக கடந்த 50 நாட்க ளாக மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டு வரும் நிலையில், அம்மக்களுக்கு ஆதரவு வழங்கும் முகமாக இந்தக் கவனயீர்ப்பு போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.(இ-101)

## ஐயங்கன்குளத்தில் உயிர் நீத்தவர்களுக்கு நினைவுத் தூபி அமைப்பதற்கு ஏற்பாடு அடுத்தாண்டில் ஆரம்பம்



(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு மாவட்டத்தின் ஐயங்கன்குளத்தில் கடந்த 2007 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 27 ஆம் திகதி இராணுவத்தினரின் ஆழ ஊடுருவும் படையணியின் கிளைமோர்த் தாக்குதலில் உயிரிழந்த எட்டுப் பேருக்கு நினைவிடம் அமைக்கும் பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

உயிரிழந்த 8 பேரின், உடல்களும் அதே கிராமத்திலுள்ள குளக்கரையில் அடக்கம் செய்யப்பட்டிருந்தது.

பிரதேச சபையின் தீர்மானத்துடன் இந்தப் பணிகள் நேற்று முன்தினம் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இந்நிலையில் நினைவிடத்தில் ஓர் நினைவுத் தூபி எழுப்பி புனித வழிபாடு




செய்ய அனுமதி கோரப்பட்டபோதும் மரணித்தவர்களின் திகதியை காரணம் காட்டி அனுமதி மறுக்கப்பட்டிருந்தது.

அதன்பின்னர் கடந்த 15 ஆம் திகதி துணுக்காய் பிரதேச சபையில் குறித்த விடயம் தொடர்பில் தீர்மானம் முன்மொழியப்பட்டிருந்தது.

இந்தத் தீர்மானம் தொடர்பில் ஐ.தே.கட்சியின் சார்பு உறுப்பினர் எதிர்ப்பை தெரிவித்தபோதும் த.தே. கூட்டமைப்பு உறுப்பினர்களின் ஒத்துழைப்புடன் குறித்த தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இதன் பிரகாரம் குறித்த பகுதி நேற்று முன்தினம் துப்புரவு செய்து நினைவை கடைப்பிடிக்க ஏற்ற ஒழுங்குகள் செய்யப்படுவதுடன் அடுத்தாண்டின் ஆரம்பத்தில் இப்பகுதியில் நினைவுத் தூபி அமைக்கவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (2-281)

## மீள்குடியேற்ற அமைச்சின் 41 மில்லியன் நிதியில் 410 பேருக்கு வாழ்வாதார உதவித் திட்டங்கள்

(கண்டாவளை)

கிளிநொச்சி மாவட்டத்தில் போரினால் பாதிக்கப்பட்ட மாற்றுத்திறனாளிகள், பெண் தலைமைத்துவக் குடும்பங்களை உள்ளடக்கிய வகையில் 410 பேருக்கான வாழ்வாதார உதவித் திட்டங்கள் 41 மில்லியன் ரூபாய்செலவில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

கிளிநொச்சி மாவட்டத்தின் கரைச்சி, கண்டாவளை, பச்சிலைப்பள்ளி, பூநகரி ஆகிய நான்கு பிரதேச செயலர் பிரிவுகளிலும் மீள்குடியேறிய குடும்பங்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் திட்டத்தின் கீழ் மீள்குடியேற்ற அமைச்சின் ஊடாக வாழ்வாதார உதவித்திட்டங்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

அதன் அடிப்படையில் இவ்வாண்டும் 410 பயனாளிகளுக்கான வாழ்வாதார உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

இது தொடர்பில் மாவட்டச் செயலகத்துடன் தொடர்பு கொண்டு வினவியபோது,

கிளிநொச்சி மாவட்டத்தில் போரினால் பாதிக்கப்பட்ட பெண் தலைமைத்துவக் குடும்பங்கள் மற்றும் மாற்றுத் திறனாளிகளைக் கொண்ட குடும்பங்கள் என 260 பேருக்கும் சாதாரண பயனாளிகளாகத் தெரிவு செய்யப்பட்ட 150 பயனாளிகளுக்குமாக மொத்தம் 410 பேருக்கான வாழ்வாதார உதவிகள் மீள்குடியேற்ற அமைச்சினுடைய நிதியின் கீழ் 41 மில்லியன் ரூபாய் செலவில் வழங்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-315)

## ஆபத்தான நிலையில் காணப்பட்ட குளங்களின் அணைக்கட்டுகள் இராணுவத்தால் புனரமைப்பு



(கண்டாவளை)

வவுனியா மாவட்டத்தின் செட்டிகுளம் கமநல சேவை நிலையத்திற்குட்பட்ட குளங்களில் நீர்நிரம்பி அணைக்கட்டுக்கள் ஆபத்தான நிலையில் காணப்பட்ட குளங்கள் பெரியகட்டு இராணுவத்தின் உதவியுடன்புனரமைக்கப்பட்டுள்ளன.

கடந்த சில நாட்களாகப் பெய்த கன மழையினால் செட்டிகுளம் கமநல சேவை நிலையத்திற்குட்பட்ட ஆண்டியா புளியங்குளத்திலுள்ள விவசாயக் குளங்களின் அணைக்கட்டுகள் உடைப்பெடுக்கும் அபாயத்தில் காணப்பட்டன.

இதனையடுத்து பெரியகட்டுப் பகுதியிலுள்ள இராணுவத்தினரின் உதவியுடன் அணைக்கட்டுக்கள் புனரமைக்கப்பட்டுள்ளன.(2-315)

## மெனிக்பாம் கிராம அலுவலகத்தில் அரபு மொழியில் பெயர்ப்பலகை




(பனிக்கன்குளம்)

வவுனியா செட்டிகுளம், மெனிக்பாம் கிராம அலுவலகத்திற்குள் அரபு மொழியிலான பெயர்ப்பலகை ஒன்று அண்மையில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.

இதனால் அப்பகுதியிலுள்ள பொதுமக்கள், பொது அமைப்புக்கள் விசனம் தெரிவித்துள்ளதுடன் குறித்த பெயர்ப்பலயை அவ்விடத்திலிருந்து அகற்றுமாறும் கோரிவருகின்றனர்.

இவ்விடயம்குறித்துமேலும் தெரியவருவதாவது,

வவுனியா செட்டிகுளம், மெனிக்பாம் கிராம அலுவலகத்தில் அண்மையில் கட்டார் நாட்டின் அனுசரணையில் தண்ணீர்த்தாங்கி அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளது.

இதையடுத்து அந்நாட்டின் தேசிய மொழியான அரபு மொழியைத் தாங்கிய பெயர்ப்பலகை கிராம அலுவலகத்திற்குள் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.

இதையடுத்து அப்பகுதியிலுள்ள அமைப்புக்கள், பொதுமக்கள் அதிருப்தியடைந்துள்ளதுடன் குறித்த அரபு மொழியிலான பெயர்ப்பலகையை அவ்விடத்திலிருந்து அகற்றுமாறு கோரி வருகின்றனர்.

தமிழ் மக்கள் பெருமளவில் செறிந்து வசித்துவரும் குறித்த பிரதேசத்தில் இவ்வாறு வெளிநாட்டு நிறுவனத்தின் அரபு மொழி பெயர்ப் பலகையின் அவசியம் ஏன் ஏற்பட்டுள்ளது எனவும் எமது மக்களுக்கு நிதி அனுசரணை என்ற பெயரில் அரபு மொழியை இலங்கைக்குள் எடுத்து வரப்பட்டுள்ளதாகவும் விசனம் தெரிவித்து வருகின்றனர். (2-281)

## வரட்சிக்காலங்களில் நிலத்தடி நீரை பேணுவதற்கு புதிய குளம் அமைப்பு



(கண்டாவளை)

கிளிநொச்சி கொங்காதரன் குடியிருப்புப் பகுதியில் வரட்சிக்காலங்களில் குடிநீர் பெற்றுக்கொள்ளக் கூடிய வகையிலும் நிலத்தடி நீரைப் பேணும் வகையிலும் புதிய குளம் ஒன்று அமைக்கப்பட்டு வருகின்றது.

கிளிநொச்சி அக்கராயன் பிரதேசத்திற்குட்பட்ட கொங்காதரன் குடியிருப்பில் சுமார் 200 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றன.

இந்நிலையில் அக்கராயன் குளத்தின் மேற்பகுதியில் குறித்த குடியிருப்பு அமைந்திருப்பதனால் வருடாந்தம் வரட்சிக்காலங்களில் கிணறுகள் முழுமையாக வற்றி குடிநீர் பெற்றுக் கொள்ளமுடியாத நிலை காணப்படுவதுடன், இந்தப் பிரதேசங்களில் வாழ்கின்ற மக்கள் நடுகை செய்துள்ள பயன்தரு மரங்களும் அழிவடைந்து வருகின்றன.

இக்குடியிருப்பின் மேற்பகுதியில் நீர்நிலை ஒன்றை உருவாக்கி மழை நீரைச் சேகரிப்பதன் மூலம் மேற்படி பிரச்சினைக்குத் தீர்வு காண முடியும் என்று விடுக்கப்பட்ட கோரிக்கைக்கு அமைவாக தற்போது புதிய குளம் ஒன்று அமைக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.(2-315)

## திருமுறிகண்டி ஆலய வளாகம் கிரவல் போடப்பட்டு செப்பனிடல்



(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு மாவட்டத்தில் அண்மைய நாட்களாக பெய்த கனமழை காரணமாக ஏற்பட்ட வெள்ளம்திரு முறிகண்டி பிள்ளையார் ஆலய வளாகத்தில் ஆங்காங்கே தேங்கி நின்றமையால் பல நெருக்கடிகள் ஏற்பட்டன.

புதுக்குடியிருப்பு பிரதேச சபையின் ஆளுகைக்குட்பட்ட குறித்த பகுதி பசுக் குடியிருப்பு பிரதேச யின் தவிசாளர் செ.பிறேமகாந்தின் நேரடி நெறிப்படுத்தலில் செப்பனிடப்பட்டு கொடுக்கப்பட்டுள்ளது.

வெள்ளம் நின்ற தாழ் நிலப் பகுதிகளுக்கு கிரவல் மண் போடப்பட்டு குறித்த பகுதி சீர்செய்யப்பட்டது.

மேலும் இப்பகுதியில் ஒளிராமல் இருந்த சூரிய ஒளி மின் விளக்குகள் திருத்தம் செய்யப்பட்டு ஒளிரவிடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (2)

## விசேட மத்தியஸ்தகுழு அங்கத்தவர்களுக்கு காணி பிணக்குகளை தீர்ப்பதற்கு நியமனம்





(மன்னார்)

மன்னார் மாவட்டத்தில் காணி தொடர்பான பிணக்குகளைத் தீர்ப்பதற்கும் மற்றும் ஆலோசனை வழங்குவதற்கும் விசேட மத்தியஸ்தகுழு அங்கத்தினர்களுக்கு நியமனம் வழங்கி வைக்கப்பட்டுள்ளது.

மன்னார் மாவட்டத்தில் ஏற்படும் காணி தொடர்பான மக்கள் பிரச்சினைகளை கையாள்வதற்காக சிறப்புப் பயிற்சிகளை மேற்கொண்ட குழு அங்கத்தவர்களுக்கான உத்தியோக பூர்வ நியமனங்கள் மற்றும் அவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் மோகன்றாஸ் தலைமையில் நேற்று முன்தினம் பிற்பகல் 3 மணியளவில் மன்னார் மாவட்ட செயலகத்தின் கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

குறித்த நிகழ்வில் மத்தியகஸ்த சபை ஆணைகுழுவின் ஆணையாளர்கள், அதிகாரிகள்,மாவட்ட செயலக உத்தியோகத்தர்கள் மற்றும் 2018 ஆம் ஆண்டுக்கான மன்னார் மாவட்ட ரீதியில் தெரிவு செய்யப்பட்ட மத்தியஸ்த சபையின் அங்கத்தவர்களும் கலந்து கொண்டிருந்தனர்.

இம் மத்தியஸ்தசபையானது இனிவரும் நாட்களில் தொடர்ச்சியாக காணி சம்பந்தப்பட்ட அனைத்து பிணக்குகள் தொடர்பாகவும் செயற்படவுள்ளதுடன் மூன்று வருட காலப்பகுதி வரை இவ் அமைப்பினுடைய செயற்பாட்டுக்காலம் என்பதும் குறிப்பிடத்தக்கது. (2-285)

## பச்சிலைப்பள்ளி பிரதேசசபையினால் ‘பச்சிலை’ நூல் வெளியிடப்பட்டது





(கண்டாவளை)

பச்சிலைப்பள்ளி பிரதேச சபையினால் தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு “பச்சிலை” எனும் நூல் வெளியீட்டு நிகழ்வும் நூலகத்தால் நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கான பரிசளிப்பு விழாவும் அத்துடன் 2018 ஆம் ஆண்டு புலமை பரிசில் பரீட்சையில் சித்திபெற்ற மாணவர்களை மதிப்பளிக்கும் நிகழ்வும் பச்சிலைப் பள்ளி பிரதேச சபை மண்டபத்தில் நடைபெற்றது.

பச்சிலைப்பள்ளி பிரதேச சபையின் தவிசாளர் சுப்பிரமணியம் சுரேன் தலைமையில் அண்மையில் நடைபெற்ற நிகழ்விற்கு பிரதம விருந்தினராக பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் கலந்து சிறப்பித்தார்.

அத்துடன் புலம்பெயர்ந்து வெளிநாடொன்றில் வாழும் அன்பர் ஒருவரால் இவ்வாண்டு புலமை பரிசில் பரீட்சையில் சித்திபெற்ற மாணவர்களுக்கு வங்கிப் புத்தகம் மற்றும் கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன. (2-315)

# முல்லைத்தீவில் நெற்பயிரைத் தாக்கும் கபில, வெண்முதுகு தண்டுத் தத்திகள்

## கட்டுப்பாட்டை மேற்கொள்ளுமாறு விவசாயிகளுக்கு பிரதி மாகாண விவசாயப் பணிப்பாளர் அறிவுறுத்து

(முல்லைத்தீவு)

**முல்லைத்தீவு மாவட்டத்தில் நெற்பயிரைத் தாக்கும் கபில, வெண் முதுகு தண்டுத் தத்திகளின் தாக்கம் அவதானிக்கப்பட்டுள்ளது. இதன் பரம்பல் மிக விரைவாக உள்ளதால் இதனை கட்டுப்படுத்துவதற்கு விவசாயிகள் உடன்நடவடிக்கை எடுக்க வேண்டும். முல்லைத்தீவு மாவட்ட பிரதி மாகாண விவசாயப் பணிப்பாளர் பூ.உகநாதன் தெரிவித்துள்ளார்.**


இது தொடர்பில் அவர் தெரிவிக்கையில்,

வட மாகாணத்தின் பல மாவட்டங்களில் நெற்பயிரில் கபில, வெண் முதுகு தண்டுத் தத்திகளின் தாக்கம் விரைவாக பரவிவருவது கண்டறியப்பட்டு இதனை கட்டுப்படுத்துவதற்காக பல நடவடிக்கைகள் விவசாயத் திணைக்களத்தால் மேற் கொள்ளப்பட்டு வருகின்றது.

உடையார் கட்டு, ஒட்டு சுட்டான், துணுக்காய், ஒலுமடு ஆகிய விவசாயப்போதனாசிரியர் பிரிவுகளில் இத்தத்திகளின் தாக்கம் அவதானிக்கப் பட்டுள்ளது. இத்தத்திகளின் தாக்கத்தை இனங்கண்டு கட்டுப்பாட்டுநடவடிக்கையை மேற் கொள்ளுமாறு விவசாயிகளுக்கு அவர் அறிவுறுத்தியுள்ளார்.

### தாக்குதலின் அறிகுறிகள்

நீர் மட்டத்திற்கு மேலிருக்கும் பயிரின் அடிப்பகுதியில் தத்திகளின் நிறையுடலிகள் மற்றும் அணங்குகள் ஒட்டிக் கொண்டிருக்கும், தாக்கப்பட்ட பயிர்கள் முதலில் மஞ்சள் நிறமாகி பின் முற்றிலும் காய்ந்து "தீய்ந்தமாதிரி" காட்சியளிக்கும். அதிக அளவில் பாதிக்கப்பட்ட பயிர்கள் காய்ந்து வட்டமான திட்டுகளாகக் காணப் படும் மேலும் பயிர்கள் சாய்ந்து விடும்.



### தத்திகளின் தாக்கம் அதிகரிப்பதற்கான காரணம்

தற்போது நிலவும் கால நிலை கபில, வெண் முதுகு தண்டுத் தத்திகளின் பெருக்கத்திற்கு சாதகமாக உள்ளதால் இதன் தாக்கம் அதிகரிக்கின்றது. நெற்செய்கையில் ஆரம்பத்தில் மிதமிஞ்சிய அளவில் பூச்சி நாசினிகளை விசிறுவதால் இயற்கை, எதிரிகள் அழிவடைவதோடு எதிர்ப்புத்தன்மையை காட்டும் அணங்குகள் மிஞ்சியிருப்பதால், அவை விரைவாக பெருகும், விவசாயிகள் பூச்சிநாசினியை பயிரின் மேல்பகுதியில் மட்டும் விசிறுவதால் தத்திகள் காணப்படும், பகுதியில் பூச்சிநாசினி படாமையால் பூச்சிநாசினி விசிறியும் இதனை வெற்றிகரமாக கட்டுப்படுத்த முடியாமல் போகும் தேவைக்கு அதிகமான நைதரசன் உரங்களை பயன் படுத்துவதால் இதன் பெருக்கம் அதிகமாகும், தேவைக்கு அதிகமாக தண்ணீரை தேக்கி வைத்திருப்பதால் இதன் பெருக்கம் அதிகமாகும், பயிர் அடர்த்தி அதிகமாக உள்ள இடங்கள் இத்தத்தியின் பெருக்கத்திற்கு சாதகமாக உள்ளமை.

### கட்டுப்பாட்டு முறைகள்

தேவைக்கு அதிகமான நைதரசன் உரம் பயன்படுத்துதலைத் தவிர்த்தல் வேண்டும், வயலில் தேவைக்கு அதிகமாக தண்ணீர் தேக்கி வைத்தலை தவிர்க்கவும், சரியான பயிர் அடர்த்தியை பேணுதல், வயல்கள் மற்றும் வரம்புகளில் களைகள் இல்லாது அழித்தல், விளக்கு பொறி அமைத்து இத்தத்திகளை கவர்ந்து அழிக்கலாம், வயலில் நன்றாக தண்ணீர் வடிந்த பிறகு பயிரின் அடிப்பகுதியில் படுமாறு சிபாரிசு செய்யப்பட்ட கீழ்குறிப் பிடப்படும் ஏதேனும் ஒரு பூச்சிநாசினியை தெளிக்க வேண்டும்.

| பூச்சி நாசினிகள் | 16 li நீர் தாங்கிக்கு கலக்க வேண்டிய அளவு |
|---|---|
| எத்திபுரோல் 10 SC | 25 ml |
| எதொபென்புரோக்ஸ் 10EC | 25 ml |
| தயாமெத்தோக்சாம் -25%WG | 5g |
| இமிடாகுளோபிரிட் 20 SL | 10 ml |
| தயோசைக்ளாம் 50% SP | 15 ml |
| குளோரன்ரேனிலிபுரோல் 20%+ தயாமெத்தோக்சாம் -20%WG | 5g |

மேலதிக தகவல்களுக்கு அந்தப் பகுதி விவசாயப் போதனாசிரியரை தொடர்பு கொள்ளவும்என அவர் கேட்டுள்ளார். (2)

# சமகால அரசியல் தொடர்பில் மன்னாரில் அவசர கலந்துரையாடல்





(மன்னார்)

மன்னார் மாவட்டத்தில் சமகால அரசியல் தொடர்பான கலந்துரையாடல் கருத்தமர்வு நேற்று முன்தினம் முற்பகல் 10 மணியளவில் மன்னார் மாற்றாற்றல்கொண்டோர் அலுவலக மண்டபத்தில் நடைபெற்றது.

தேசிய சமாதானப் பேரவையின் நிதி அனுசரணையில், மன்னார் மாவட்ட ஒப்புன் நிறுவனத்தின் ஏற்பாட்டில் சமகால அரசியல் மற்றும் அதன் நிலவரங்கள் தொடர்பிலான கருத்தமர்வு இடம் பெற்றது.

குறித்த கருத்தமர்வில் தேசிய சமாதானப்பேரவையின் ஊடகவியலாளர் உப குழு, பெண்கள் உப குழு, இளைஞர் உப குழு, உள்ளூர் அரசியல்வாதிகள் உபகுழு,மாற்றுத் திறனாளிகள் உப குழு ஆகியவற்றின் பிரதிநிதிகள் கலந்து கொண்டிருந்தனர்.

தற்போதைய சூழலில் நாட்டில் உள்ள அரசியல் குழப்ப சூழ்நிலைகள், சட்டச் செயற்பாடுகள், யாப்பு-19ஆம் சட்ட சீர்திருத்தம் , ஜனாதிபதியின் அதிகாரங்கள் போன்றவை பற்றி தெளிவாக கலந்தாலோசிக்கப்பட்டது.

கருத்தமர்வின் போது தற்போது இலங்கை பாராளுமன்றத்தில் இடம்பெற்று வருகின்ற பல்வேறு அரசியல் பிரச்சினைகள் மற்றும் நாட்டில் ஏற்பட்டுள்ள அரசியல் மாற்றங்கள் தொடர்பாகவும் விரிவாக கலந்துரையாடப்பட்டது.

குறித்த கருத்தமர்விற்கு வளவாளராக சட்டத்தரணி வில்பட் அர்ஜீன் மற்றும் ஒப்பின் நிறுவனத்தின் அதிகாரிகள், தேசிய சமாதான பேரவையின் மன்னார் அதிகாரிகள் பலரும் கலந்து சிறப்பித்தனர். (2-285)

வன்னி வலம்

# மன்னாரில் பண்டிகைக்கால வியாபாரங்களை மேற்கொள்ள 298 தற்காலிக வியாபார நிலையங்களுக்கு இடம் ஒதுக்கீடு

## நகர சபை செயலாளர் தெரிவிப்பு



(மன்னார்)

எதிர்வரும் நத்தார், புது வருட பண்டிகைக்கால வியாபாரங்களை மேற்கொள்ள இம்முறை மன்னார் நகர சபை பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் 298 தற்காலிக வியாபார நிலையங்கள் அமைக்க இடம் அடையாளப் படுத்தப்பட்டுள்ளதாக மன்னார் நகர சபையின் செயலாளர் எக்ஸ். எல். றெனால்ட் தெரிவித்துள்ளார்.

இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

நத்தார், புது வருட பண்டிகைக்கால வியாபாரங்களை மேற்கொள்ள ஒவ்வொரு வருடமும் டிசெம்பர் மாதம் 20 ஆம் திகதி முதல் 31 ஆம் திகதி வரை தற்காலிக வியாபார நிலையங்களை அமைக்க மன்னார் நகர சபை அனுமதி வழங்கி வருகின்றது.

இம்முறையும் மன்னார் நகர சபை பிரிவில் 298 தற்காலிக வியாபார நிலையங்கள் அமைக்க இடம் அடையாளப்படுத்தப்பட்டுள்ளது.

எதிர்வரும் டிசெம்பர் மாதம் 15 ஆம் திகதியில் இருந்து கேள்விப்படிவங்கள் வழங்கப் பட்டு கேள்வி கோரல் மூலம் இட ஒதுக்கீடுகள் வழங்கப்படவுள்ளன.

ஆகக்குறைந்த கேள்வித் தொகையாக 13 ஆயிரம் ரூபாய் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

கடந்த வருடம் பண்டிகைக் கால வியாபாரத்தின் மூலம் சுமார் 11 மில்லியன் ரூபாய் வருமானம் மன்னார் நகர சபைக்கு கிடைத்துள்ளது.

இம்முறை அதிகரித்த வருமானத்தை மன்னார் நகர சபை பெற்றுக்கொள்ளும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

குறித்த வருமானத்தினூடாக மன்னர் நகர சபை பகுதிகளில் பல்வேறு அபிவிருத்தி பணிகளை முன்னெடுக்க முடியும்.

உள்ளூர் வர்த்தகர்களை பாதிக்காத வகையில் இம்முறையும் பண்டிகைக்கால வியாபார நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (2-285)

# அன்னதான மண்டபத்திற்கு அடிக்கல் நாட்டி வைப்பு



(பனிக்கன்குளம்)

வவுனியா திருநாவற்குளம் சிவன் ஆலயத்திற்கான அன்னதான மடத்திற்கு அடிக் கல் நாட்டும் நிகழ்வு நேற்று முன்தினம் காலை 8.45 மணியளவில் ஆலய நிர்வாகத்தினர் தலைமையில் இடம் பெற்றது.

இந்நிகழ்வில் வவுனியா நகர உப பிதா சு.குமாரசுவாமி, வட்டார நகரசபை உறுப்பினர்களான சு. காண்டீபன், மதியழகன் கலந்துகொண்டு அன்னதான மடத்திற்கான அடிக் கல்லினை நாட்டி வைத்தனர்.

வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் வடக்கு மீள்குடியேற்றப் பிரதி அமைச்சருமான கே. காதர் ம்ஸ்தானின் பிரமாண அடிப்படையிலான ஐந்து இலட்சம் ரூபாவில் ஆரம் பிக்கப்பட்டுள்ள குறித்த அன்னதான மடம் 15 இலட்சம் ரூபா செலவில் அமைக்கப்படவுள்ளது. வட்டார நகரசபை உறுப்பினர்கள், கிராம மக்களின் பங்களிப் புடன் அன்னதான மடம் அமை க்கப்படவுள்ளது. (2-281)

## மரம் நடுகை வாரத்தை முன்னிட்டு

# மாகோகனி மரக்கன்றுகள் கனகராயன் குளத்தில் நாட்டல்

(பனிக்கன்குளம்)

மரம்நடுகை மாதத்தை முன்னிட்டு வவுனியா வடக்கின் கனகராயன்குளம் மையப் பகுதியை அண்டிய ஏ9 வீதியின்ஒரு பக்கமாக மூன்று கிலோ மீற்றர் தூரத்திற்கு மாகோகனி மரக்கன்றுகளை நாட்டும் செயற்றிட்டம் நேற்று முன்தினம் கனகராயன்குளம் பொது நோக்கு மண்டபத்தில் ஆரம்பமானது.



இந் நிகழ்வில் வவுனியா வடக்கு பிரதேசசபை தலைவர் ச. தணிகாசலம் சபை, செயலாளர் க. சத்தியசீலன், பிரதேச சபை உறுப்பினர்கள் ஜெயக்கொடி ஜெயரூபன் , நடராஜா விநாயகமூர்த்தி மற்றும் கனகராயன்குளம் முச்சக்கர வண்டிச்சங்கம் , கமக்கார அமைப்பு, வர்த்தக சங்கம், கிராம அபிவிருத்தி சங்கம் போன்றவற்றின் பிரதிநிதிகள், சமூக அமைப்புக்களின் பிரதிநிதிகள், பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டு வீதியோரங்களில் மரங்களை நாட்டி வைத்தனர். (2-281)

# "சுதந்திர வர்த்தக ஒப்பந்தம், ரூபாவின் வீழ்ச்சிக்கு ஆட்சிப் பொறுப்பேற்றோர் என்ன செய்தார்கள்?"

## ஹர்ஷ டி சில்வா கேள்வி



(கொழும்பு)

ஆட்சிப் பொறுப்பு தம் கையில் கிடைத்தால் சிங்கப்பூர் நாட்டுடனான சுதந்திர வர்த்த ஒப்பந்தத்தை இரத்து செய்வதுடன், ரூபாவின் வீழ்ச்சியை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதாக கூறியவர்கள் இன்று முறையற்ற விதத்தில் ஆட்சி அதிகாரம் கிடைத்தும் எதையும் மேற்கொள்ளாது உள்ளனர் என பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா சாடியுள்ளார்.

மேலும் ஜனநாயகம் பற்றி பெருமையாக பேசுபவர்கள் பாராளுமன்றத்தில் ஜனநாயகத்திற்கு எதிராக அநாகரிகமாக நடந்து கொள்கின்றனர்.

பெரும்பான்மை இருப்பதாக குறிப்பிடுபவர்கள் தாராளமாக அதனை நிரூபிக்கலாம் அதனை விடுத்து வெறுமனமே எம்மை விமர்சிக்க வேண்டாம் எனவும் அவர் தெரிவித்தார். (இ-7)

# காட்டு யானை தாக்குதலில் இரு சிறுமிகள் உயிரிழப்பு

(மஹியங்கனை)

மஹியங்கனை. மாபகடவெவ பகுதியில் காட்டு யானையொன்றின் தாக்குதலுக்கு இலக்காகி இரு சிறுமிகள் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நேற்று முன்தினம் வியாழக்கிழமை இரவு இடம்பெற்ற இச்சம்பவத்தில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 9 மற்றும் 11 வயதுடைய இரு சிறுமிகளே இவ்வாறு உயிரிழந்துள்ளனர். மேலும் இச் சிறுமிகள் வசித்து வந்த வீட்டை நேற்று முன்தினம் இரவு, காட்டு யானையொன்று தாக்கியுள்ளது.

இதன் போதே சிறுமிகள் தாக்குதலுக்கு உள்ளாகி உயிரிழந்துள்ளனர்.

இந்நிலையில் சம்பவம் தொடர்பாக மஹியங்கனை பொலிஸார் மேலதிக விசாரணையை மேற்கொண்டு வருகின்றனர். (இ-7)

# விவசாயத் திணைக்களங்களில் 70வீத வெற்றிடங்கள் உள்ளன

## பிரதியமைச்சர் அங்கஜன் தகவல்

(சாவகச்சேரி)

விவசாய அமைச்சுத்திணைக்களங்களில் தற்போது முப்பது வீத ஆளணியினரே உள்ளனர். 70வீத வெற்றிடங்கள் காணப்படுகின்றன. எமது இளைஞர்களிடத்தில் அதற்கான தகுதி இல்லை.

ஆகவே இளைஞர்கள் க.பொ.த. சாதாரண தரத்துடன் நின்று விடாது தொழிற் கல்விகளைப் பயின்று வெற்றிடங்களுக்குத் தகுதியானவர்கள் ஆக வேண்டும் என விவசாய பிரதி அமைச்சர் அங்கஜன் இராமநாதன் தெரிவித்துள்ளார்.

தென்மராட்சி புத்தூர்ச் சந்திப் பகுதியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்திருந்தார். அவா் மேலும் தெரிவிக்கையில்

வடக்கு, கிழக்கு விவசாயிகளின் குறைகளைக் கண்டு நிவர்த்தி செய்ய வேண்டும் என்பதே எனக்கு ஜனாதிபதி தந்த பொறுப்பு. அதேவேளை விவசாயிகளின் குறைகளை அறிக்கையாக ஒப்படைக்க வேண்டிய பொறுப்பினை விவசாய அமைச்சர் மகிந்த அமரவீர எனக்குத் தந்துள்ளார்.

விவசாய உற்பத்தியில் எமது மாகாணம் பின்தங்க காரணம் என்ன என்பதைக் கண்டறிந்து ஏனைய மாகாணங்களைப் போல் எமது வடக்கு, கிழக்கு மாகாணங்களைக் கொண்டுவர வேண்டும். அதற்காகவே வடக்கு கிழக்கில் துரித மீள் எழுச்சித் திட்டம் கொண்டுவரப்பட்டுள்ளது.

அடுத்த வருடம் 3000 மில்லியன் ரூபாய் வடக்கு, கிழக்கு விவசாய மீள் எழுச்சிக்கென ஒதுக்கப்பட்டுள்ளது. இவ்வருடத்திற்கு 600 மில்லியன் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. இந்தத் திட்டத்தை வடக்கிற்கு கொண்டு வர மாவட்ட விவசாயப் பணிப்பாளர் மற்றும் கமநல அபிவிருத்தி திணைக்கள உதவி ஆணையாளர் ஆகியோர் பூரண ஒத்துழைப்பினை வழங்கியுள்ளனர்.

பழச்செய்கைகளுக்கான வலயங்களை ஊக்குவிக்க ஏற்பாடு செய்துள்ளோம். அந்த வகையில் தேசிக் கன்றுகளை கட்டம் கட்டமாக வழங்கி வருகிறோம். அத்துடன் வடக்கில் விவசாயக் கிணறுகளுக்கென நூறு மில்லியன் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

மேலும் விவசாய உபகரணங்கள், விவசாய உற்பத்திக்கான நவீன மயப்படுத்தல்கள் ஆகிய செயற்றிட்டங்கள் விவசாய அமைச்சினால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அடுத்த வருடத்திற்கான மூவாயிரம் மில்லியன் விவசாய ஒதுக்கீடு அமைச்சரவைக் கூட்டத்திலும், வரவு செலவுத் திட்டத்திலும் ஏற்றுக்கொள்ளப்படும் என்ற உத்தரவாதத்தினைத் தந்துள்ளனர்.

இந் நிதியில் விவசாய வீதிகள், விவசாய உட்கட்டமைப்பு வசதிகள், விவசாய அமைப்புக்களை வலுப்படுத்தல். இளைஞர்களை விவசாயத்தில் ஈடுபடுத்தல் ஆகிய திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன. விவசாயத்தை முன்னேற்றுவதன் ஊடாகவே பொருளாதாரத்தை உயர்த்த முடியும். நாம் அபிவிருத்தியில் ஒன்றிணைய வேண்டும். பொருளாதார ரீதியாக முன்னேறினால் தான் உரிமைகளைப் பெற முடியும்.

எங்கள் இருப்பு முக்கியம். அதற்கு பொருளாதாரம் முக்கியம். பொருளாதாரத்திற்கு விவசாயம் முக்கியம். வடக்கில் 40வீதமானவர்கள் விவசாயத்தினை நம்பியுள்ளனர் என மேலும் அவர் தெரிவித்தார். (இ-30)

# ஹஜ் கோட்டாவினை 5 ஆயிரமாக அதிகரிக்க சவுதி அரசிடம் கோரிக்கை



(கொழும்பு)

இலங்கைக்கு வழங்கப்படுகின்ற 3 ஆயிரம் ஹஜ் கோட்டாவுக்கு மேலதிகமாக மேலும் 2 ஆயிரம் ஹஜ் கோட்டாக்களை வழங்குமாறு சவுதி அரேபியா அரசிடம் முஸ்லிம் அலுவல்களுக்குப் பொறுப்பான நகர திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சர் கலாநிதி எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லா கோரிக்கை விடுத்துள்ளார்.

சவுதி அரேபிய அரசின் ஹஜ் மற்றும் உம்றாவுக்கு பொறுப்பான அமைச்சர் டாக்டர் சாலிஹ் பின் முஹம்மத் தாஹிர் பன்தன் மற்றும் தெற்காசிய நாடுகளுக்கான ஹஜ் விவகாரங்களுக்கு பொறுப்பான நிறுவனத்தின் பணிப்பாளர் டாக்டர் ரபத் இப்னு இஸ்மாஈல் இப்ராஹீம் பதர் ஆகியோரிடம் அமைச்சர் ஹிஸ்புல்லா மேற்படி கோரிக்கையை விடுத்துள்ளார்.

இலங்கைக்கான சவுதி தூதுவர் அப்துல் நாஸர் எச். அல் ஹரிதி ஊடாக குறித்த கடிதம் சவுதி அரசுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

அதில், ஹஜ் கடமை நிறைவேற்றுவதற்காக இலங்கையில் 13 ஆயிரத்திற்கு மேற்பட்ட விண்ணப்பங்கள் வருடா வருடம் கிடைக்கப் பெறுவதாக சுட்டிக்காட்டி இவ்வருடம் 5 ஆயிரம் ஹஜ் கோட்டாக்களை இலங்கைக்கு வழங்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களத்துக்குப் பொறுப்பான அமைச்சர் ஹிஸ்புல்லா சவுதி அரேபியாவை தளமாகக் கொண்டு இயங்கும் உலக முஸ்லிம் லீக்கின் (ராபிததுல் ஆலம் அல் இஸ்லாமி) அதியுயர் சபை உறுப்பினராக செயற்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# ஆலயத்தில் திடீர் சனநெரிசல் 14 பேர் வைத்தியசாலையில்

(ஏறாவூர்)

வரலாற்று சிறப்பு மிக்க மட்டக்களப்பு களுதாவளை சுயம்புலிங்க பிள்ளையார் ஆலயத்தில் இடம்பெற்ற விழாவில் சன நெரிசலில் சிக்குண்டு 14 பேர் காயமடைந்த நிலையில் களுவாஞ்சிகுடி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

வரலாற்று சிறப்பு மிக்க மட்டக்களப்பு களுதாவளை சுயம்புலிங்க பிள்ளையார் ஆலயத்தில் ஏகாதச ருத்ர வேள்வியின் இறுதி நாள் நிகழ்வில் இலட்சக்கணக்கானோர் கலந்துகொண்டனர்.

உலக நன்மைக்காகவும் நாட்டில் நீடித்த அமைதியும் சமாதானம் நிலவவும் கிழக்கிலங்கையின் வரலாற்று சிறப்பு மிக்க மட்டக்களப்பு களுதாவளை சுயம்புலிங்க பிள்ளையார் ஆலயத்தில் கடந்த திங்கட்கிழமை ஏகாதச ருத்ர வேள்வி ஆரம்பமாகி நடைபெற்று வந்தது.

நேற்று முன்தினம் இறுதித் தினம் என்ற காரணத்தினால் நாட்டின் பல பாகங்களிலும் இருந்து இலட்சக்கணக்கான அடியார்கள் பங்கு கொண்டிருந்தனர்.

பூஜைகள் நிறைவுபெற்று அடியார்களுக்கு பூஜையில் வைக்கப்பட்ட ருத்ராட்சம் வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டிருந்த நிலையில் அதனைப் பெறுவதற்கு பெரும் சன நெருக்கடியேற்பட்டது.

இதன்போது 14 பேர் காயமடைந்த நிலையில் ஆலயத்தில் அமைக்கப்பட்டிருந்த மருத்துவ முகாமில் முதலுதவிகள் வழங்கப்பட்டு களுவாஞ்சிகுடி ஆதார வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

இவர்களில் நான்கு பேர் மேலதிக சிகிச்சைகளுக்காக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக வைத்திய சாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (இ-7)



கொடிகாமம் திருநாவுக்கரசு ஆரம்ப வித்தியாலயத்தின் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தி பெற்ற மாணவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு கடந்த 19 ஆம் திகதி பாடசாலை பிரதான மண்டபத்தில் நடைபெற்றது. அதிபர் திருமதி பு.மங்களேஸ்வரன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக தென்மராட்சி கல்வி வலய (நிர்வாகம்) பிரதிக் கல்விப் பணிப்பாளர் த.கிருபாகரனும் சிறப்பு விருந்தினராக ஆரம்பப்பிரிவு சேவைக்கால ஆசிரிய ஆலோசகர் ந.திருவாசகனும் மக்கள் வங்கி கொடிகாமக்கிளை உதவி முகாமையாளர் சரணனும் கொடிகாமம் மத்திய கல்லூரி அதிபர் க.மங்களேஸ்வரன், பிரதி அதிபர் வை.மனோகரன், கொடிகாமம் திருநாவுக்கரசு மகா வித்தியாலய ஓய்வு நிலை அதிபர் த.கந்தையா மற்றும் பெற்றோர்கள், பழைய மாணவர்கள் உட்பட பலரும் கலந்து கொண்டனர். (படங்கள்:-சுபேசன், விஜயவாசன்)

# வர்த்தகர்களுக்கு எதிரான 528 வழக்குகளில் 21 இலட்சத்து 11,500 ரூபா அபராதம் விதிப்பு

(யாழ்ப்பாணம்)


யாழ்.மாவட்டத்தில் கடந்த ஜனவரி மாதம் தொடக்கம் செப்டெம்பர் மாதம் வரையான 9 மாதங்களில் மட்டும் வர்த்தகர்களுக்கு எதிராக 528 வழக்குகள் பதிவு செய்யப்பட்டு அவர்களிடமிருந்து 21 இலட்சத்து 11 ஆயிரத்து 500 ரூபாய் தண்டப் பணமாக அறவிடப்பட்டுள்ளதாக பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபையின் வடக்கு மாகாண உதவிப்பணிப்பாளர் இணைப் பதிகாரி ஏ.எல்.ஜவ்பர் ஷாவிக் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

யாழ்.மாவட்டத்திலுள்ள வர்த்தக நிலையங்களில் பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபை அதிகாரிகள் சோதனை நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர். அந்த வகையில் கடந்த ஜனவரி மாதம் தொடக்கம் செப்டெம்பர் மாதம் வரை யாழ்.மாவட்டம் முழுவதும் 518 திடீர் சுற்றிவளைப்பு மேற்கொள்ளப்பட்டு யாழ்.மாவட்டத்திலுள்ள வர்த்தக நிலையங்களில் காலாவதியான பொருட்கள் விற்பனை செய்தமை, விலைப் பட்டியல் காட்சிப்படுத்தாமை, உற்பத்திப் பொருட்கள் தொடர்பான விபரங்கள் உரிய முறையில் காட்சிப்படுத்தாமை, குறிப்பிட்ட தொகைக்கு அதிகமாக பொரு ட்கள் விற்பனை செய்தமை போன்ற குற்றங்களுக்கு வார்த்தகர்களுக்கு எதிராக அந்தந்த நீதிமன்றங்களில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

அந்தவகையில் குறித்த வர்த்தக நிலைய உரிமையாளர்கள் தமது குற்றங்களை ஒப்புக்கொண்டதற்கமைய கடந்த ஜனவரி மாதம் 67 வழக்குகள் பதிவு செய்யப்பட்டு ஒரு இலட்சத்து 62 ஆயிரம் ரூபாவும் பெப்ரவரி மாதம் 41 வழக்குகள் பதிவு செய்யப்பட்டு 2 இலட்சத்து 41 ஆயிரத்து 500 ரூபாவும் மார்ச் மாதம் 55 வழக்குகள் பதிவு செய்யப்பட்டு 2 இலட்சத்து 26 ஆயிரம் ரூபாவும் ஏப்ரல் மாதம் 31 வழக்குகள் பதிவு செய்யப்பட்டு ஒரு இலட்சத்து 39 ஆயிரம் ரூபாவும் மே மாதம் 62 வழக்குகள் பதிவு செய்யப்பட்டு 2 இலட்சத்து 13 ஆயிரம் ரூபாவும் ஜூன் மாதம் 38 வழக்குகள் பதிவு செய்யப்பட்டு 2 இலட் சத்து 54 ஆயிரம் ரூபாவும் ஜூலை மாதம் 57 வழக்குகள் பதிவு செய்யப்பட்டு 2 இலட்சத்து 3 ஆயிரம் ரூபாவும் ஓகஸ்ட் மாதம் 78 வழக்குகள் பதிவு செய்யப்பட்டு 2 இலட்சத்து 58 ஆயிரத்து 500 ரூபாவும் செப்டெம்பர் மாதம் 99 வழக்குகள் பதிவுசெய்யப்பட்டு 4 இலட்சத்து 14 ஆயிரத்து 500 ரூபாவும் நீதிமன்றங்களால் தண்டப்பணமாக அறவிடப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (இ-9)

# 'தமிழன் எதிரி தமிழன்' நூல் வெளியீடு






(சென்னை)

உணர்ச்சிக் கவிஞர் காசி ஆனந்தன் எழுதிய நூல்கள் வெளியீட்டு விழா நேற்று முன்தினம் மாலை சென்னை சந்திரசேகர் மண்டபத்தில் நடைபெற்றது.


இந்திய ஈழத்தமிழர் நட்புறவு மையத்தின் ஏற்பாட்டில் தமிழர் தேசிய இயக்கத்தின் தலைவர் பழ நெடுமாறன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் கவிஞர் காசி ஆனந்தன் எழுதிய "தமிழன் எதிரி தமிழன்" மற்றும் "பெண்பா" ஆகிய இரு நூல்கள் மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தலைவர் வைகோவால் வெளியிட்டு வைக்கப்பட்டது.

இந்நிகழ்வில், இயக்குநர் புகழேந்தி தங்கராசு, அமுதசுரபி ஆசிரியர் திருப்பூர் கிருஷ்ணன், இயக்குநர் கௌதமன், சட்டத்தரணி த. பானுமதி. எழுத்தாளர் சூரியதீபன் உள்ளிட்டோர் கருத்துரை வழங்கியிருந்தனர். (இ-9)

# நிலையியற் குழுவில் ஈ.பி.டி.பிக்கும் இடம்

## அமைச்சர் டக்ளஸ் கோரிக்கை

(கொழும்பு)



அமைக்கப்படவுள்ள நிலையியற்குழுவில் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சிக்கும் தனித்துவமான கட்சி என்ற ரீதியில் இடம் வேண்டுமென அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கோரிக்கை விடுத்துள்ளார்.

நேற்று நாடாளுமன்றம் கூடியபோது நிலையியற் குழு அமைப்பது தொடர்பான விவாதம் நடைபெற்றது. இதன்போது உரையாற்றுகையிலேயே அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா இவ்வாறு வலியுறுத்தினார்.

மேலும் நான் ஆளும் கட்சியில் இருக்கின்றேனோ அல்லது எதிர்க்கட்சியில் இருக்கின்றேனோ என்பது தனிப்பட்ட தீர்மானமாகும்.

அந்தவகையில் அமைக்கப்படவுள்ள நிலையியற் குழுவில் எமது கட்சிக்கும் இடம் வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார். (இ-7)

# கல்வி டிப்ளோமா பாடநெறிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன

(கொழும்பு)

2019 ஆம் கல்வி ஆண்டில் நடைபெறும் ஒருவருட கால பட்டப்பின் கல்வி டிப்ளோமா (உள்வாரி) முழுநேரம் பாடநெறியைத் தொடர்வதற்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இப்பாடநெறி கொழும்பு பேராதனை ரஜரட்ட மற்றும் யாழ்.பல்கலைக்கழகங்களில் நடைபெறும். பின்வரும் தகைமைகளை உடையவர்கள் விண்ணப்பிக்கலாம். அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தின் அல்லது பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு/உயர் கல்வி அமைச்சினால் அனுமதிக்கப்பட்ட பிறிதொரு நிறுவனத்தின் பட்டதாரியாகவோ அல்லது அதற்குச் சமனான மட்டத்தில் கவனத்திலெடுக்கப்படும் வேறு தகைமையைப் பூர்த்தி செய்தல் மற்றும் விண்ணப்பதாரி இலங்கை பிரஜையாக இருத்தல் வேண்டும். மற்றும் விண்ணப்பதாரி விண்ணப்பங்களைப் பொறுப்பேற்கும் இறுதித் தினத்தன்று 50 வயதிற்கு மேற்பட்டாதவராக இருத்தல் வேண்டும். நேற்று வெள்ளிக்கிழமை வெளியான வர்த்தமானிப் பத்திரிகையின் படி விண்ணப்பப்பத்திரங்களை 2018.12.21 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் பரீட்சை ஆணையாளர் நாயகம் பரீட்சை திணைக்களம் மதிப்பீடு மற்றும் கணிப்பீட்டுச் சேவை, பெலவத்தை பத்திரமுல்லை எனும் முகவரிக்குக் கிடைக்கக் கூடியவாறு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும் என கல்வி மற்றும் உயர் கல்வி அமைச்சு அறிவித்துள்ளது. (இ-4)

# காபந்து அரசு பலத்தின் கீழ் தேர்தல் நடைபெற முடியாது

## மனோ கணேசன் உறுதி

(கொழும்பு)



தங்கத்தை உரை கல்லால் உரசிப்பார்ப்பது போல், மக்களிடம் சென்று வாக்குக் கோரி, ஒக்டோபர் 26 இற்கு பிறகு தான் மேற்கொண்ட நடவடிக்கைகள் சரியானவையா, அவற்றுக்கு இந்நாட்டு மக்கள் அங்கீகாரம் வழங்குகிறார்களா? எனத் தேடிப்பார்க்கக்கூடிய சந்தர்ப்பம் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு இப்போது கிடைத்திருக்கிறது என தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் தெரிவித்தார்.

அலரிமாளிகை வளாகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடக சந்திப்பின் போது உரையாற்றிய மனோ கணேசன் மேலும் தெரிவிக்கையில்,

இந்நாட்டின் அரசியல மைப்பிலுள்ளகாலஅட்டவணையின் படி பதவியில் இருக்கும் ஜனாதிபதி, பதவிக்கு வந்து நான்கு வருடங்களுக்குப் பிறகு முன் கூட்டியே ஒரு தேர்தலை நடத்தி, புதிய மக்கள் ஆணையைக் கோரும்உரிமையைக் கொண்டுள்ளார்.

ஆகவே ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, ஜனவரியில்ஜனாதிபதித் தேர்தலை நடத்தி புதிய மக்கள் ஆணையை தேடிப்பெற வேண்டும்.

நாம் பொதுத் தேர்தலுக்குத் தயாராக இருக்கிறோம். ஆனால், அது நியாயமாக நடைபெற வேண்டும். இவர்களின் காபந்து அரசு பலத்தின் கீழ் அது நடைபெற முடியாது. அதற்கு ஒரு கால அட்டவணை உள்ளது. பொதுவாக எல்லா தேர்தலுக்கும் தேர்தல் கால அட்டவணைகள் உள்ளன. அதன்படி பார்த்தால், பொதுத் தேர்தலை விட, ஜனாதிபதித் தேர்தலுக்குத்தான் இன்று இடம் இருக்கிறது. ஆகவே முடியுமானால், அவசியமானால், ஜனாதிபதித் தேர்தலுக்குப் போங்கள்.

அரசியலமைப்பு தெளிவாக இருக்கிறது. ஜனாதிபதி அவர்களே, உங்களுக்குத் தேர்தலுக்குப் போக முடியும். உங்கள் செயற்பாடுகள் பற்றி உங்களுக்கு அந்தளவு நம்பிக்கை இருந்தால், மக்களிடம் போய் புதிய மக்கள் ஆணையைக் கோருங்கள். உங்கள் செயன்முறைகள் திருப்தியானவைகளாக இருந்தால், மக்கள் உங்களுக்கு வாக்கு அளிக்கட்டும். அதை நாம் ஏற்றுக்கொள்வோம்.

பாடசாலை வகுப்புக்களில் நமது மாணவர்களின் நடத்தை புத்தகம் இருப் பதைப் போன்று, நீங்களும் உங்கள் நடத்தையால் அதிக புள்ளிகள் பெற்றால் தான் உங்களால் அவர்களதுடிக் கட்டை வாங்கி போட்டியிட முடியும். மிளகாய் நிறமான சிவப்பு நிறத்துடன் கூடிய நட்சத்திர புள்ளிகளை நீங்கள் பெற்றால் தான், உங்களுக்கு நியம னம் தருவதாக அவர்கள் கூறுகிறார்கள்.

உங்களுக்கு ஏன் இந்தச் சிரமம்? அடுத்த வருட ஆரம்பத்தில் நீங்களே போட்டியிட வழி வகுக்கும் ஜனாதிபதித் தேர்தல் வருகிறது. உங்களால் முன்கூட்டியே ஜனாதிபதித்தேர்தலை நடத்துவிக்க முடியும். நாங்களும் போட்டியிடுவோம். உங்களுக்கு நாம் உதவியும் செய்யலாம். எமது தரப்பில் யார் போட்டியிடுவார் என நாம் இப்போது சொல்ல முடியாது. எம் மனதில் இரண்டொருவர் இருக்கிறார்கள் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# சந்தையடிப் பகுதியில் வீதி விளக்கு பொருத்த பொதுமக்கள் கோரிக்கை

(வரணி)

வரணியில் அமைந்துள்ள சந்தைப்பகுதியானது கடைத் தெருக்கள் அதிகம் உள்ள பகுதியாக விளங்குவதோடு மக்கள் நடமாட்டம் அதிகம் உள்ள. பகுதியுமாகும். இப் பிரதேசத்தில் வீதி விளக்குகள் பொருத்தப்படாமையால் இரவு வேளைகளில் இருள்சூழ்ந்து காணப்படுவதுடன் மக்கள் கடைகளுக்கு வந்து பொருட்களை வாங்குவதற்கும் அச்சப்படுகின்றனர். மேலும் இவ்வீதியால் பயணிக்கும் மக்களும் அச்சத்துடனேயே பயணிக்க வேண்டியுள்ளது.

ஏற்கனவே சாவகச்சேரி பிரதேச சபையினால் முக்கிய இடங்களில் பொருத்தப்பட்டிருந்த வீதி விளக்குகளும் பழுதடைந்து எரியாமல் மூன்று வருடங்களுக்கு மேலாகக் காணப்படுகின்றன.

ஆகவே சந்தையடிப் பகுதியில் வீதி மின் விளக்குகளைப் பொருத்துவதற்கு பிரதேச சபையினர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என வியாபாரிகள்,பொதுமக்கள் வேண்டுகோள் விடுப்பதுடன் ஏற்கனவே பழுதடைந்து எரியாமல் இருக்கும்தெரு விளக்குகளையும் பழுது பார்த்து எரிய விட வேண்டும் என வேண்டுகோள் விடுத்துள்ளனர். (இ-103)







விவசாய அமைச்சின் மாவட்ட விவசாய பணிப்பாளர் அலுவலகத்தின் ஏற்பாட்டில் வடக்கின் துரித விவசாய மீள் எழுச்சித் திட்டத்தில் "நாம் பயிரிட்டு நாம் உண்போம்" எனும் தொனிப் பொருளுக்கமைய தேசிமரக்கன்றுகள் வழங்கும் நிகழ்வு சாவகச்சேரி புத்தூர்ச்சந்தி கமநல சேவைகள் நிலையத்தில் மாவட்ட விவசாயப் பணிப்பாளர் தலைமையில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை நடைபெற்றது. தென்மராட்சி பிரதேசத்தின் 60 கிராம உத்தியோகத்தர் பிரிவைச் சேர்ந்த பயனாளிகளுக்கு 10 தேசிமரக்கன்றுகள் வீதம் வழங்கப்பட்டன. தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு விவசாயக் கிணறு அமைப்பதற்கான காசோலை, வெங்காயக் கொட்டில் அமைப்பதற்கான காசோலை, தேசிமரக்கன்றுகள் என்பவற்றை பிரதம விருந்தினராகக் கலந்து சிறப்பித்த பிரதி விவசாய அமைச்சர் அங்கஜன் இராமநாதன் பயனாளிகளுக்கு வழங்கினார். (படங்கள்:-விஜயவாசன்)

நிர்பயா கொலை வழக்கு

# குற்றவாளிகளின் மரண தண்டனையை நிறைவேற்றக்கோரி மனுத்தாக்கல்

(டில்லி)

நிர்பயா வழக்கில் 4 குற்றவாளிகளின் மரண தண்டனையை உடனே நிறைவேற்றக்கோரி உச்ச நீதிமன்றத்தில் நேற்று முன் தினம் வியாழக்கிழமை பொதுநல மனுத்தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

கடந்த 2012ஆம் ஆண்டு டிசெம்பர் 16ஆம் திகதி இரவு டில்லியில் ஓடும் பேருந்தில் 'நிர்பயா' (கற்பனை பெயர்) என்ற மருத்துவ மாணவி, பலாத்காரம் செய்



யப்பட்டு கொல்லப்பட்டார். இதுதொடர்பாக முகேஷ், பவன் குப்தா, வினய் சர்மா, அக்ஷய் குமார் சிங் போன்ற 4 பேருக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டு, கடந்த ஜூலை 9 ஆம் திகதி உச்ச நீதிமன்றம் உறுதி செய்தது.

இந்நிலையில் குறித்த 4 பேருக்கும் இன்னும் மரண தண்டனை நிறைவேற்றப் படவில்லை என்றும் இதனை உடனே நிறைவேற்ற உத்தரவிடக்கோரியும் அலக் அலோக் ஸ்ரீவஸ்தவா என்ற சட்டத்தரணி உச்ச நீதிமன்றத்தில் நேற்று பொதுநல மனுத்தாக்கல் செய்துள்ளார். (4-7)

# பாகிஸ்தானில் குண்டு வெ
# 25 பேர் உடல் சிதறி உயி
## 35 இற்கும் மேற்பட்டோ

(பெஷாவர்)

பாகிஸ்தானில் வடமேற்குப் பகுதியில் நேற்று நிகழ்ந்த குண்டுவெடிப்பில் 25 பேர் கொல்லப்பட்டனர். 35 பேர் காயமடைந்தனர்.

பாகிஸ்தானின் கைபர் பக்துன்க்வா மாகாணத்தில் பழங்குடியின மாவட்டமான அவுராக்சாய் மாவட்டத்தில் சிறுபான்மை ஷியா முஸ்லிம்கள் அதிகம் வசிக்கின்றனர். இங்குள்ள கலயா பகுதியில் உள்ள ஷியா வழிபாட்டுத் தலத்தை ஒட்டியுள்ள மார்க்கெட்டில் நேற்றுக் காலை வழக்கம்போல் ஏராளமான மக்கள் பொருட்கள் வாங்க திரண்டிருந்தனர்.

அப்போது, அங்கு மறைத்து வைக்கப்பட்டிருந்த சக்தி வாய்ந்த வெடிகுண்டு வெடித்துச் சிதறியது. இதில் பொது மக்கள் நாலாபுறமும் தூக்கி வீசப்பட்டனர். அருகில் உள்ள கடைகளும் சேதமடைந்தன. பொலிஸார் சம்பவ இடத்திற்கு வந்து மீட்பு பணியில் ஈடுபட்டனர். இந்த தாக்குதலில் 25 பேர் உயிரிழந்தனர், 35 இற்கும் மேற்பட்

# ஜமால் கசோக்கி விவகாரம்; சவுதிக்கு ட்ரம்ப் மீண்டும் ஆதரவு

ஜமால் கொலையில் சவுதி இளவரசர் உத்தரவிட்டார் என்பதற்கான ஆதாரங்கள் எதுவும் இல்லை சி.ஐ.ஏ. தெரிவித்துள்ளதாக அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

புளோரிடாவில் ஊடவியலாளர்களை அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் வியாழக்கிழமை சந்தித்தார். அதில் சவுதி ஊடவியலாளர் ஜமால் கொல்லப்பட்டது குறித்து அமெரிக்காவின் மத்தியப் புலனாய்வுத் துறை என்ன நிலைப்பாடு வைத்துள்ளது என்ற கேள்வியை ஊடகவியலாளர்கள் எழுப்பினர்.

இதற்கு ட்ரம்ப் பதிலளிக்கும்போது, "ஜமாலை சவுதி இளவரசர் முகமது பின் சல்மான்தான் கொல்ல உத்தரவிட்டதாகக் தெரிவித்தார் என்பதற்கான ஆதாரங்கள் இதுவரை கிடைக்கவில்லை.



இது குறித்த இறுதி முடிவுக்கு அவர்கள் இன்னும் வரவில்லை. இந்தக் குற்றச்சாட்டை பிறரால் நிரூபிக்க முடியுமா? என்று எனக்குத் தெரியவில்லை" என்று தெரிவித்தார்.

தொடர்ந்து உலக நாடுகளிடையே சவுதி இளவரசர் சல்மானுக்கு எதிராக விமர்சனங்கள் எழ, மீண்டும் தனது ஆதரவை சவுதிக்கு அளித்திருக்கிறார் ட்ரம்ப் என ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

முன்னதாக, சவுதி அரசாங்கத்தின் கடும் விமர்சகரான பத்திரிகையாளர் கஷோக்கி, கடந்த ஒக்.2 ஆம் திகதி துருக்கி பெண்ணைத் திருமணம் செய்து கொள்வதற்காக ஆவணங்களை எடுத்துவர துருக்கியில் உள்ள இஸ்தான்புல் சென்றபோது அங்கு சவுதி தூதரகத்தில் கொல்லப்பட்டார்.

இவருக்கும் சவுதியைச் சேர்ந்த 15 பேருக்கும் ஏற்பட்ட மோதலில் கஷோக்கி இறந்ததாக சவுதி கூறிவந்தது. இது வேண்டுமென்றே செய்யப்பட்ட படுகொலை, என்றும் இக்கொலையில் இளவசர் முகமது பின் சல்மானுக்குத் தொடர்பு உள்ளதாகவும் கூறி ஆதாரங்களை வெளியிட்டதுடன் குற்றவாளிகளை தங்களிடம் ஒப்படைக்குமாறு துருக்கி குற்றம் சாட்டியது. ஆனால் சவுதி இந்தக் குற்றச்சாட்டை மறுத்தது. இந்தக் கொலை வழக்கில் சவுதி இளவரசர் முகமது பின் சல்மானுக்கு எந்தவிதத் தொடர்பும் இல்லை என்று சவுதி கூறி வருகிறது.

இந்நிலையில் ஜமால் கொலை வழக்கில் சவுதியால் கைது செய்யப்பட்டுள்ள அந்நாட்டைச் சேர்ந்த 5 பேருக்கு தூக்குத் தண்டனை விதிக்க சவுதி ஆலோசித்து வருவது குறிப்பிடத்தக்கது. (4-7)

# உச்ச நீதிமன்ற நீதி
# ட்ரம்ப் டுவிட்டரில்

(வோஷிங்டன்)

அமெரிக்காவில் உச்ச நீதிமன்றம் தலைமை நீதிபதியுடன் ஜனாதிபதி ட்ரம்ப் மோதியிருப்பது பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

மத்திய அமெரிக்க நாடுகளைச் சேர்ந்த ஆயிரக்கணக்கான அகதிகள், அமெரிக்காவினுள் குடியேறும் நோக்கத்தில் அமெரிக்க-மெக்சிகோ எல்லை நோக்கி வந்தனர். இதை ஜனாதிபதி ட்ரம்ப் சாடினார். படையெடுப்பு என வர்ணித்தார்.

அத்துடன், அமெரிக்காவின் தென்பகுதியின் வழியாக நுழைகிற அகதிகள் யாரும் அமெரிக்காவினுள் தஞ்சம் கேட்க முடியாது என நிர்வாக உத்தரவு ஒன்றை பிறப்பித்தார்.

இதை சட்டவிரோதம் என மனித உரிமை அமைப்புகள் விமர்சித்தன. அத்துடன் சான்பிரான்சிஸ்கோ மாவட்ட நீதிமன்றில் வழக்கு தொடர்ந்தன. அந்த வழக்கை நீதிபதி ஜோன் டைகர் விசாரித்து, ட்ரம்ப் பிறப்பித்த உத்தரவுக்கு இடைக்காலத் தடை விதித்தார்.


இந்த உத்தரவு, ட்ரம்ப் நிர்வாகத்துக்கு பின்னடைவாக அமைந்துள்ளது.

இந்த உத்தரவால் ட்ரம்ப் அதிர்ச்சி அடைந்தார். நீதிபதியின் உத்தரவு அவமானகரமானது என விமர்சித்தார்.

அதுமட்டுமின்றி, "இது ஒபாமா நீதிபதி வழங்கிய உத்தரவு. இது இனியொரு முறை நடக்காது. இந்த நீதிமன்றத்தை நெருக்கமான நீதிமன்றம் என்று கருதி அத்தனை பேரும் ஓடிச்சென்று வழக்குகள் போட விடக்கூடாது. இந்த வழக்கைப் பொறுத்தமட்டில் நாம் உச்ச நீதிமன்றுக்கு போய் வெற்றி பெறுவோம்" எனத் தெரிவித்தார்.

இந்த நீதிபதி, ஒபாமா ஜனாதிபதியாக இருந்த போது நியமிக்கப்பட்டவர்

# ஆஸியில் கடும் புழுதிப் புயல்





(சிட்னி)

அவுஸ்திரேலியாவில்தென் கிழக்கு பகுதி முழுமைக்கும் நேற்று முன்தினம் கடுமையான புழுதிப்புயல் வீசியது. இதன் காரண மாக வானம் ஓரேஞ்சு நிற மாக மாறியது.

அவுஸ்திரேலியாவில் நாட்டின் தென் கிழக்கு பகுதி முழுமைக்கும் நேற்று முன்தினம் கடுமையான புழுதிப்புயல் வீசியது. இதன் காரணமாக வானம் ஓரேஞ் நிறமாக மாறியது.

500 கி.மீ. பரப்புக்கு இந்தப் புழுதிப்புயல் வீசியது. சிட்னி தொடங்கி பல நகரங்கள் புழுதிப்புயலால் பாதிக்கப்பட்டன. காற்றின் தரம் மிகக்குறைவானதாக மாறியதால் பொதுமக்கள் இடையே அச்சம் ஏற்பட்டது.


நியூ சவுத் வேல்ஸ் மாகாணம் உட்பட பல பகுதிகளில் வீதிகளே கண்களுக்குத் தெரியவில்லை. உலர்ந்து போன மண்ணைக் கிளப்பி கடுமையான காற்று வீசியதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

கடந்த ஓகஸ்ட் மாதம் முதல் அந்த நாடு கடுமையான வரட்சியின் பிடியில் சிக்கியுள்ள நிலையில், இந்தப் புழுதிப்புயல் வீசியதால் வீதிப் போக்குவரத்து பாதித்தது. விமானப் போக்குவரத்தும் பாதித்ததாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

புழுதிப்புயலால் பலரும் பாதிக்கப்பட்டனர். அவர்கள் சுவாசிப்பதில் சிரமப்பட்டனர். பலருக்கு மூச்சுத் திணறல் ஏற்பட்டது. உடனடியாக அதிகாரிகள், பொதுமக்களுக்கு எச்சரிக்கையுடன் கூடிய வேண்டுகோள் விடுத்தனர்.

யாரும் வீட்டை விட்டு வெளியே வர வேண்டாம், குறிப்பாக குழந்தைகளை வெளியே விடாதீர்கள், சுவாசப் பிரச்சினை உடைய முதியவர்களையும் வெளியே அனுப்ப வேண்டாம் என அவர்கள் தெரிவித்தனர். (4-7)

# சீனத்தூதரகம் மீது தாக்குதல்; இரண்டு பொலிஸார் உயிரிழப்பு



(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தானில் நேற்றையதினம் சீன தூதரகத்தின் மீது துப்பாக்கி ஏந்திய நபர்கள் தாக்குதல் நடத்தியதில் இரண்டு பொலிஸார் கொல்லப்பட்டனர்.

இதுகுறித்து பாகிஸ்தான் பொலிஸார் தரப்பில், "பாகிஸ்தானில் தெற்கு கடலோர நகரமான கராச்சியில் உள்ள சீனத் தூதரகத்தின் மீது நேற்று வெள்ளிக்கிழமை அடையாளம் தெரியாத நபர்கள் துப்பாக்கிச் சூடு நடத்தினர். இதில் பொலிஸாருக்கும், அந்த நபர்களுக்கும் இடையே கடும் சண்டை நிலவியது.

இதில் இரண்டு பொலிஸார் கொல்லப்பட்டனர். இந்த கடும் சண்டை காரணமாக அப்பகுதியில் கடும் புகை பரவியது. தொடர்ந்து சண்டை நிலவி வருகிறது" என்று கூறப்பட்டுள்ளது.

மேலும், துப்பாக்கிச் சூடு நடத்திய நபர்கள் நுழைவாயில் வழியாக சீன தூதரகத்தின் உள்ளே நுழைய முயன்றனர் என்றும், நிலைமையை கட்டுக்குள் கொண்டு வர பொலிஸார் தீவிரமாக முயற்சி செய்து வருவதாகவும் பாதுகாப்புப் படை அதிகாரியான அஷ்பக் தெரிவித்தார். அண்மைக் காலமாக பாகிஸ்தானில் அயல் நாட்டு தூதரக அலுவலகங்களை குறிவைத்து தாக்குதல் நடந்து வருவது குறிப்பிடத்தக்கது. (4-7)

# அமெரிக்கா வ
# ஆறு கிளர்ச்சி

(மொகடிஷு)

அமெரிக்க இராணுவத்தினர் நடத்திய வான் வெளித் தாக்குதலில் சோமாலியாவில் போராட்டத்தில் ஈடுபட்டு வரும் 6 அல் ஷபாப் கிளர்ச்சியாளர்கள் பலியாகினர்.

சோமாலியாவில் அல் ஷபாப் கிளர்ச்சியாளர்கள் அடிக்கடி தாக்குதல்களை மேற்கொண்டு வருகின்றனர். அல் ஷபாப் கிளர்ச்சியாளர்கள் செயற்பாடுகள் சோமாலியாவில் ஓரளவுக்கு கட்டுப்படுத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிற போதிலும் தாக்குதல்கள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.

கிளர்ச்சியாளர்களை கட்டுப்படுத்த சோமாலிய



# வெளிநாடு

## ...வெடிப்பு! ...யிரிழப்பு!
### ...டார் படுகாயம்

டோர் பலத்த காயங்களுடன் மீட்கப்பட்டு வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர். தாக்குதல் நடந்த பகுதியை பொலிஸார் சுற்றி வளைத்து தங்கள் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்தனர். மேலும் ஏதேனும் வெடிகுண்டுகள் பதுக்கி வைக்கப்பட்டுள்ளதா? என சோதனை நடத்தப்பட்டது.

முன்னதாக சீன தூதரகத்தில் நேற்றுக் காலை பயங்கரவாதிகள் தாக்குதல் நடத்தியதில் 2 பொலிஸார் உயிரிழந்தனர்.

இந்த தாக்குதல்களை அடுத்து கைபர் பக்துன்க்வா மாகாணத்தில் பாதுகாப்பு படையினர் உஷார்படுத்தப்பட்டுள்ளனர்.

இந்த தாக்குதலுக்கு மாகாண முதல்வர் மெஹ்மூத்கான் கண்டனம் தெரிவித்துள்ளார்.

இந்த மாகாணம் அமைதியாக இருப்பது எதிரிகளுக்கு பிடிக்கவில்லை என அவர் தெரிவித்துள்ளார். (4-7)

## சீனாவில் கார் மோதி விபத்து 5 பாடசாலை மாணவர்கள் பலி!
### 18 பேர் படுகாயம்



(பீஜிங்)

சீனாவில் வீதியைக் கடந்த மாணவர்கள் மீது அதிவேகமாக வந்த கார் மோதியதில் 5 மாணவர்கள் பலியாகினர்.

சீனாவின் வடகிழக்கு மாகாணமான லியோனிங் மாகாணத்தின் ஹுலுடாவ் நகரில் உள்ள துவக்கப் பள்ளிக்கு நேற்று முன்தினம் காலை வழக்கம்போல் மாணவர்கள் வந்துகொண்டிருந்தனர். அப்போது, எதிர் முனையில் இருந்து வந்த மாணவர்கள், பாடசாலை வருவதற்காக வீதியைக் கடந்து வந்தனர்.

மாணவர்கள் வரிசையாக வீதியைக் கடந்த போது, அந்த வழியாக அதிவேகமாக வந்த கார் மாணவர்கள் மீது மோதியது. இதில் தூக்கி வீசப்பட்ட 5 மாண வர்கள் சம்பவ இடத்திலேயே உயி ரிழந்தனர். 18 பேர் பலத்த காயங்களுடன் மீட்கப்பட்டு வைத்தியசாலையில் சேர் க்கப்பட்டனர்.

தவறான பாதையில் கார் வந்ததால் மாணவர்கள் மீது மோதியதாக தெரிவிக்கப்படுகின்றது. இது தொடர்பாக கார் சாரதியை பொலிஸார் கைது செய்து விசாரணை நடத்தி வருகின்றனர். (4-7)

## ...நீதிபதியுடன் ...ல் மோதல்

...பதால் அவரை ஜனாதிபதி ட்ரம்ப், 'ஒபாமா ...பதி' என முத்திரை குத்தியது சர்ச்சையை ...படுத்தியது.

இது தொடர்பாக அமெரிக்க உச்ச நீதிமன்றம் ...லைமை நீதிபதி ஜான் ராபர்ட்ஸ் கருத்தை ...பல பத்திரிகை நிறுவனம் அறிய விரும்பியது.

"ஜனநாயக கட்சியைச் சேர்ந்த ஜனாதிபதிக ...ல் நியமனம் செய்யப்பட்ட நீதிபதிகள், ...போது குடியரசுக்கட்சியின் ஜனாதிபதிக்கு ...ராக செயற்படுவதாக ட்ரம்ப் புகார் கூறுகி ...ரே?" என கேள்வி எழுப்பியது.

அதற்கு தலைமை நீதிபதி ஜான் ராபர்ட்ஸ், ...பாமா நீதிபதிகள் அல்லது ட்ரம்ப் நீதிபதிகள், ... நீதிபதிகள் அல்லது கிளிண்டன் நீதிபதிகள் ... நாங்கள் கொண்டிருக்கவில்லை. நாங் ... பெற்றிருப்பது அர்ப்பணிப்பு உணர்வு மிக்க ...ிச்சிறப்பான நீதிபதிகளைத்தான். அவர்கள் ...கள் முன்னிலையில் ஆஜர் ஆகிறவர்க ...க்கு சமநீதி வழங்குவதற்கு தங்களால் ...ந்தவரையில் சிறப்பாகச் செயற்படுகிறார் ..." என பதில் அளித்தார்.

மேலும் அவர் தெரிவிக்கும்போது, "சுதந்தி ...ான நீதித்துறைக்காக நாம் நன்றி சொல்ல ...ண்டும்" என்றும் தெரிவித்துள்ளார். உச்ச ...மன்றம் தலைமை நீதிபதி ஜான் ராபர்ட்சின் ...த கருத்து, ட்ரம்புக்கு பதிலடியாக அமைந்தது.

ஜனாதிபதி ட்ரம்ப், புளோரிடாவுக்கு விடுமு ...க்கு சென்றுள்ளார். அவர் தலைமை நீதிபதி ...ன் ராபர்ட்சின் கருத்தை அறிந்து அவருடன் ...ருக்கு நேர் மோதுகிற வகையில், அவர் கரு ...தை மறுத்து டுவிட்டரில் பதில் வெளியிட்டார்.

அதில் அவர், "மன்னிக்கவும், தலைமை நீதிபதி ஜான் ராபர்ட்ஸ், உண்மையிலேயே நீங்கள் ஒபாமா நீதிபதிகளை கொண்டிருக்கிறீர்கள். அவர்களின்பார்வை, தங்கள் பாதுகாப்புக்காக குற்றம்சாட்டுகிற மக்களின் பார்வையில் இருந்து மாறுபட்டதாக அமைந்துள்ளது" என தெரிவித்துள்ளார்.

மேலும், "சட்டவிரோதமாக நுழைகிற அகதிகள் விவகாரம் உட்பட எனது சர்ச்சைக்குரிய, முன்னுரிமை வழக்குகள் பலவற்றில் நீதிமன்றம் உத்தரவுகள் தலைகீழாகி விட்டன. அப்படி எத்தனை ஆகி இருக்கின்றன என்பதை எண்ணிப்பாருங்கள். அவை அதிர்ச்சி அளிக்கின்றன" எனவும் ட்ரம்ப் டுவிட்டரில் பதிவிட்டுள்ளார்.

அமெரிக்காவில் ஜனாதிபதியும் உச்ச நீதிமன்றம் தலைமை நீதிபதியும் இப்படி நேருக்கு நேர் வார்த்தை மோதலில் ஈடுபட்டிருப்பது ஒரு அபூர்வ நிகழ்வாகப் பார்க்கப்படுகிறது. அது மட்டுமின்றி பரபரப்பையும் ஏற்படுத்தியுள்ளது.

ட்ரம்ப் மோதியுள்ள உச்ச நீதிமன்றம் தலைமை நீதிபதி ஜான் ராபர்ட்ஸ், ட்ரம்ப் சார்ந்துள்ள குடியரசுக்கட்சி ஜனாதிபதி ஜோர்ஜ் டபிள்யூ புஷ்சால் 2005 ஆம் ஆண்டு நியமிக்கப்பட்டவர் என்பது குறிப்பிடத்தக்கது. (4-7)

## லிபியாவில் இருந்து வெளியேறிய 174 சட்டவிரோத குடியேறிகள்




(டிரிபோலி)

லிபியாவில் இருந்து சட்டவிரோதமாக குடியேறியவர்களில் 174 பேர் தாங்களாக முன்வந்து சொந்த நாடான நைஜீரியாவுக்கு திரும்பி உள்ளனர்.

வறுமை, உள்நாட்டு சண்டை உள்ளிட்ட பல்வேறு காரணங்களால் ஆபிரிக்க நாடுகளில் இருந்து ஐரோப்பிய நாடுகளுக்கு மக்கள் சட்டவிரோதமாக குடிபெயர்ந்து வருகின்றனர். இதற்காக ஆபத்தான மத்திய தரைக்கடல் பகுதியில் படகுகளில் பயணிக்கும்போது விபத்தில் சிக்குகின்றனர். அவர்களை லிபிய பாதுகாப்புப் படையினர் மீட்டு தங்கள் பகுதிக்குக் கொண்டு வந்து முகாம்களில் தங்க வைக்கின்றனர்.

அதேபோல் சட்டவிரோதமாக ஊடுருவ முயற்சிக்கும் நபர்களும் கைது செய்யப்பட்டு முகாம்களில் தங்க வைக்கப்படுகின்றனர். இதனால், லிபியாவில் உள்ள தடுப்பு முகாம்கள் மற்றும் நிவாரண முகாம்கள் நிரம்பி வழிந்தன.

இதையடுத்து, லிபியாவில் சிக்கித் தவிக்கும் சட்டவிரோத குடியேறிகள் தாமாக முன்வந்து சொந்த நாடுகளுக்கு திரும்புவதற்கான ஏற்பாடுகளை குடியேறிகள் தொடர்பான சர்வதேச அமைப்பு (ஐஓஎம்) செய்தது. இதன் மூலம் பலர் தங்கள் சொந்த நாடுகளுக்கு திரும்பி உள்ளனர்.

அவ்வகையில் நேற்று முன்தினம் நைஜிரியாவைச் சேர்ந்த 174 பேர் லிபியாவில் இருந்து தாயகம் திரும்பியதாக ஐஓஎம் தெரிவித்துள்ளது. இந்த ஆண்டில் மட்டும் இதுவரை 32 நாடுகளைச் சேர்ந்த 15 ஆயிரத்துக்கும் மேற்பட்ட குடியேறிகள் ஐரோப்பிய ஒன்றிய அறக்கட்டளை நிதி உதவி பெற்று தங்கள் நாடுகளுக்கு திரும்பி உள்ளதாகவும் ஐஓஎம் கூறியுள்ளது. இதேபோல் கடந்த ஆண்டு 19 ஆயிரத்துக்கும் மேற்பட்ட குடியேறிகளை அவர்களின் நாடுகளுக்கு ஐஓஎம் திருப்பி அனுப்பி உள்ளது குறிப்பிடத்தக்கது. (4-7)

## ...வான்வெளித் தாக்குதல்! ...சியாளர்கள் உயிரிழப்பு!





...ரசு தீவிர நடவடிக்கைகளில் இறங் ...புள்ளது. இந்த வேட்டையில் அமெ ...க இராணுவமும் இணைந்துள்ளது.

இந்நிலையில், சோமாலியா நாட் ...ன் ஹுரதரே பகுதியில் பதுங்கி ...ருந்த கிளர்ச்சியாளர்கள் மீது ...மெரிக்கா நேற்று முன்தினம் வான் ...வளித் தாக்குதல் நடத்தியது.

முதல் கட்ட தாக்குதலில் சுமார் 6 கிளர்ச்சியாளர்கள் பலியாகினர். மேலும் பலர் படுகாயம் அடைந்தனர். தொடர்ந்து நடத்திய தாக்குதலில் கிளர்ச்சியாளர்கள் பதுக்கி வைத்திருந்த ஆயுதங்கள் அழிக்கப்பட்டன என அமெரிக்க இராணுவம் தெரிவித்துள்ளது. (4-7)

## ஐ.எஸ்.தீவிரவாதிகள் 13 பேர் சுட்டுக்கொலை



எகிப்தில் பாதுகாப்புப் படையினர் நடத்திய தாக்குதலில் ஐ.எஸ்.தீவிரவாதிகள் 13 பேர் பலியாகியுள்ளனர்.

இதுகுறித்து எகிப்தின் உள்துறை அமைச்சகம், "எகிப்தின் வடக்குப் பகுதியின் சினாய் தீபகற்பத்தில் உள்ள பெனின்சுலா பகுதியில் 3 கட்டடங்களில் ஐ.எஸ்.தீவிரவாதிகள் பதுங்கி இருப்பதாகத் தகவல் கிடைத்தது.

இதனைத் தொடர்ந்து அங்கு விரைந்த பாதுகாப்புப் படை வீரர்கள் தீவிரவாதிகளுக்கு எதிராக துப்பாகிச் சூட்டில் ஈடுபட்டனர். இதில் 13 ஐ.எஸ்.தீவிரவாதிகள் சுட்டுக் கொல்லப்பட்டனர்" என்று கூறப்பட்டுள்ளது.

இந்தத் துப்பாக்கிச் சூட்டில் பாதுகாப்புப் படையினர் யாருக்கும் எந்தக் காயமும் உயிர்ச்சேதமும் ஏற்படவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இஸ்லாமியக் கிளர்ச்சியைத் தொடர்ந்து சந்தித்து வரும் நாடு எகிப்து. இதனால் அங்கு சினாய் தீபகற்பத்தின் வழியாக ஐ.எஸ். தீவிரவாதிகள் தாக்குதலைத் தொடர்ந்து நடத்தி வருகின்றனர்.

இந்தத் தாக்குதல்களால் 2013இல் இருந்து நூற்றுக் கணக்கான பாதுகாப்புப் படையினர் பலியாகியுள்ளனர். கெய்ரோவில் உள்ள தேவாலயங்கள் அவர்களின் முக்கிய இலக்காக உள்ளன.

அதற்குப் பதிலடி அளிக்கும் வகையில் தற்போது பாதுகாப்புப் படையினர் தாக்குதல் நடத்தியுள்ளனர். (4-7)

# கடன் மீளச் செலுத்தும் ஆற்றலில் எந்தவித பாதிப்பும் ஏற்படவில்லை

## பேராசிரியர் சமரக்கோன் கூறுகிறார்

(கொழும்பு)

நாட்டில் ஏற்பட்டுள்ள அரசியல் மாற்றம் காரணமாக பொருளாதாரத்துக்கு எந்தவிதப் பாதிப்புமில்லை எனவும் நாட்டின் கடன் மீளச் செலுத்தும் ஆற்றலில் வீழ்ச்சி நிலை ஏற்படவில்லை எனவும் சர்வதேசத்துக்கு மீளச் செலுத்த வேண்டிய கடன்தொகையை விடவும் மேலதிக நிதி அரசிடம் உள்ளது எனவும் பொருளாதாரச் சபையின் செயலாளர் நாயகம் பேராசிரியர் லலித் சமரக்கோன் தெரிவித்தார்.

2019 ஆம் ஆண்டு 1500 மில்லியன் டொலரைக் கடனாகச் செலுத்த வேண்டி நிலை காணப்படுகின்றது. ஆனால் இந்தக் கடனைச் செலுத்துவதற்கு மேலதிகமான நிதியைப் பெறும் நடவடிக்கைகள் அரசாங்கத்தால் மேற்கொள்ளப்பட்டுள்ளது எனவும் அவர் தெரிவித்தார்.

2018 நவம்பர் (20) மாதம் வெளியிடப்பட்ட மூடியின் முதலீட்டாளர்கள் சேவை நிறுவனத்தின் (Moody's investors service) (Moody's) இறுதித் தர மதிப்பீடு. B1 (மறை) இலிருந்து B2 (நிலையான) என தரப்படுத்தப்பட்டுள்ளமை (B1 (மறை) - B2 (நிலையானது) அடிப்படையற்றது எனவும் அந்நிறுவனத்தினால் இறுதியாக வெளியிடப்பட்ட 2018 ஜுலை மாத தரப்படுத்தலுக்குப் பின்னர் இலங்கையின் பொருளாதார நிலை பின்னடைவோ அல்லது பொருளாதார கொள்கைகளில் பாதிப்புக்களோ ஏற்படவில்லை எனவும் தெரிவித்தார்.

அரசாங்கத்தகவல்திணைக்களத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற வாராந்த அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர் மாநாட்டிலேயே அவர் இதனைத் தெரிவித்தார். (இ-7)



# சம்பந்தன், அநுரகுமார ரணிலுக்கு ஆதரவு ஏன்?

## விமல் வீரவன்ச விளக்கம்





(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சி எதிர்க்கட்சியானால் தனது பதவி பறிபோகும் என்ற பயத்தாலேயே இரா.சம்பந்தன் ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவு வழங்குகின்றார். அதேபோன்று சம்பந்தன் எதிர்க்கட்சித் தலைவர் பதவியை இழந்தால் தன்னுடைய பதவி பறிபோகும் என்பதாலேயே அநுரகுமார திஸாநாயக்கவும் ரணிலுக்கு ஆதரவாக செயற்பட்டு வருகின்றார் என பாராளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச தெரிவித்தார்.

ரணில் விக்கிரமசிங்கவின் கைகளில் நாட்டை ஒப்படைத்தால் இன்னும் சில காலங்களில் நாடே இல்லாமற்போய்விடும். எனவே நாட்டைக் காப்பாற்ற அனைவரும் ஒன்றிணைய வேண்டும் எனவும் தெரிவித்தார்.

பிரதமர் அலுவலகத்தில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்ட போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-7)

# இடைக்கால வரவு - செலவு திட்டம் சிறுபிள்ளைத்தனமான செயற்பாடு



## றிசாத் பதியுதீன் விமர்சனம்

பிரதமர் மற்றும் நிதியமைச்சர் என்று தன்னைக் குறிப்பிட்டுக் கொள்ளும் மகிந்த ராஜபக்ஷவால் கொண்டுவரப்பட்ட இடைக்கால வரவு-செலவுத் திட்டத்திற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளமை சிறுப்பிள்ளைத்தனமான விடயமாகும் என பாராளுமன்ற உறுப்பினர் றிசாத் பதியுதீன் தெரிவித்தார்.

அரசியலமைப்பின் பிரகாரம் தற்போது நாட்டில் பிரதமரோ, அவர் தலைமையிலான அமைச்சரவையோ கிடையாது.

ஆளும் தரப்பினர் என்று தம்மைக் குறிப்பிட்டுக் கொள்பவர்கள் முதலில் பெரும்பான்மையை நிரூபிக்க வேண்டும் எனவும் தெரிவித்தார்.

கொழும்பு ஊடகம் ஒன்றுக்கு அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-7)

## கணனிக் கொள்வனவுக்கு நிதி

யாழ்.குடத்தனை கரையூர் றோ.க.த.க. பாடசாலைக்கு அ.செல்வதாஸால் கணனிக் கொள்வனவிற்காக ரூபாய் ஒரு இலட்சம் ரூபாய் நன்கொடையாக வழங்கப்பட்டுள்ளது.

பொற்பதி சமூக சேவை ஒன்றியத்தின் வேண்டுகோளுக்கு அமைவாகவே பாடசாலைக்குக் கணனி கொள்வனவிற்காக இந்த நிதி வழங்கப்பட்டதென்பது குறிப்பிடத்தக்கது. (இ-64)



# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## அறிவுரை

ஓர் இளம் தாய்! அறிஞர் அரிஸ்டோட்டிலை தேடிப் போனார்! அவரிடம் போய் ''ஐயா! என் பிள்ளைக்கு நல்ல பழக்க வழக்கங்களைக் கற்றுக் கொடுக்க வேண்டும் என்று ஆசைப்படுகிறேன். எந்த வயதில் ஆரம்பிக்கலாம்'' என்று கேட்டார்! அதற்கு அரிஸ்டோட்டில் 'குழந்தையின் வயது என்னம்மா' என்று கேட்டார்.

அந்த அம்மா ஐந்து வயது என்று சொன்னார்! அரிஸ்டோட்டில் உடனே "ஐயையோ! உடனே வீட்டுக்குப் போங்க அம்மா... ஏற்கனவே ஐந்து வருடம் தாமதப்படுத்திவிட்டாய்! அப்படி என்றாராம். இதில் இருந்து என்ன தெரிகிறது என்றால்...

நல்ல பழக்க வழக்கங்களைக் கற்றுக் கொடுப்பதற்கு நேரம், காலம் பார்த்துக் கொண்டிருக்கக் கூடாது! எனக்குத் தெரிந்த ஒருத்தர்... அவருக்கு ஒரே ஒரு பிள்ளை! என்னங்க பிள்ளையைப் பள்ளிக்கூடத்தில் சேர்க்க வேண்டாமா என்று கேட்டால் அவர் என்ன சொல்வார் தெரியுமா?

'அதற்கு எல்லாம் ஒரு நேரம், காலம் வரவேண்டாமா...அதுதான் பார்த்துக் கொண்டிருக்கிறேன்' என்பார்! இவர் எல்லாம் எந்தக் காலத்தில் பிள்ளையைப் படிக்க வைக்கப் போகிறார்? நல்ல பழக்கத்தைச் சொல்லிக் கொடுக்க வேண்டும் என்றால்... முதலில் அதற்கு நாம தயாராகி இருக்க வேண்டும். ஒரு பெரியவரிடம் ஒரு அம்மா தன்னுடைய பிள்ளையைத் தூக்கிக்கொண்டு வந்தார்!

'என்னம்மா விடயம்?' என்று கேட்டார். அந்தப் பெரியவர். "ஐயா! என் பிள்ளை எப்ப பார்த்தாலும் சீனியையே சாப்பிட்டுக்கொண்டிருக்கிறான். சொன்னால் கேட்க மாட்டேன் என்கிறான். நீங்கள் தான் அவனுக்கு நல்ல புத்தி சொல்ல வேண்டும்!" என்றார் அந்த அம்மா!

அந்தப் பெரியவர் பார்த்தார். கொஞ்ச நேரம் யோசித்தார். "சரிம்மா! நீ போயிட்டு ஒரு வாரம் கழித்து வா!" என்று சொல்லி அனுப்பி விட்டார். இந்த அம்மா குழந்தையைத் தூக்கிக்கொண்டு போய் விட்டார்! ஒரு வாரம் கழித்து மறுபடியும் வந்தார் குழந்தையுடன்! அந்தப் பெரியவர் அந்தக் குழந்தையிடம் சீனி சாப்பிடக் கூடாது என்று சொல்லி நிறைய புத்திமதி எல்லாம் சொன்னார்.

"சரிம்மா... இனிமேல் இவன் சீனி சாப்பிடமாட்டான் போயிட்டு வா!" என்று சொன்னார். இந்த நேரத்தில் அந்த அம்மாவுக்கு ஒரு சந்தேகம்! கொஞ்சம் தயங்கிக்கொண்டே நின்று கொண்டிருந்தார்! 'என்னம்மா யோசிக்கிறாய்?' என்று கேட்டார் பெரியவர். ''ம்... ஒன்றும் இல்லை! இப்போது நீங்கள் சொன்ன இந்தப் புத்திமதியை ஒரு வாரத்துக்கு முன்னாடியே சொல்லியிருக்கலாமே! என்னத்துக்கு ஒரு வாரம் கழித்து மறுபடியும் என்னை வரச்சொன்னீர்கள்?'' என்று கேட்டார் அந்த அம்மா.

இதற்கு அந்தப் பெரியவர், "அப்படி இல்லையம்மா! ஒரு வாரம் கழித்து உன்னை வரச் சொன்னதற்குக் காரணம் இருக்கு! போன தடவை நீ வந்த போதே இந்தப் புத்திமதியை நான் ஏன் சொல்லவில்லை என்றால்... அதுவரைக்கும் நானும் அதிகமாகச் சீனி சாப்பிட்டுக் கொண்டிருந்தேன். இந்த ஒரு வார காலத்தில்தான் கொஞ்சம் கொஞ்சமாக விட்டுவிட்டேன்!

இப்போது நான் சீனி சாப்பிடுவதில்லை! இப்போது தான் அந்த அறிவுரை சொல்லக் கூடிய தகுதி எனக்கு வந்திருக்கு! அதனால்தான் அப்படிச் சொன்னேன்!'' என்றார். இந்தக் காலத்தில் 'அட்வைஸ்' சொல்வதற்கு ஆள் நிறை இருக்கிறார்கள்! ஆனால் 'அறிவுரை' செய்யும் தகுதி அவர்களுக்கு இருக்க வேண்டும். பல 'அறிவுரை'' களுக்கு மரியாதை இல்லாமல் போவதே இந்தத் தகராறுகளாலேதான்.

அஹிம்சையைப் பற்றிப் பாடம் நடத்தப் போகிறேன் என்று வந்தார் ஒருத்தர்! அவருக்கு என்ன தொழில் என்று விசாரித்தார்கள். 'கசாப்பு'க்கடை வைத்திருக்கிறாராம்.

# நாடாளுமன்றத்தில் தொடரும் குழப்பம்

## 180 ரூபாவை தாண்டிய டொலரின் பெறுமதி

(கொழும்பு)

**இலங்கை வரலாற்றில் முதல் முறையாக மிக மோசமான பெறுமதியை இலங்கை ரூபாய் எட்டியுள்ளது. இலங்கை மத்திய வங்கி நேற்று வெளியிட்ட நாணய மாற்று விகிதத்திற்கு அமைய டொலர் ஒன்றின் விலை நேற்று 180.66 ரூபாயை எட்டியுள்ளது.**

இலங்கையில் அரசியல் நெருக்கடி தீவிரம் அடைந்துள்ள நிலையில், ரூபாவின் பெறுமதி பாரிய வீழ்ச்சியை சந்தித்துள்ளது.

இதன் காரணமாக இலங்கையின் பொருளாதாரம் பாரிய பின்னடைவுகளை சந்திக்கும் என துறைசார் நிபுணர்கள் எச்சரித்துள்ளனர். (இ-7)

## சபரிமலை யாத்திரையை அரச அங்கீகாரம் பெற்ற புனித யாத்திரையாக பிரகடனப்படுத்த நடவடிக்கை

(கொழும்பு)

இலங்கை வாழ் இந்துக்களால் பெருவாரியாக பின்பற்றப்படுகின்ற நாடு கடந்த யாத்திரைகளில் முதன்மையாக விளங்குகின்ற சபரிமலை ஐயப்ப யாத்திரையை அரச அங்கீகாரம் பெற்ற புனித யாத்திரையாகப் பிரகடனப்படுத்துவதன் மூலமாக யாத்திரிகர்களுக்கான அங்கீகாரத்தைப் பெற்றுக் கொடுக்க இந்துமத அலுவல்கள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அமைச்சரவைப் பத்திரம் சமர்ப்பித்து நடவடிக்கை எடுத்துள்ளார்.

இது குறித்து மேலதிக நடவடிக்கைகளின் பொருட்டு யாத்திரிகர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளைத் தீர்ப்பது தொடர்பிலும் ஐயப்ப யாத்திரையை தலைமைதாங்கும் குரு சுவாமிகளுடனான கலந்துரையாடலுக்கு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அழைப்பு விடுத்துள்ளார்.

இக் கலந்துரையாடல் எதிர்வரும் 28.11.2018 புதன்கிழமையன்று 248-1/1, காலி வீதி, கொழும்பு-04 இல் அமைந்துள்ள இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் கேட்போர் கூடத்தில் பிற்பகல் 2 மணிக்கு நடைபெறும்.

இக்கலந்துரையாடலில் அனைத்து குருசுவாமிகளும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள் என இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்கள ளப் பணிப்பாளர் அ.உமாமகேஸ்வரன் அறிவித்துள்ளார். (இ-7)

## சபாநாயகருக்கு எதிரான மனுவினை விசாரணைக்கு எடுத்துக்கொள்ளும் திகதி அறிவிப்பு



(கொழும்பு)

கலைக்கப்பட்ட நாடாளுமன்றத்தை மீண்டும் கூட்டுவதற்கு சபாநாயகர் எடுத்த தீர்மானம் சட்டவிரோதமானது என உத்தரவிடக் கோரி தாக்கல் செய்யப்பட்ட மனுவை விசாரணைக்கு எடுத்துக்கொள்ள உயர் நீதிமன்றம் தீர்மானித்துள்ளது.

பிரதம நீதியரசர் நளின் பெரேரா உள்ளிட்ட நீதியரசர்கள் குழாம் நேற்று வெள்ளிக்கிழமை இந்த உத்தரவை பிறப்பித்துள்ளது.

இதற்கமைய குறித்த வழக்கு எதிர்வரும் டிசெம்பர் மாதம் 4ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

ரியல் அட்மிரல் சரத் வீரசேகரவால் தாக்கல் செய்யப்பட்டுள்ள குறித்த மனுவின் பிரதிவாதிகளாக சபாநாயகர், சட்டமா அதிபர் மற்றும் நாடாளுமன்ற செயலாளர் ஆகியோர் பெயரிடப்பட்டுள்ளனர்.

கலைக்கப்பட்ட நாடாளுமன்றத்தை மீண்டும் கூட்டுவதற்கு சபாநாயகர் எடுத்த தீர்மானம் அரசியலமைப்புக்கு முரணான செயற்பாடு என அவர் தனது மனுவில் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## போலி ஆவணங்களைச் சமர்ப்பித்து

## போதைப்பொருள் வியாபாரியின் சகா, சிறையிலிருந்து கடத்தல்

(கொழும்பு)

பிரபல போதைப் பொருள் கடத்தல்காரர்களின் மிக நெருங்கிய சகா என கருதப்படும் ஒருவர், அடையாளம் தெரியாதோரால் சிறைச்சாலையிலிருந்து கடத்திச் செல்லப்பட்டுள்ளார்.

களுத்துறை சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த சுனில் சாந்த எனும் காலியை சேர்ந்த போதைப் பொருள் வர்த்தகரே வேறு ஒரு வழக்கு நடவடிக்கை தொடர்பில் கேகாலைக்கு அழைத்துச்செல்லப்பட்டு பின்னர் கொழும்பில் விளக்கமறியலில் தடுத்து வைக்கப்பட்டிருந்த போது இவ்வாறு கடத்திச் செல்லப்பட்டுள்ளதாக சிறைச்சாலையின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

சிறைச்சாலை பேருந்தை ஒத்த பேருந்து ஒன்றில் வந்து, களுத்துறை சிறை அதிகாரிகளைப் போன்று போலி ஆவணங்களை சமர்ப்பித்து குறித்த போதைப் பொருள் வர்த்தகரைக் கடத்திச் சென்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

எவ்வாறாயினும் இது தொடர்பில் சிறைச்சாலைகள் திணைக்களத்தின் உதவி அத்தியட்சகர் ஒருவரின் கீழ் சிறப்பு விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும், அந்த விசாரணைகளின் ஆரம்ப கட்டம் பூர்த்தியானதும் கடத்தப்பட்ட முறைமை தொடர்பில் தனக்கு உத்தியோகபூர்வமாக கூறக் கூடியதாக இருக்கும் எனவும் சிறைச்சாலைகள் ஊடகப் பேச்சாளர் சிறை ஆணையாளர் துஷார உப்புல்தெனிய தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் கேகாலை சிறை அதிகாரிகளிடம் களுத்துறை சிறை அதிகாரிகளிடமும் விசாரணை நடத்தப்பட்டு வாக்கு மூலம் பெறப்பட்டதாகவும் கொழும்பு விளக்கமறியல் சிறை அதிகாரிகளிடம் விசாரணை நடத்த எதிர்பார்ப்பதாகவும் அதன் பின்னர் குறித்த கைதி கடத்தப்பட்ட முறைமை தொடர்பில் உறுதியாக தெரிவிக்க முடியுமாக இருக்கும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## பொய் பிரதமர் மகிந்தவுக்கு ஏற்பட்டுள்ள பரிதாப நிலை

## முன்னாள் அமைச்சர் சாகல சாடல்



(கொழும்பு)

நாடாளுமன்ற வாக்கெடுப்பில் மூன்று முறை தோற்றுப்போன பொய் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ என முன்னாள் அமைச்சர் சாகல ரட்நாயக்க தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற வாக்கெடுப்பில் 121 பெரும்பான்மை வாக்குகளால் வெற்றி பெற்ற களிப்பில் இந்தக் கருத்தை சாகல தனது டுவிட்டரில் பதிவிட்டுள்ளார்.

நாடாளுமன்றத்தில் ஒரே மாதத்தில் மூன்று முறை நடத்தப்பட்ட வாக்கெடுப்பில் தோற்றுப்போன பொய் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ என பதிவிட்டுள்ளார்.

நாடாளுமன்றத்தில் அண்மையில் மகிந்தவுக்கு எதிராக கொண்டுவரப்பட்ட பிரேரணை மீது மூன்று முறை வாக்கெடுப்பு நடத்தப்பட்டது.

மூன்று முறையும் மகிந்த தோற்றுப்போயிருந்தார். ஆனால் இந்த தோல்வியை மகிந்த அணியும் ஜனாதிபதியும் ஏற்றுக்கொள்ளவில்லை.

அந்த வகையில் நேற்று நாடாளுமன்ற தெரிவுக்குழு தொடர்பாக வாக்கெடுப்பு ஒன்று நடத்தப்பட்டது. இதிலும் 121 பெரும்பான்மை வாக்குகளால் ஐ.தே.கட்சி, த.தே.கூட்டமைப்பு, ஜே.வி.பி, த.மு.கூட்டணி ஆகியன வெற்றி பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## பிரதமருக்கான நிதி ஒதுக்கீட்டை தடுக்கும் பிரேரணை எதிரணியின் வீண் முயற்சி



(கொழும்பு)

இவ்வருடத்திற்கான அரசாங்கத்தின் அனைத்துச் செலவுகள் மற்றும் ஏனைய செலவினங்களுக்காக நிதி ஒதுக்குதலுக்கு பாராளுமன்றத்தின் அங்கீகாரம் கிடைத்துள்ள நிலையில் பிரதமரின் செலவினங்களை நிறுத்துவதற்கு யோசனைகள் முன்வைக்கப்பட்டாலும் அது செல்லுபடியற்றது என நிதி மற்றும் பொருளாதார அமைச்சின் செயலாளர் எஸ். ஆர். ஆட்டிகல தெரிவித்தார்.

எவ்வாறாயினும் பிரதமரின் செலவினங்களை இடைநிறுத்துவதற்கோ அல்லது அதனை இல்லாதொழிப்பதற்கோ யோசனைகள் முன்வைக்கப்பட்டால் அது தொடர்பில் முறைமையொன்று உள்ளதாகவும் அதற்கு போதுமான காலமெடுக்குமென்றும் அவர் தெரிவித்துள்ளார்.

2019 ஆம் ஆண்டுக்காக தற்போது பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதியொதுக்கீட்டு பிரேரணைக்கான யோசனையில் பிரதமருக்காக ஒதுக்கப்படும் நிதியை இடைநிறுத்துவதற்கயோசனை முன்வைக்கப்பட்டால் அது மேற்படி செலவினங்கள் தொடர்பான சட்டத்திற்கான திருத்தமாக இருக்கவேண்டுமென்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்த வருடத்திற்காக அரசாங்கம் அனைத்து செலவினம் மற்றும் நிதியொதுக்குதல் தொடர்பாக பாராளுமன்றத்தின் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொண்டுள்ளது. அதனால் இந்த வருடத்தில் பிரதமரின் நிதியொதுக்கீட்டை நிறுத்துவது தொடர்பில் யோசனை முன்வைக்கப்பட்டால் அது பயனற்றதாகி விடும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

தற்போது நாட்டில் நிலவும் அரசியல் சூழ்நிலைக்கிணங்க கண்டிப்பாக அடுத்த வருடம் ஜனவரியிலிருந்து ஏப்ரல் வரை அரசாங்கத்தின் நிதியொதுக்கீட்டுக்கான அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்வதற்கு இடைக்கால செலவு அறிக்கையொன்றை முன்வைப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அதற்கு அமைச்சரவையின் அங்கீகாரமும் கிடைத்துள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பாராளுமன்றத்தைக் கலைத்து புதிய பாராளுமன்றம் ஒன்றை அமைப்பதற்கு மேற்கொண்ட தீர்மானம் தொடர்பாக உச்ச நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

அதனைக் கவனத்தில் கொண்ட உச்ச நீதிமன்றம் டிசெம்பர் 7 ஆம் திகதி வரை இடைக்கால தடையொன்றை விதித்துள்ளது. இவ்வாறான பின்னணியில் கூட்டப்பட்ட பாராளுமன்றத்தில் ஐக்கிய தேசிய முன்னணி பிரதமரின் நிதியொதுக்கீட்டை நிறுத்துவது தொடர்பிலான யோசனையை முன்வைத்துள்ளது. (இ-7)

## நாடா? ஆட்சியா? சூழ்ச்சி மேற்கொண்டால்

# பாரிய எதிர்விளைவுகளை மைத்திரி சந்திக்க நேரிடும்

## ராஜித எச்சரிக்கை



(கொழும்பு)


ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் மகிந்த ராஜபக்ஷ ஆகியோர் ஆட்சியதிகாரம் முக்கியமா? அல்லது நாடு முக்கியமா? என்பதை உடனடியாக தீர்மானிக்க வேண்டும். ஆட்சியதிகாரத்தைத் தக்கவைத்துக்கொள்ள இவர்கள் தொடர்ந்து சூழ்ச்சிகளை மேற்கொண்டால் பாரிய எதிர்விளைவுகளை சந்திக்க நேரிடும் என பாராளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரட்ன எச்சரித்துள்ளார்.


நாடு தற்போது பாரிய அரசியல் நெருக்கடியை சர்வதேச அளவில் எதிர்கொண்டு வருகின்றது.

அதற்குத் தீர்வினைக் காண்பதை விடுத்து நாட்டுத் தலைவர் பொறுப்பற்ற விதத்தில் செயற்படுவது முரணானது எனவும் ராஜித தெரிவித்தார். அலரிமாளிகையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துரைக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-7)

## 14 மில்லியன் ரூபாய் பெறுமதியான தங்க ஆபரணங்களுடன் நால்வர் கைது







(கொழும்பு)

14 மில்லியன் ரூபாய் பெறுமதியான தங்க ஆபரணங்களுடன் நால்வரை கட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் வைத்து கைதுசெய்துள்ளதாக இலங்கை சுங்கப் பிரிவு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

குறித்த நால்வரும் நேற்று முன்தினம் இரவு 8 மணியளவில் இந்தியாவின், மும்பையிலிருந்து இலங்கைக்கு வந்தபோதே தங்க ஆபரணங்களுடன் சுங்க அதிகாரிகளால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

கைதுசெய்யப்பட்டவர்களுள் மூன்று பெண்களும் அடங்குவதாகவும் அவர்களிடம் தொடர்ந்து விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் சுங்கப் பிரிவு அதிகாரிகள் மேலும் தெரிவித்தனர். (இ-7)

## பிரித்தானிய அரசியலமைப்பு அன்றி

# நிறைவேற்று ஜனாதிபதி அரசியலமைப்பே இலங்கையில் நடைமுறையில் - சுசில்



(கொழும்பு)

தற்போது இலங்கையில் பிரித்தானிய சம்பிரதாய அரசியலமைப்பு அன்றி 1978 ஆம் ஆண்டு ஜே.ஆர். ஜெயவர்த்தன ஜனாதிபதியினால் உருவாக்கப்பட்ட நிறைவேற்று ஜனாதிபதி அரசியலமைப்பே நடைமுறையிலுள்ளதாக பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் மற்றும் நீதி அமைச்சருமான சுசில் பிரேமஜெயந்த தெரிவித்துள்ளார்.

பிரித்தானிய பாராளுமன்ற சம்பிரதாயத்தைப் பாதுகாப்பதற்கு ஐ.தே.கட்சி கடமைப்பட்டுள்ளது என முன்னாள் பாராளுமன்ற சபை முதல்வர் லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்துள்ள கருத்துக்குப் பதிலளிக்கும் வகையிலேயே அமைச்சர் சுசில் பிரேமஜெயந்த இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், அமைச்சர் சுசில் பிரேம ஜெயந்த. அதிகாரங்கள் தொடர்பில் அரசியலமைப்பின் 7 ஆவது சரத்தின் கீழ் பாராளுமன்றப் பெரும்பான்மையுடன் பிரதமரை நியமிக்க முடியும் என்றும் லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் கருத்துத் தெரிவித்துள்ள அமைச்சர் சுசில் பிரேமஜெயந்த, நான் அவருக்கும் அவரது நிலைப்பாட்டிலுள்ள ஏனையவர்களுக்கும் கூறிக்கொள்ள விரும்புவது அவர்களது ஐ.தே.கட்சியின் முன்னாள் தலைவரான முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்த்தன 1977 ஆம் ஆண்டு ஜனாதிபதியாக நியமிக்கப்பட்டதன் பின்னர் 1978 ஆம் ஆண்டு இலங்கை ஜனநாயக சோசலிச ஜனநாயகக் குடியரசின் அரசியலமைப்புக்கிணங்க புதிதாக அரசியலமைப்பொன்றை உருவாக்கினார்.

அந்த அரசியலமைப்பு இதுவரையில் 19 தடவையாக திருத்தத்துக்குள்ளாககப்பட்டுள்ளது.

எவ்வாறெனினும் எமது நாட்டின் அடிப்படைச் சட்டமாக நடை முறையிலுள்ளது அந்த அரசியலமைப்பாகும். அதனை உருவாக்கியது 1972 ஆம் ஆண்டு அரசியலமைப்பு திருத்தத்தின் போதாகும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# பிரதமர்-அமைச்சர்களுக்கான நிதி அனுமதி அவசியமில்லை

## ஜி.எல்.பீரிஸ் தெரிவிப்பு



(கொழும்பு)

பாராளுமன்றத்தில் 2018 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டம் ஏற்கனவே நிறைவேற்றப்பட்டுள்ள நிலையில் பிரதமர் அலுவலகத்தின் நிதிப் பயன்பாட்டை முடக்கும் வகையில் ஐக்கிய தேசிய முன்னணி கையளித்துள்ள பிரேரணை சட்ட அடிப்படையற்றதென முன்னாள் வெளிவிவகார அமைச்சரும் பொதுஜன பெரமுனவின் தலைவருமான பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்தார். 2018 ஆம் ஆண்டுக்கான நிதி ஏற்கனவே பாராளுமன்றத்தில் அங்கீகரிக்கப்பட்டுள்ள சந்தர்ப்பத்தில் தற்போது இது போன்றதொரு பிரேரணையை கொண்டுவருவது நடைமுறைச் சாத்தியம் இல்லையென்றும் அவர் தெரிவித்தார்.

"வரவு-செலவுத் திட்டத்துக்கான நிதி டிசெம்பர் 31 ஆம் திகதி வரை பாராளுமன்றத்தால் அங்கீகரிக்கப்பட்டு நிறைவேற்றப்பட்டுள்ள நிலையில் தற்போது அதனை முடக்குவது இயலாது" என்றும் அவர் தெரிவித்தார்.

மேலும் எதிர்க்கட்சியினரால் பாராளுமன்றத்தில் இதுபோன்றதொரு பிரேரணையை கொண்டுவர முடியாதென்றும் அரசாங்கத்தால் மட்டுமே முடியுமென்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

"எவ்வாறாயினும் ஐ.தே.மு. முன்வைத்துள்ள பிரேரணை சட்ட அடிப்படையற்றது. அமைச்சுக்களுக்கென ஏற்கனவே நிதி ஒதுக்கப்பட்டுள்ள நிலையில் அதனை முடக்க முடியாது. வருட இறுதி வரைக்குமான வரவு-செலவுத் திட்டம் ஏற்கனவே நிறைவு செய்யப்பட்டுள்ளது" என்றும் அவர் தெரிவித்தார். (இ-7)

# நிசாந்த சில்வாவின் இடமாற்றத்தில் ஜனாதிபதிக்குத் தொடர்பில்லை

## அமைச்சர் தயாசிறி மறுப்பு



(கொழும்பு)

குற்றப் புலனாய்வுப் பிரிவின் பொறுப்பதிகாரி நிசாந்த சில்வாவின் இடமாற்றத்துக்கும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கும் எந்தத் தொடர்பும் இல்லை என அமைச்சர் தயாசிறி ஜெயசேகர தெரிவித்தார்.

இந்த இடமாற்ற விடயத்தில் ஜனாதிபதியைத் தொடர்புபடுத்தியமையைக்கண்டிப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

பொறுப்பதிகாரி நிஷாந்த சில்வா, ஜனாதிபதியின் உத்தரவின் பேரில் இடமாற்றப்பட்டதாக இந்தியாவின் "த ஹிந்து" பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது. இந்த அறிக்கையிடலை வன்மையாகக் கண்டிப்பதாக அவர் தெரிவித்தார்.

இந்த இடமாற்றத்தை மேற்கொள்ளுமாறு ஜனாதிபதி எந்தவிதமான உத்தரவையும் விடுக்கவில்லை. பொலிஸ்மா அதிபரே இடமாற்றத்தை வழங்கியதுடன் தேசியபொலிஸ்ஆணைக்குழு இந்த இடமாற்றத்தை இரத்துச் செய்துள்ளது. ஜனாதிபதிக்கும் இதற்கும் எந்தவிதமான. தொடர்பும் இல்லை என்றார் அமைச்சர் தயாசிறி ஜெயசேகர.

இவ்விடயத்தில் தலையிட்ட சுயாதீன பொலிஸ் ஆணைக்குழு இடமாற்றத்தை இரத்துச் செய்துள்ளது. பொலிஸ்மா அதிபரின் செயற்பாடு குறித்து நடவடிக்கை எடுப்பது பற்றி அரசியலமைப்பு பேரவையே தீர்மானிக்க முடியும் என்றும் அமைச்சர் சுட்டிக்காட்டினார். குற்றப் புலனாய்வுப் பிரிவின் பொறுப்பதிகாரி நிஷாந்த சில்வாவை இடமாற்றம் செய்வதாக பொலிஸ்மா அதிபர் பூஜித ஜெயசுந்தர அறிவித்திருந்தார். எனினும், ஓரிரு நாட்களில் இந்த இடமாற்றத்தை பொலிஸ் ஆணைக்குழு இரத்துச் செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7)



கார்த்திகை விளக்கீட்டினை முன்னிட்டு நேற்று முன்தினம் மாலை யாழ் கல்வியங்காடு சந்திப் பகுதியில் அமைந்துள்ள தமிழக முன்னாள் முதலமைச்சரும் நடிகருமான எம்.ஜி. இராமச்சந்திரன் சிலைக்கு அவரின் நண்பரும் தீவிர ரசிகருமான யாழ். எம்.ஜி.ஆர் என அழைக்கப்படும் கோப்பாய் சுந்தரலிங்கம் தீபம் ஏற்றி அஞ்சலி செலுத்தினார்.


(படங்கள்:- சோபிகா)

# இலங்கையில் தமிழர்

## ஒரு முழுமையான வரலாறு (கி.மு.300- கி.பி.2000)

கலாநிதி மு.குணசிங்கம்

103



"பிரித்தானியர் ஆட்சிக் காலத்தில் பல்வேறுபட்ட ஆங்கில, அமெரிக்க மிஷனரிமாரால் வழங்கப்பட்ட மேலைத் தேய இலவசக் கல்வி வாய்ப்பை மேற்படி பிரதேச மக்கள் மிக ஆர்வத்தோடு பயன்படுத்தியிருக்கிறார்கள். அதன் விளைவாகத் தென்பகுதியிலுள்ள முக்கிய தலை நகரமான கொழும்பிலும் ஏனைய முக்கிய நகரங்களான கண்டி, காலி போன்ற இட ங்களிலும் பிரித்தானியரின் மலையகத் தேயிலை, இறப்பர் தொழில் நிறுவனங்களிலும் காணப்பட்ட அலுவலக உத்தி யோகங்களில் யாழ்ப்பாணக் குடாநாட்டு மக்கள் பெரு மளவு பணிபுரிந்திருக்கின்றார்கள்"

## டச்சுக்காரர் ஆக்கிரமிப்பும் தமிழர் பிரதேசங்களை சுரண்டியமையும் (கி.பி. 1658-கி.பி. 1796)

மேற்படி புள்ளி விபரங் களை நோக்கும்பொழுது அதிக சனத்தொகை கொண்ட யாழ்ப்பாணக் குடாநாட்டில் மிகப் பெரும்பான்மையான தமிழ் மக்கள் கிறிஸ்தவர் களாக மாறியிருக்கின்றார் கள் என்பதனை அறியமுடி கிறது.

ஏற்கனவே குறிப்பிட்ட மேற்படி பிரதேசத்திலுள்ள சனத்தொகைக்கும் அப்பிர தேசத்தில் கிறிஸ்தவர்களாக மாற்றப்பட்டவர்களின் சனத் தொகைக்கும் இடையில் பாரிய வித்தியாசங்களைக் காணமுடியவில்லை.

எனவே மிகப் பெரும் பான்மையான மேற்படி பிர தேச மக்கள் புரட்டஸ்தாந்து மதத்திற்கு மாறியிருக்கின் றார்கள் என்பது தெளிவாகத் தெரிகின்றது. அதேபோன்று மன்னார் பிரதேசமும் அவ்வா றான ஒரு நிலையிலேயே காணப்படுகின்றது.

வன்னிப் பெருநிலப்பரப் புக்கும் கிழக்கு மற்றும் மேற் குப் பிரதேசங்களும் சனத் தொகை குறைவாகவும் நிலப் பரப்புக் கூடுதலாகவும் உள்ள இடங்களாகும்.

அத்தோடு ஏற்கனவே குறிப் பிட்டதுபோல் பதினே ழாம் நூற்றாண்டின் இறுதிப் பகுதியில் அப் பிரதேசங்க ளில் டச்சுக்காரரின் மேலாதி க்கம் அவ்வளவாக இடம் பெறாததன் விளைவாக அவ்விடங்களில் புரட்டஸ் தாந்து பிரிவினரின் ஆரம்ப மதப்பரப்பல் நடவடிக்கை களுக்கு அதிக வாய்ப்பும் வசதிகளும் இருக்கவி ல்லை.

அத்தோடு அவர்கள் தமது சுதேச மதத்தில் இறுக்கமான நம்பிக்கை உள்ளவர்களாக வும் இருக்கின்றார்கள் என்ப தனைப் போர்த்துக்கீச, டச்சுப் பிரதேசங்களில் புரட்டஸ் தாந்து மதப்பரம்பல் நடவடி க்கை வெற்றியளிக்கவி ல்லை என்பதனை மேற்படி புள்ளிவிபரங்கள் காட்டி நிற்கின்றன.

ஆனால் வன்னி, திருகோ ணமலை, மட்டக்களப்பு, புத்தளம், கற்பிட்டிப் பிரதேச ங்களில் வாழ்ந்த வன்னிச் சிற்றரசும் அவர்களின் உறவி னர்களும் மேல்தட்டு வர்க்கத் திலிருந்த வசதி படைத்த வர்களும் புரட்டஸ்தாந்து மதத்தைத் தழுவியிருக்கின் றார்கள்.

தமது நிலைப்பாட்டை உறுதி செய்வதற்கும் டச் சுக்கார அரசின் செல்வாக் கைப் பெறுவதற்கும் அவர் களிற் பெரும்பான்மையினர் மதம் மாறியிருக்கின்றனர் என் பதனையும் பல்வேறு சந்தர்ப் பங்களில் டச்சு ஆவணத்தி னூடாக அறிய முடிகிறது.

இவைதவிர, தொழில் ரீதி யாகக் கிடைக்கப்பெற்ற சலு கைகளும் புரட்டஸ்தாந்து சபை யினால் வழங்கப்பட்ட இலவச மேலைத்தேசக் கற்கை முறை யிலான கல்வியும் நிச்சயமாக அவர்களை ஈர்த்திருக்கும்.

மட்டுப்படுத்தப்பட்ட நிலம், வசதிகள், இறுக்கமான சாதிக் கட்டுப்பாடுகள், கொடுமை யான சீதனமுறை என்பன அம் மக்களை அந்நியரிடம் கல்வி கற்கவும் அதனூடாக அவர்க ளிடம் வேலைவாய்ப்புப் பெற வும் நிச்சயம் தூண்டியிருக் கும்.

இவையே அப்பிரதேச மக்கள் ஒட்டுமொத்தமாகத் தமது மதத்தைவிட்டு அந்நிய மதமான புரட்டஸ்தாந்து மதத் தைச் சார்ந்தமைக்குரிய சமூக, பொருளாதாரக் காரணங்க ளாக அமைந்துவிட்டன என்று கூறுவதில் தவறு இருக்க முடி யாது.

ஏனெனில் டச்சுக்காரரைத் தொடர்ந்து ஆட்சியைக் கைப் பற்றிக்கொண்ட பிரித்தானியர் ஆட்சிக்காலத்தில் நடந்த வைகள் மேற்படிக் கூற்றை உறுதிப்படுத்துவனவாக அமைகின்றது.

பிரித்தானியர் ஆட்சிக் கால த்தில் பல்வேறுபட்ட ஆங் கில, அமெரிக்க மிஷனரிமா ரால் வழங்கப்பட்ட மேலைத் தேய இலவசக் கல்வி வாய் ப்பை மேற்படி பிரதேச மக் கள் மிக ஆர்வத்தோடு பயன் படுத்தியிருக்கிறார்கள்.

அதன் விளைவாகத் தென் பகுதியிலுள்ள முக்கிய தலை நகரமான கொழும்பிலும் ஏனைய முக்கிய நகரங்களான கண்டி, காலி போன்ற இட ங்களிலும் பிரித்தானியரின் மலையகத் தேயிலை, இறப்பர் தொழில் நிறுவனங்களிலும் காணப்பட்ட அலுவலக உத்தி யோகங்களில் யாழ்ப்பாணக் குடாநாட்டு மக்கள் பெரு மளவு பணிபுரிந்திருக்கின்றார் கள்.

மேற்படி நகரங்களில் வேலை வாய்ப்புக்கள் குறை வடைய, படித்த யாழ்ப்பாணத் தமிழர் மலேசியத் தீபகற்பத் திற்கு வேலை தேடிச் சென்ற னர்.

கடந்த நூற்றாண்டின் அரை யிறுதிப் பாகத்தில் இலங்கை யில் ஏற்பட்ட அரசியல் கொந் தளிப்புக்கள், இன முரண்பா டுகள், இனக்கலவரங்கள் என்பவற்றின் நிமித்தம் மேலை த்தேச நாடுகள் இலங்கைத் தமிழருக்கு தங்கள் குடிவர வுக் கதவுகளைத் திறந்து விட்டிருந்தன.

அவ்வேளையிலும் பெரு மளவான யாழ்ப்பாணக் குடாநாட்டு மக்களே தமது தாய்நாட்டிலிருந்து மேலைத் தேச நாடுகளுக்குச் சென்று அங்கு தமது வாழ்வை நிரந் தரமாக்கிக் கொண்டனர்.

இப்பின்னணியிலிருந்து பார்க்கையில் டச்சுக்காரர் ஆட்சியின் போது யாழ்ப் பாணக் குடாநாட்டு மக்களில் மிகப் பெரும்பான்மையா னோர் புரட்டஸ்தாந்து மதத் திற்கு மாறியிருக்கின்றார்கள் என்பதனை மேற்படி புள்ளி விபரங்கள் காட்டி நிற்பதில் ஆச்சரியப்படுவதற்கு ஒன்று மில்லை.

(தொடரும்)

# ஜோசப் பரராஜசிங்கம் படுகொலை-பிள்ளையான் விடுதலையாவார் என சென்றவர்களுக்கு ஏமாற்றம்



(கொழும்பு)

ஜோசப் பரராஜசிங்கம் படுகொலை தொடர்பில் கைது செய்யப்பட்ட பிள்ளையான் என அழைக்கப்படும் சிவநேசதுரை சந்திரகாந்தன் மீதான வழக்கு விசாரணை அடுத்த ஆண்டு ஜனவரி மாதம் 9 ஆம் திகதி வரை மீண்டும் ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

குறித்த வழக்கில் அவர் விடுதலை செய்யப்படுவார் என பலராலும் எதிர்பார்க்கப்பட்ட நிலையில் அவருக்கு மீண்டும் விளக்கமறியல் நீடிக்கப்பட்டுள்ளது.

கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சரும் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் தலைவருமான சிவனேசதுரை சந்திரகாந்தன் மீதான வழக்கு விசாரணை கடந்த புதன்கிழமை மட்டக்களப்பு நீதிமன்றத்தில் எடுத்துக் கொள்ளப்பட்டது.

இதன் போது நீதிமன்றக் கட்டடத்தொகுதிக்கு முன்னாள் கட்சி உயர்பீட உறுப்பினர்கள், பொதுமக்கள், ஆதரவாளர்கள் காத்திருந்தனர். இருப்பினும் அவரது விளக்கமறியலை அடுத்த ஆண்டு ஜனவரி மாதம் 9 ஆம் திகதி வரையும் நீடித்து நீதவான் உத்தரவிட்டிருந்தார்.

மட்டக்களப்பு நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் படுகொலை சம்பவத்தில் குற்றம் சுமத்தப்பட்டு கடந்த 2015 ஆம் ஆண்டு 10 ஆம் மதம் 11 ஆம் திகதி பிள்ளையான் கைது செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# மூன்று வருடங்களுக்குப் பின்னர் இலங்கையை வந்தடைந்த லஹிரு



(கொழும்பு)

மாலைதீவில் கடந்த மூன்று வருடங்களாக சிறையில் வைக்கப்பட்டிருந்த லஹிரு மதுசங்க நேற்று முன்தினம் இரவு இலங்கையை வந்தடைந்தார்.

கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தை வந்தடைந்த லஹிரு மதுசங்கவை அவரது குடும்ப உறுப்பினர்கள் வரவேற்றனர்.

இதனை அடுத்து லஹிரு மதுசங்க விமான நிலையத்தில் செய்தியாளர்களிடம் கருத்துத்தெரிவித்தார்.

லஹிரு மதுசங்க இலங்கையை வந்தடைந்த வேளை, மாகாண சபைகள், உள்ளூராட்சி மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் பைசர் முஸ்தபாவும் விமான நிலையத்திற்கு வருகை தந்திருந்தார்.

மாலைதீவின் முன்னாள் ஜனாதிபதி அப்துல்லா யமீன் மீதான கொலை சூழ்ச்சி தொடர்பில் லஹிரு மதுசங்க கைது செய்யப்பட்டிருந்தார்.

பாதுகாப்பு உத்தியோகத்தர் பதவிக்காக மாலைதீவு சென்றிருந்த நிலையில் லஹிரு கடந்த 2015 ஆம் ஆண்டு கைது செய்யப்பட்டார்.

இதனையடுத்து கடந்த மூன்று வருடங்களாக அந்நாட்டு உயர் பாதுகாப்பு சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்தார்.

மாலைதீவு சிறையில் தடுத்து வைக்கப்பட்ட லஹிரு மதுசங்கவை அண்மையில் அமைச்சர் பைஸர் முஸ்தபா சந்தித்திருந்ததோடு, கடந்த 21 ஆம் திகதி அவர் விடுதலை செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# ஜனநாயகம் பாதுகாக்கப்பட வேண்டுமெனில் சபாநாயகர் கரு பதவி விலக வேண்டும்

## வீரகுமார திஸாநாயக்க வலியுறுத்து



(கொழும்பு)

ஜனநாயகம் பாதுகாக்கப்பட வேண்டுமெனில், சபாநாயகர் கரு ஜெயசூரிய பதவி விலகவேண்டும் என சுதந்திரக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் வீரகுமார திசாநாயக்க தெரிவித்துள்ளார்.

மருதானையில் உள்ள சுதந்திரக்கட்சியின் தலைமையகத்தில் கடந்த புதன்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்ட போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

சபாநாயகர் கரு ஜெயசூரிய, நாடாளுமன்றத்தில் உள்ள 225 உறுப்பினர்களையும் பாதுகாக்காமல் ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பினர்களை மாத்திரம் பாதுகாக்க நடவடிக்கை எடுக்கின்றார்.

சபாநாயகரின் இந்த செயற்பாடு நடுநிலைமை இல்லையென வீரகுமார திசாநாயக்க தெரிவித்தார்.

ஜனநாயகம் பாதுகாக்கப்பட வேண்டுமெனில், சபாநாயகர் கரு ஜெயசூரிய பதவி விலகவேண்டும்.

சபாநாயகர் பதவிக்காக தகுந்த ஒருவர் நியமிக்கப்பட வேண்டும் என வீரகுமார திஸாநாயக்க மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)




## நிவாசன்




## அமுதா




## தாரணி




## சபேசன்




## சிந்து




## கவிதா




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# இலங்கை நிர்வாக சேவையில் சித்தியடைந்த முதலாவது முஸ்லிம் ஏ.எம்.ஏ. அஸீஸ்

**கலாநிதி ஏ.எம்.ஏ. அஸீஸின் 45 ஆவது ஆண்டு நினைவை முன்னிட்டு இக்கட்டுரை இங்கு பிரசுரமாகின்றது**



யாழ்.மண்ணில் பிறந்து நாடு பூராகவும் உள்ள முஸ்லிம்களின் கல்விக்காகவும் சமூக மாற்றத்திற்காகவும் பொதுநல சேவைகளுக்காகவும் தனது வாழ்வையே அர்ப்பணித்த ஒருவர்தான் கலாநிதி ஏ.எம்.ஏ. அஸீஸ். யாழ்ப்பாணம், சோனக தெருவில் கீர்த்தி மிக்க குடும்பமான சட்டத்தரணியும் காதியாருமான அபூபக்கர்- சுல்தான் முஹம்மது நாச்சியா தம்பதியினருக்கு மூத்தமகனாக 1911 ஆம் ஆண்டுஒக்டோபர்மாதம் 4 ஆம் திகதி பிறந்தார்.

ஏ.எம்.ஏ. அஸீஸின் தகப்பனார் அபூபக்கர் புகழ் பெற்ற புலவர் திலகம் சு.மு. அஸனா லெப்பையின் புதல்வராவார். தந்தை அபூபக்கர் யாழ்ப்பாண நகரசபை உறுப்பினராக பல வருடங்கள் சேவையாற்றினார். 1941 இல் யாழ்ப்பாண நகர சபையில் உப தலைவர் பதவியையும் அலங்கரித்தவர். இன்றும் இவரது பெயரில் காதி அபூபக்கர் வீதி என்று ஒன்று உள்ளது.

அவரின் ஏழாவது வயதில் தாயார் காலமாகி விடவே, தாயாரின் பெற்றோரின் பராமரிப்பில் வளர்ந்தார். சிறு பராயத்தில் அஸீஸ் மீது பாசமும் பரிவும் காட்டியவர்களில் சு.மு. அஸனா லெப்பை புலவர் மிக முக்கியமானவர். புலவர் அஸனா லெப்பை மீது பெருமதிப்பு வைத்திருந்தார். அஸீஸின் ஆய்வு ஆர்வத்தை தூண்டியதில் சு.மு. அஸனா லெப்பைக்கு முக்கிய பங்கு உண்டு.

அஸீஸ் தனது ஆரம்பக் கல்வியை அல்லா பிச்சை பள்ளியில் (முஹம்மது முஸ்லிம் கலவன் பாடசாலை) ஆரம்பித்தார். குர்ஆன் பள்ளிக்கூட கல்வியை நிறைவு செய்துகொண்டு, திட்டமிட்டபடி 1921 இல் வண்ணார்பண்ணை இராமகிருஷ்ண மிஷன் வைத்தீஸ்வரா வித்தியாலயத்தில் தமது கல்வியை அஸீஸ் ஆரம்பித்தார்.

இரண்டு வருடங்கள் மட்டுமே வைத்தீஸ்வராவில் கல்வி கற்ற போதும் கல்வி, ஒழுக்கம், நற்பண்புகளின் வளர்ச்சி என்பவற்றில் தம்மை சிறப்பாக வழி நடத்திய கல்வி நிலையம் என வைத்தீஸ்வரா வித்தியாலயம் பற்றி தமது குறிப்புகளில் பதிவு செய்துள்ளார்.

பின்னர் இடைநிலைக் கல்வியை யாழ். இந்துக் கல்லூரியில் ஆரம்பித்தார். இங்கு முதல் முஸ்லிம் மாணவராக சேர்த்துக் கொள்ளப் பட்டார்.

1929 இல் அவர் பல்கலைக்கழக பிரவேசத் திற்காக தேர்ந்தெடுக்கப்படும் வரை அவரது கல்வி வாழ்வு இந் துக் கல்லூரியில் நீடித்தது.

பிற்காலத்தில் அவர் தமிழ் மொழியிலும் சிறந்த பேச்சாளராகவும் எழுத் தாளராகவும் விளங்க அவரது இக் கல்லூரிகளின் தொடர்புகளும் பக்கபலமாக இருந்துள்ளன.

1929 இல் இலங்கை பல்கலைக்கழகத்தில் சேர்ந்து வரலாற்றுத் துறையை சிறப்பு பாடமாக தெரிவு செய்து 1933 இல் வரலாற்றில் (B.A.Hons) சிறப்புப் பட்டத்தை பெற்றார். வரலாற்று துறையில் அவருக்கு இருந்த ஆர்வம் காரணமாக இலங்கை அரசாங்கம் 1933 இல் லண்டன் கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தின் புனித கத்தரின் கல்லூரியில் வரலாற்று துறையில் மேற்படிப்பை தொடர்வதற்கு புலமைப் பரிசில் வழங்கியது.

அவர் லண்டன் பல்கலைக் கழகத்தில் வரலாற்று துறையில் சிறப்பு பட்டம் பெற்றார். இவர் இலங்கை சிவில் சேவையாளருக்கான தேர்விலும் சித்தி பெற்றார். இலங்கை நிர்வாக சேவையில் சித்தியடைந்த முதலாவது முஸ்லிம் இவரே ஆவார்.

உம்முகுல்தூம் என்பவரை 1937 இல் அஸீஸ் திருமணம் செய்தார். அஸீஸ் தம்பதியினர் மரீனா சுல்பிக்கா, முஹம்மத் அலி, இக்பால் ஆகியோரைப் பெற்றெடுத்தனர்.

1942 இல் அஸீஸ் உதவி அரசாங்க அதிபராக கல்முனையில் சேவையில் இருக்கும் காலத்தில் அரசாங்க கடமைகளோடு, பொதுநல ஈடுபாடு, மக்கள் சேவை, வரலாற்று ஆய்வுகளுக்கான தகவல்களை சேகரித்தல் போன்ற பல பணிகளை அவர் முன்னெடுத்தார்.

1943 இல் இஸ்லாமிய இளைஞர் இயக்கத்தை (YMMA) ஸ்தாபிப்பதிலும் அவர் வெற்றி கண்டார்.

முஸ்லிம் மாணவர்களின் கல்வியானது வறுமையினால் தடைப்படக் கூடும் என்று உணர்ந்து 1945 ஆம் ஆண்டு இலங்கை முஸ்லிம் கல்விச் சகாய நிதி (Ceylon Muslim Scholarship Fund) என்ற நிதி நிறுவனத்தை கொழும்பில் உருவாக்கினார். இன்றும் அது இயங்கிக் கொண்டிருக்கிறது.

கொழும்பு ஸாஹிரா கல்லூரி அதிபராக 1948 ஆம் ஆண்டிலிருந்து 1961 வரை தலைமைப் பொறுப்பை நிறைவேற்றி இருந்தார். கல்வியில் மட்டுமன்றி விளையாட்டுத் துறை சாரணியம், கெடற், தொழிற்கல்வி என்று எல்லாத் துறைகளிலும் ஸாஹிரா அதன் உன்னத நிலையை அவர் காலத்தில் நிரூபித்தது.

1952 இல் அகில இலங்கை ஆசிரியர் சங்கத் தலைவராக இருந்த போது ஸ்மித் மண்ட் புலமைப் பரிசில் பெற்று அமெரிக்காவில் ஆறு மாதங்கள் பயிற்சி பெற்று திரும்பினார்.

ஏ.எம்.ஏ. அஸீஸ் அரசாங்கத்தில் செனட்டராகவும் பணிபுரிந்தார். ஏ.எம்.ஏ. அஸீஸ் 1973 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 24 ஆம் திகதி காலமாகும் வரை கல்விக்காகவும் சமூக மாற்றத்திற்காகவும் பொது நல சேவைகளுக்காகவும் தனது வாழ்வையே அர்ப்பணித்திருந்தார்.

ஏ.எம்.ஏ. அஸீஸ் ஐ கௌரவிக்கும் முகமாக இலங்கை அரசாங்கம் 1986 ஆம் ஆண்டு மே மாதம் 22 ஆம் திகதி முத்திரை வெளியிட்டது.

ஏ.எம்.ஏ. அஸீஸ் கொழும்பில் ஸ்தாபித்து வைத்த இஸ்லாமிய இளைஞர் இயக்கம் (YMMA) இன்று 150 க்கும் அதிகமான கிளைகளுடன் நாடு முழுவதும் பரவிய நிலையில் செயலாற்றி வருகிறது. ஏ.எம்.ஏ. அஸீஸ் ஆலோசனைகளின் படி கல்வி முன்னேற்றம், சுகாதார அபிவிருத்தி, பாதை திருத்தம், அநாதைகள் பராமரிப்பு, கலாசார வளர்ச்சி உட்பட பல பொது நல சேவைகளில் இச்சங்கங்கள் ஈடுபட்டு வருகின்றன. யாழ் மண்ணில் பிறந்த கலாநிதி ஏ.எம்.ஏ. அஸீஸ் போன்று மாமேதைகள் மேலும் உருவாக வேண்டும்.

அல்ஹாஜ் எம்.எப்.எம் இக்பால்(ஜே.பி)
யாழ்ப்பாணம்

## வித்தியாலயத்தின் பரிசுத்தினம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.ஆனைப்பந்தி மெதடிஸ்ற் மிஷன் வித்தியாலயத்தின் பரிசுத்தினம் இன்று 24 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணியளவில் அதிபர் யோ.ஜெக ஆனந்தம் தலைமையில் இடம்பெறும்.

இதில் பிரதம விருந்தினராக யாழ்.போதனா வைத்தியசாலை வைத்தியர் திருமதி ரம்மியா நிரஞ்சனன் (பழைய மாணவர்). சிறப்பு விருந்தினராக யாழ்.வலய ஆரம்பக் கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் ப.சசிக்குமார் ஆகியோர் கலந்து கொள்வர். (இ-5)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | சாவகச்சேரி | கொடிகாமம் | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 200 | 160 | 180 | 160 |
| உருளைக்கிழங்கு | 140 | 120 | 95 | 120 |
| பச்சைமிளகாய் | 400 | 120 | 320 | 500 |
| தக்காளி | 400 | 240 | 320 | 400 |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 50 | 30 | 40 |
| கோவா | 160 | 160 | 180 | 200 |
| கரட் | 150 | 240 | 250 | 400 |
| பூசணி | 80 | 40 | 40 | 80 |
| புடோல் | 140 | 120 | 150 | 120 |
| வாழைக்காய் | 80 | 80 | 60 | 120 |
| சின்ன வெங்காயம் | 140 | 160 | 120 | 140 |
| பெரிய வெங்காயம் | 120 | 120 | 105 | 120 |
| பாகற்காய் | 300 | 160 | 350 | 240 |
| வெண்டிக்காய் | 150 | 120 | 110 | 160 |
| கருணைக் கிழங்கு | 60 | 80 | 60 | 60 |
| பயற்றங்காய் | 300 | 180 | 300 | 250 |
| லீக்ஸ் | 200 | 240 | 200 | 240 |
| பீற்றூட் | 200 | 120 | 60 | 200 |
| கறிமிளகாய் | 300 | 160 | 250 | 280 |
| முருங்கைக்காய் | 500 | — | 300 | 400 |
| போஞ்சி | 200 | 240 | 250 | 200 |
| கத்தரிதம்புள்ள | 200 | — | 170 | 120 |
| கீரை-1பிடி | 70 | 60 | 40 | 60 |
| தேசிக்காய் | 500 | 450 | 450 | 400 |
| தேங்காய் (ஒன்று) | 60 | 40 | 40 | 25-40 |
| இராசவள்ளி | 280 | — | — | 240 |
| வெங்காயப்பூ | 400 | — | — | — |
| முள்ளங்கி | 100 | — | 30 | 120 |
| பொன்னாங்காணி | 50 | 40 | 20 | 50 |
| வல்லாரை | 20 | 30 | 20 | 25 |
| ஈரப்பலா | 60 | — | 120 | 120 |

# செய்தித்துளிகள்

## கலாசாலையில் சிவதீட்சை

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் ஆசிரிய கலாசாலை இந்து மன்றம் நடத்தும் சிவ தீட்சை வழங்கும் நிகழ்வு இன்று சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு கலாசாலையில் உள்ள யோக லிங்கேசுவரர் ஆலய மண்டபத்தில் நடைபெறும்.

இருபாலை கற்பகவிநாயகர் ஆலயப் பிரதம குரு சிவஸ்ரீ பா.செல்வசேனக் குருக்கள் தீட்சா குருவாகப் பங்கேற்கவுள்ளார்.

இதில் கலாசாலையின் ஆசிரிய மாணவர்கள் பலர் சிவதீட்சை பெறவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (இ-7)

## பாடசாலை பரிசில் நாள்

(சாவகச்சேரி)

மிருசுவில் றோ.க.த.க.பாடசாலை பரிசில் நாள் நிகழ்வுகள் எதிர்வரும் 29ஆம் திகதி வியாழக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு பாடசாலையின் பிரதான மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

பாடசாலை அதிபா க.சத்தியானந்தன் தலைமையில் நடைபெறும் இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக பிரதிக் கல்விப்பணிப்பாளர் (நிர்வாகம்) ஏ.பிறேமதாஸ் கலந்து சிறப்பிப்பார்.

சிறப்பு விருந்தினராக (மிருசுவில் சென்ற் நிக்லஸ் சேச்) வண.எப்.ஆ.ஜேம்ஸ் மற்றும் கௌரவ விருந்தினாகளாக பிரபல வர்த்தகர் பொ.சற்குணசீலனும் றா.தெய்வேந்திரனும் கலந்து சிறப்பிப்பர். (இ-29)

## கற்றல் உபகரணங்கள் வழங்கல்



இளவாலை வருத்தப்படாத வாலிபர் சங்கத்தின் "உயர்த்தும் கரங்கள்" செயற்றிட்டத்தின் கீழ் பலாலி வடக்குப் பகுதியிலிருந்து விடுக்கப்பட்ட வேண்டுகோளுக்கு இணங்க, 16 மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன. (இ-7)

## ஆசிரியர் வழிகாட்டி அறிமுகம்

(யாழ்ப்பாணம்)

தேசிய கல்வி நிறுவனத்தினால் 2020 ஆம் ஆண்டு உயர்தரப் பரீட்சைக்குரிய தொடர்பாடலும் ஊடகக் கற்கையும் தரம் 12 பாடத் திட்டத்தையும் ஆசிரியர் வழிகாட்டியையும் அறிமுகம் செய்யும் செயலமர்வு எதிர்வரும் 26, 27 ஆம் திகதிகளில் காலை 8 மணிமுதல் பிற்பகல் 4 மணிவரை தேசிய கல்வி நிறுவக விரிவுரை மண்டபத்தில் நடைபெறும்.

மேலதிக தகவல்களுக்கு 077 881 6776, 011 760 1694 ஆகிய தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளலாம். (இ-5)

## மாத்தளையில் இருவர் மாயம்

மாத்தளை, மில்கமுவ நிபோன் பகுதியில் மணல் அகழ்விற்கு சென்ற இருவர் காணாமல் போயுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நேற்று வெள்ளிக்கிழமை இடம்பெற்ற இச்சம்பவத்தில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த சகோதரர்கள் இருவரே காணாமல் போயுள்ளனர்.

குறித்த இருவரும் மில்கமுவ நிபோன் பகுதியிலுள்ள பாலத்துக்கு அருகில் மணல்-அகழ்விற்கு சென்றுள்ள நிலையில், அவர்கள் சென்ற படகுடன் காணாமல் போயுள்ளனர். (இ-7)

## வாவி நீரில் மூழ்கிய இராணுவச் சிப்பாய் பலி

(கொழும்பு)

வில்கமுவ பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஹந்துன்கமுவ வாவியில் நீரில் மூழ்கி இராணுவச்சிப்பாய் உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் வியாழக்கிழமை மாலை 6.30 மணியளவில் இடம் பெற்றுள்ளதாக வில்கமுவ பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற தகவலுக்கமைய விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது. (இ-7)

# சிறுவர் அரங்கம்

# சொல் புத்தி



ஒரு தந்தையும் மகனும் தங்களுடைய கழுதையை விற்பதற்காக சந்தைக்கு ஓட்டிச் சென்று கொண்டிருந்தனர். அதைப் பார்த்த வழிப்போக்கர்கள் சிலர் இவர்களைப் பார்த்து, "பாரேன் இவர்களை, அற்புதமான கழுதையை ஓட்டிக் கொண்டு நடந்து சென்று கொண்டிருக்கிறார்கள். இவர்களில் யாராவது அதில் ஏறிச் செல்லலாம். ஆனால் பொருளைக் கொடுத்த கடவுள் அதைப் பயன்படுத்த அறிவைக் கொடுக்கவில்லை, இவர்களுக்கு" என்று ஏளனம் செய்தனர்.

இதனால் வெட்கப்பட்டுப் போன தந்தையும் மகனும் ஒரு முடிவு செய்து, வயதில் சிறியவனான மகன் கழுதையின் மேல் உட்கார்ந்து கொண்டு தந்தை நடந்தவாறே இருவருமாகப் போனார்கள். அப்போது வேறு சில வழிப்போக்கர்கள், "இங்க பாருடா அநியாயம்! பெரியவர் நடக்கமுடியாமல் நடக்கிறார், இந்த வாலிபப் பையன் சொகுசா கழுதை சவாரி செய்கிறான்" என்று கிண்டலடித்தனர்.

இதைக் கேட்டு இவர்கள் கூறுவதில் நியாயம் இருப்பதாக உணர்ந்த பையன், தந்தையைக் கழுதையில் உட்கார வைத்து இருவரும் புறப்பட்டனர். இன்னும் சற்றுத் தூரம் சென்ற பின் ஒரு வழிப்போக்கன் இவர்களைப் பார்த்து "கலி முற்றிவிட்டது. இங்க பாரு! நல்லா சுக்குமாந்தடி போல இருக்கிற பெரியவர், ஒரு நோஞ்சான் பையனை நடக்கவிட்டு தான் மட்டும் சொகுசாக கழுதை மேல் ஏறிப்போகிறார்" என்றான்.

வழக்கம் போல இதைக் கேட்ட தந்தை-மகன் இருவரும் ஒரு சேர கழுதை மேல் ஏறிகொண்டனர். இனி இந்த உலகம் தங்களைப் பார்த்துக் கேலி பேசாது என்று தந்தை கூறினார். கொஞ்சத் தூரம் சென்றபின் இன்னொரு வழிப்போக்கன் இவர்களைப் பார்த்து "இரண்டு தடியன்கள், ஒரு நோஞ்சான் கழுதையின் மேல் ஏறி சவாரி செய்கிறார்கள். இரக்கங்கெட்ட ஜென்மங்கள்!" என்று காட்டமாக விமர்சித்தான்.

இதைக் கேட்டு வருந்திய தந்தையும் மகனும் கழுதையிலிருந்து குதித்தனர். இனி என்ன செய்வது? என்று சிந்தித்தனர். நீண்ட ஆலோசனைக்குப் பிறகு "மக்கள் மனம் மகிழ கழுதையை நாம் கட்டித் தோளில் சுமந்து செல்வோம்!" என்று முடிவு செய்தனர்.

அவ்வாறு கழுதையைத் தோளில் சுமந்து செல்கையில் வழியில் ஒரு காட்டாறு குறுக்கிட்டது. அதைக் கடக்கையில் கழுதை மிரண்டு போய் வெள்ளத்தில் விழுந்தது. கால்கள் கட்டப்பட்டிருந்ததால் அதனால் நீந்த முடியவில்லை! எனவே அது ஆற்று வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டது. தந்தையும் மகனும் செய்வதறியாது திகைத்து நின்றனர்.

நீதி : சொல் புத்தியை விட சுயபுத்தி மிக அவசியம்.

## ஆட்டுக்குட்டி


துள்ளி வரும் ஆட்டுக்குட்டி
துணிந்து வரும் ஆட்டுக்குட்டி
பள்ளி செல்ல வருவாயோ?
பாடம் சொல்லித் தருவாயோ?

கள்ளம் இல்லை உன்மனத்தில்
கபடம் இல்லை உன்மனத்தில்
பள்ளம் மேடு எதுவந்தாலும்
பாய்ந்து ஓடும் ஆட்டுக்குட்டி.

தொல்லை இல்லா ஆட்டுக்குட்டி
தோல் கறுத்த ஆட்டுக்குட்டி
சொல்லைக் கேட்டு வீட்டையே
சுற்றி வரும் ஆட்டுக்குட்டி.



## வழிகாட்டுங்கள்...



## விடுகதைகள்

- ஒரு குதிகுதிப்பான். பல்லை இளிப்பான். அவன் யார்?

நெல்லுப் பொரி

- உனக்குச் சொந்தமான பொருள். நீ பயன்படுத்துவதை விடப் பிறரே அதிகமாகப் பயன்படுத்துவார்கள். அது என்ன?

உன் பெயர்

- பிறந்த போது நான் இல்லை. காலம் கழித்து வந்தேன். சிறிது காலம் தங்கினேன். பிறகு சென்று விட்டேன். மீண்டும் ஒருமுறை வந்தேன். நீண்ட காலம் தங்கினேன். இனிப் போனால் நான் திரும்பி வரவே மாட்டேன். நான் யார்?

பல்

- எனக்கு ஐந்து விரல்கள் உண்டு. இரத்தமுமில்லை, சதையும் இல்லை. நான் யார்?

கையுறை

- ஆற்றையும் கடக்கும் அக்கரைக்கும் போகும். தண்ணீரையும் கலக்காது தானும் நனையாது. அது என்ன?

குரல்

- வைரத் தோடுகள் வயலில் கிடக்குது. சந்திரன் பார்த்தான் எடுக்காமல் போய்விட்டான். சூரியன் பார்த்தான் தூக்கிச் சென்றான். அது என்ன?

பனித்துளி

- என் தலையை நானே விழுங்குவேன். நான் யார்?

ஆமை

- என்னைச் சுமந்தால் நான் உன்னைச் சுமப்பேன். நான் யார்?

செருப்பு

- ஆயிரம் ஆயிரம் முடிச்சுக்களும் என்னிடம் உண்டு. ஆயிரம் ஆயிரம் ஓட்டைகளும் என்னிடம் உண்டு. நான் யார்?

வலை

நல்லதோர் வீணை செய்தே அதை நலங்கெட
புழுதியில் எறிவதுண்டோ.
~ மகாகவி பாரதியார்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## பாராளுமன்றம் குழம்புவதை விரும்புகின்ற அவலம் கண்டோம்

பாராளுமன்றம் குழம்பி அடிப்பது நல்லது என்று மகிந்த தரப்பும் ரணில் தரப்பும் நினைக்கிறது.

இதை நாம் கூறும்போது இஃதென்ன என்ற பிரமிப்பு உங்களிடம் ஏற்பட வாய்ப்புண்டு. ஆனால் உண்மை அதுதான்.

பாராளுமன்றம் குழம்பும்போது, அது ஜனநாயகத்தின் மீறலாகவே பார்க்கப்படும். அதாவது பாராளுமன்றத்தை எந்தத் தரப்பு குழப்புகிறதோ அல்லது பாராளுமன்றத்தில் எந்தத் தரப்பு அடிதடியிலும் ரகளையிலும் ஈடுபடுகின்றதோ அந்தத் தரப்புத் தொடர்பில் மக்கள் வெறுப்படைவர்.

தவிர, பாராளுமன்றம் கூடும்போதெல்லாம் சண்டையும் சச்சரவும் நடப்பதை நீதித்துறையும் அவதானிக்கும்.

இந்நிலைமையானது நீதித்துறையின் தீர்ப்பில் செல்வாக்குச் செலுத்தும் என்ற எடுகோள் இங்கு உணர்ந்திருப்பதையும் அவதானிக்க முடியும்.

இந்தவகையில் பாராளுமன்றத்தில் அடிக்கடி குழப்பம் நடந்தால் அது சிங்கள மக்கள் மத்தியில் மகிந்த ராஜபக்ஷ தரப்பின் நன்மதிப்பை குறைவடையச் செய்யும் அதேநேரம், பெரும்பான்மை பலம் ரணில் விக்கிரமசிங்க தரப்புக்கு இருக்கின்றபோதிலும் அதற்கு உரிய மதிப்பளிக்க சம்பந்தப்பட்டவர்கள் மறுக்கும் போது அது ஜனநாயக மீறலாக அமையும்.

இஃது அடுத்த தேர்தலில் வழங்கப்படும் வாக்குகள் சர்வாதிகாரத்துக்கு வழிவகுத்து விடுமோ என்ற பயத்தை பொதுமக்களிடம் ஏற்படுத்தும் என்பது ஐக்கிய தேசியக் கட்சியின் நினைப்பு.

எனவே பாராளுமன்றம் குழம்பியடித்து ஒரு தெளிவு வந்தால், மீண்டும் தாமே ஆளும் கட்சியாக முடியும் என்றும் மாறாக பாராளுமன்றம் குழம்புவதால் அதனைக் கலைத்து விடுவது என்ற முடிவு அறிவிக்கப்பட்டால், அஃதும் பொதுத் தேர்தலில் தமக்குச் சாதகமாக அமையும் என்றும் ரணில் விக்கிரமசிங்க தரப்பு நம்புகிறது.

இவை ஒருபுறம் இருக்க பாராளுமன்றத்தைக் குழப்பினால் ஜனாதிபதி மைத்திரியின் பாராளுமன்றக் கலைப்புத்தான் நீதிமன்றத்தின் முடிவாகவும் அமையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

ஆக, பாராளுமன்றம் கலைபட்டு தேர்தல் என்ற சூழ்நிலைக்கு நாடு தள்ளப்பட்டால், தமக்கு வெற்றி கிடைத்துவிடும் என்பது தாமரை மொட்டுக்காரர்களின் கணிப்பு.

எதுஎவ்வாறாயினும் தேர்தல் ஒன்றுதான் ஒரே வழி என்றாலும் தேர்தல் உடனடியாக வர வேண்டும் என்பது மகிந்த ராஜபக்ஷ தரப்பின் விருப்பமாக இருக்க,

ரணில் விக்கிரமசிங்க தரப்போ பாராளுமன்றம் சில காலம் இயங்கு நிலையை மகிந்த தரப்பு குழப்புவதை பொதுமக்கள் பார்த்து அதன்மூலம் மகிந்த தரப்புக்கு நன்மதிப்புக் குறைப்பை உண்டு பண்ண வேண்டும.

அதன்பின்னர் தேர்தல் வரவேண்டும் என நினைக்கிறது. இந்த இரு நினைப்பின் காரணமாக பாராளுமன்றத்தையும் அரசியலையும் சீர்படுத்த இரு தரப்பும் விரும்பவில்லை என்பதே யதார்த்தமானது.

## மத்தியஸ்தர் சபை ஆணைக்குழுவினால்
# வவுனியா மாவட்ட விசேட
## காணி மத்தியஸ்தர்களாக 45 பேர் நியமனம்

(குருமன்காடு)

மத்தியஸ்தர்சபைஆணைக் குழுவினால் வவுனியா மாவட்ட விசேட காணி மத்தியஸ்தர்களாக 45 பேருக்கு நியமனம் வழங்கப்பட்டது.

இந்நிகழ்வு நீதி அமைச்சின் வவுனியா மாவட்ட மத்தியஸ்த பயிற்சி உத்தியோகத்தர் எஸ்.விமலராஜா தலைமையில் மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் நேற்று இடம்பெற்றது.

எல்.எல்.ஆர்.சீ அறிக்கையின் பரிந்துரைக்கு அமைவாக வவுனியா மாவட்ட காணி பிணக்குகளை தீர்க்கும் முகமாக நீதி அமைச்சின் கீழ் மத்தியஸ்தர் சபை ஆணைக்குழுவினால் விசேட காணி மத்தியஸ்தர் சபை உறுப்பினர்களுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டு நேர்முகத்தேர்வு இடம்பெற்று மத்தியஸ்தர்களாக தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்களுக்கு பயிற்சிகள் வழங்கப்பட்டிருந்த நிலையில் தெரிவு செய்யப்பட்ட 45 விசேட காணி மத்தியஸ்தர் சபை உறுப்பினர்களுக்கும் இதன்போது நியமனம் வழங்கப்பட்டது. இதன் தவிசாளராக இ.நவரட்ணமும் தெரிவு செய்யப்பட்டிருந்தார்.

இந்நிகழ்வில் மத்தியஸ்தர் சபை ஆணைக்குழுவின் தலைவர் இளைப்பாறிய நீதியரசர் கெக்ரர் எஸ் யாப்பா, மத்தியஸ்த சபை ஆணைக் குழுவின் ஆணையாளர் நிமல் திசநாயக்கா, மத்தியஸ்தர் சபை ஆணைக் குழுவின் ஆணையாளர் எம். சோமசுந்தரம், மத்திய சபை ஆணைக்குழுவின் செயலாளர் ரஜனீ அத்தபத்து, மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் தி.திரேஸ்குமார், மத்தியஸ்தர் சபை ஆணைக் குழுவின் ஆலோசகரும் சட்டத்தரணியுமான எம். திருநாவுக்கரசு, ஆசியான் நிறுவனத்தின் நிகழ்ச்சி திட்ட இணைப்பாளர் வூம். ஜயந்த, மத்தியஸ்தர் சபை நிர்வாக உத்தியோகத்தர் மற்றும் மத்தியஸ்தர் சபை உறுப்பினர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (2-250)

## முல்லைத்தீவில் காணப்படும் பல்வேறுபட்ட பிணக்குகளுக்கு சட்ட ரீதியில் தீர்வு காண்பது தொடர்பில் கலந்துரையாடல்

(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு மாவட்டத்தில் காணப்படும் பிணக்குகள் மற்றும் வன்முறைச் சம்பவங்கள் போன்றவற்றிற்கு சட்டரீதியில் தீர்வு காண்பது தொடர்பில் கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றுள்ளது.

இந்த கலந்துரையாடலானது நேற்று முன்தினம் முல்லைத்தீவு - கள்ளப்பாடு வடக்கு பொதுநோக்கு மண்டபத்தில் நடைபெற்றுள்ளது.

மேலும் இந்தக் கலந்துரையாடலில் முல்லைத்தீவு மாவட்டத்தில் காணப்படும் பல்வேறுபட்ட காணிப் பிணக்குகளுக்கு தீர்வு காணபது தொடர்பிலும் மாவட்டத்திலுள்ள சமூகங்களின் மத்தியில் நிலவுகின்ற ஏனைய வன்முறைச் சம்பவங்கள், பிணக்குகள் என்பவற்றுக்கு சட்டரீதியில் எவ்வாறு தீர்வு காண்பது என்பது தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டது.

இந்த கலந்துரையாடலில் முல்லைத்தீவு மாவட்ட சட்டத்தரணிகள் சங்கத்தைச் சேர்ந்த சட்டத்தரணிகள் சிலரும் முன்னாள் வடக்கு மாகாணசபை உறுப்பினர் து.ரவிகரன், கரைதுறைப்பற்று பிரதேச சபை உறுப்பினர்களான சி.லோகேஸ்வரன், த.அமலன் மற்றும் முல்லைத்தீவு மாவட்டத்தின் பல கிராமங்களைச் சேர்ந்த பொது அமைப்பின் சார்பாளர்கள் என பலரும் கலந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (2-281)

## கேப்பாபிலவு கொட்டடி விநாயகர் ஆலயத்தில்
# கடந்த பத்து வருடங்களின் பின்னர் விநாயகர் சஷ்டி விரதம் அனுஷ்டிப்பு

(பனிக்கன்குளம்)

இராணுவத்தினரால்கையகப்படுத்தப்பட்டிருந்த கேப்பாபிலவு கொட்டடி விநாயகர் ஆலயம் கடந்த பத்து வருடங்களின் பின்னர் விநாயகர் சஷ்டி விரத விழாவை முனனிட்டு கடநத 18ஆம்திகதியன்று இரவு 7 மணிக்கு வற்றாப்பளை கண்ணகி அம்பாள ஆலய பிரதான குருக்களால் கிராம சாந்தி நிறைவுற்றது.

அன்றைய தினம் காலை 9 மணி தொடக்கம் முற்பகல் 10 மணி வரை சாந்தி முகூர்த்த பூஜை ஆராதனைகள் கிரியைகள் என் பன இடம்பெற்றது. தொடர்ந்து 21 நாட்கள் பூசைகள் இடம் பெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (2-281)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை ஞாயிற்றுக் கிழமை காலை 8.30 மணியிலிருநது மாலை 5.30 மணி வரை காலை 8 மணியிலிருந்து மாலை 6 மணி வரை யாழ்.பிரதேசத்தில அராலி, வட்டுக்கோட்டை ஒரு பகுதி, முத்துமாரி அம்மன் கோயிலடி, கல்வயல், மட்டுவில், வீரகேணி, குருநகர், பழைய பூங்கா வீதியின் ஒருபகுதி, பாசையூர், கொழும்புத்துறை வீதியின் ஒருபகுதி, இலந்தைக்குளம், புங்கன்குளம் வீதி, சந்தன மாதா கோவில் வீதி, வலன்புரம், துண்டி, நெடுங்குளம், மணியந தோட்டம், கெலன் தோட்டம், பெரிய தோட்டம், உதயபுரம், குருசோ வீதி, அச்சுக்கூட வீதி, பிரதான வீதியின் ஒரு பகுதி ஆகிய இடங்களிலும் கிளிநொச்சி பிரதேசத்தில் வற்றாப் பளை, நாவற்காடு, கேப்பாப் பிலவு, முல்லைத்தீவு விமானபடை I, மற்றும் II, 59ஆவது படைப்பிரிவு, (14ESR 1 மற்றும் 14ESR 2), SHFQ வற்றாப்பளை, 12 VIR இராணுவ முகாம், 16 ESR இராணுவ முகாம ஆகிய இடங்களிலும் மன்னார் பிரதேசத்தில முருங்கனிலிருந்து அரிப்பு வரை, சிலாவத்துறை கடற்படை முகாம், முள்ளிக்குளம் கடற்படை முகாம் ஆகய பிரதேசங்களிலும் மின் தடைப்படும். (இ-9)

## வருடாந்த பரிசளிப்பு விழா

(பூநகரி)

கிளி/ முழங்காவில் மகா வித்தியால (தேசிய பாடசாலை) வருடாந்த பரிசளிப்பு விழா இன்று சனிக்கிழமை காலை 9 மணிக்கு வித்தியாலய முதல்வர் ப.ஆனந்தராஜா தலைமையில் பாடசாலை வளாகத்தில் நடைபெறும்.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக கொழும்பு பத்தரமுல்லை கல்வியமைச்சின் தமிழ் பாடசாலைகள் அபிவிருத்தி கல்விப் பணிப்பாளர் சு.முரளிதரன் கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

சிறப்பு விருந்தினர்களாக கிளிநொச்சி மாவட்ட வலயக் கல்விப் பணிப்பாளர் ரி. ஜோன் குயின்ரன், ஒய்வு நிலை வலயக் கல்விப் பணிபாளரும முன்னாள் மாகாண சபை உறுப்பினருமான ப.அரியரத்தினம் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

கௌரவ விருந்தினர்களாக இதுவரை காலமும் வித்தியாலயத்தில் அதிபர்களாக கடமையாற்றிய அனைவரும் கலந்து கொள்ளவுள்ளனர். (2-84)

### வடமாகாண மரநடுகை மாதம் கார்த்திகை 2018

'மரங்களை நடுகை செய்வது மனிதர்களில் அழகையும் உயர்ந்த நற்பண்புகளையும் குடிகொள்ளச் செய்யும் ஒன்றாகும்.'

ஜுஸ்டேர்லிங்மோர்ட்டன் ( அமெரிக்க அரசியலாளர்)

## சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்



- பகை, பொறாமை போன்ற தீய எண்ணங்களை வெளியிட்டால், அவை வட்டியும் முதலுமாக மீண்டும் தோன்றிய இடத்திற்கே திரும்பி வந்து விடும்.
- நன்மை செய்வதே சமயவாழ்வின் சாரம்.
- எல்லாவற்றையும் செவி சாய்த்துக் கேளுங்கள். ஆனால், உங்களுக்கு எது நல்லதென்று தோன்றுகிறதோ அதை மட்டும் உறுதியாகப் பிடித்துக் கொள்ளுங்கள்.
- உண்மை எங்கே இழுத்துச் சென்றாலும் அஞ்ச வேண்டாம். அதையே துணிச்சலுடன் பின்பற்றுங்கள். ஒருபோதும் கோழையாக இருக்காதீர்கள்.
- தன்னை அடக்கிப் பழகியவன் வேறு எதற்கும் வசப்பட மாட்டான். அத்தகையவனே உலகில் நன்றாக வாழும் தகுதி பெற்றவன்.
- எந்த வேலையாக இருந்தாலும், அதை தன் விருப்பத்திற்கு ஏற்றதாக மாற்றிக் கொள்பவனே அறிவாளி.
- அன்புடைய மனிதனே வாழ்கிறான். சுயநலம் கொண்டு மற்றவர்கள் மீது வெறுப்பு கொள்பவன் செத்துக் கொண்டிருக்கிறான் என்பது பொருள்.

# மகளிர் உலகக் கிண்ணம்

# இந்திய அணியை வீழ்த்தி இறுதியில் இங்கிலாந்து







மகளிர் இருபது-20 உலகக் கிண்ணத்தின் அரையிறுதிப் போட்டியில் இந்திய அணி 8 விக்கெட் வித்தியாசத்தில் இங்கிலாந்திடம் தோல்வியைத் தழுவியது.

மேற்கிந்தியத் தீவுகளில் நடைபெற்று வரும் மகளிர் இருபது-20 உலகக் கிண்ணத் தொடரின் அரையிறுதி ஆட்டத்தில் இந்தியா-இங்கிலாந்து அணிகள் மோதின.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் ஆடிய இந்திய அணியில், தொடக்க வீராங்கனை ஸ்மிருதி மந்தனா அதிரடியாக 23 பந்துகளில் 34 ஓட்டங்கள் எடுத்து அவுட் ஆனார். அதன் பின்னர் தனியா பாட்டியா 11 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார்.

பின்னர் வந்த ஜெமிமா ரோட்ரிகஸ் நிதான ஆட்டத்தை வெளிப்படுத்தினார். அணியின் ஸ்கோர் 89 ஆக உயர்ந்தபோது 26 ஓட்டங்களில் ஜெமிமா ஆட்டமிழந்தார். அதன் பிறகு வந்த வீராங்கனைகள் இங்கிலாந்தின் பந்துவீச்சை சமாளிக்க முடியாமல் அடுத்தடுத்து ஆட்டமிழந்தனர்.

இதனால் இந்திய அணி 19.3 ஓவர்களில் 112 ஓட்டங்களுக்கு சுருண்டது. கப்டன் ஹர்மன்பிரீத் 16 ஓட்டங்கள் மட்டுமே எடுத்தார். இங்கிலாந்து தரப்பில் ஹீதர் நைட் 3 விக்கெட்டுகளையும் சோபி மற்றும் கார்டன் ஆகியோர் தலா 2 விக்கெட்டுகளையும் வீழ்த்தினர்.




இதனைத் தொடர்ந்து விளையாடிய இங்கிலாந்து அணியில், தொடங்க வீராங்கனைகள் வியாட் மற்றும் பீமாண்ட் இருவரும் சொற்ப ஓட்டங்களில் வெளியேறினர். அதன் பின்னர் வந்த எமி எலன் ஜோன்ஸ்-நடாலி ஜோடி அபாரமாக விளையாடி அணியை வெற்றிப்பாதைக்கு அழைத்துச் சென்றது.

எமி எலன் 47 பந்துகளில் ஒரு சிக்சர், 3 பவுண்டரிகளுடன் 53 ஓட்டங்களும் நடாலி 38 பந்துகளில் 5 பவுண்டரிகளுடன் 52 ஓட்டங்களும் விளாசினர். இதன்மூலம் இங்கிலாந்து அணி 17.1 ஓவரில் 2 விக்கெட் இழப்புக்கு 116 ஓட்டங்கள் எடுத்து 8 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

இந்த வெற்றியின் மூலமாக இங்கிலாந்து அணி இறுதிப்போட்டிக்கு முன்னேறியது. (க)

# கடவுளின் பரிசை கையிலணைத்த சானியா




இந்தியப் பிரபல டென்னிஸ் வீராங்கனை சானியா மிர்ஸா தன்னுடைய குழந்தையைக் கையில் அணைத்தபடி இருக்கும் புகைப்படத்தினை இணையத்தில் பதிவிட்டுள்ளார். பிரபல டென்னிஸ் வீராங்கனை சானியா மிர்ஸா பல்வேறு தடைகளைத் தாண்டிக் கடந்த 2010 ஆம் ஆண்டு பாகிஸ்தான் கிரிக்கெட் வீரர் சோயப் மாலிக்கை திருமணம் செய்துகொண்டார்.

திருமணத்திற்குப் பிறகு பாகிஸ்தானிற்காக விளையாட வேண்டும் எனப் பலரும் சர்ச்சையைக் கிளப்பி வந்த நிலையில், இந்தியாவிற்காகத் தொடர்ந்து விளையாடுவேன் என உறுதியளித்தார்.

அதன்படி தொடர்ந்து விளையாடி வந்த சானியாவிற்குக் கடந்த 30 ஆம் திகதியன்று ஐதராபாத் வைத்தியசாலையில் ஆண் குழந்தை பிறந்தது. குழந்தைக்கு "இஸான்" எனப் பெயரிட்டனர். இதற்கு அரபு மொழியில் கடவுளின் பரிசு என அர்த்தமாம்.

இந்த நிலையில் தன்னுடைய குழந்தையைக்கையில் அணைத்தபடி, "தருணங்கள்" மற்றும் "அல்மதுல்லா" எனக் குறிப்பிட்ட புகைப்படத்தினை சானியா தன்னுடைய இன்ஸ்டாகிராம் பக்கத்தில் பதிவிட்டுள்ளார். (க)

வலம்புரி SPORTS விளையாட்டுச் செய்திகள்

# ஜி.எஸ்.டி.வரியினால் தோற்றுப்போன இந்தியா

## சேவாக் கிண்டல் டுவிட்



அவுஸ்திரேலிய அணிக்கு எதிரான முதல் இருபது-20 போட்டியில் இந்தியா தோல்வியடைந்த காரணம் குறித்து வீரேந்திர சேவாக் கிண்டலாக ஒரு பதிவை வெளியிட்டுள்ளார்.

இந்திய - அவுஸ்திரேலிய அணிகள் இடையில் நடந்த முதலாவது போட்டியில் அவுஸ்திரேலிய அணி 16.1 ஓவர்கள் ஆடி முடித்தபோது மழை குறுக்கிட்டதால் போட்டி 17 ஓவர்களாக குறைக்கப்பட்டது. 17 ஓவர்களில் 158 ஓட்டங்கள் எடுத்தது அந்த அணி. டக்வொர்த் - லெவிஸ் - ஸ்டெர்ன் முறைப்படி இந்திய அணியின் இலக்கு 17 ஓவர்களில் 174 என மாற்றப்பட்டது.

இதை சேஸ் செய்த இந்தியா 17 ஓவர்கள் முடிவில் 169 ஓட்டங்கள் மட்டுமே எடுத்தது. 4 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தோல்வியைத் தழுவியது.

அவுஸ்திரேலியாவை விட இந்தியா அதிக ஓட்டங்கள் எடுத்தும் டி.எல்.எஸ். முறைப்படி இந்தியா தோல்வி அடைந்தது.

இது குறித்து இந்திய அணியின்ஜாம்பவான்சேவாக் தனது டுவிட்டர் பக்கத்தில், இந்தியா அவுஸ்திரேலியாவை விட அதிகம் ஸ்கோர் எடுத்தும் தோல்வி அடைந்துள்ளது. அந்த அணியின் ஸ்கோருடன் ஜி.எஸ்.டி சேர்த்து விட்டார்கள் எனக் கூறியுள்ளார்.

அவுஸ்திரேலியா 17 ஓவர்களில் எடுத்த 158 ஓட்டங்களோடு 15 ஓட்டங்களை டி.எல்.எஸ். முறைப்படி சேர்த்துக் கொண்டதை தான் ஜி.எஸ்.டி போட்டு விட்டார்கள் எனச் சேவாக் கிண்டலடித்துள்ளார். (க)



சர்வதேச மாற்றுத்திறனாளிகள் தினத்தையொட்டி மாவட்ட விளையாட்டு நிகழ்வு கிளிநொச்சியில் இடம்பெற்றது. கிளிநொச்சி மாவட்ட சமூக சேவைகள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற குறித்த நிகழ்வில் மாற்றுத் திறனாளிகள் பலரும் போட்டியில் பங்கு கொண்டனர். பிரதேச செயலக ரீதியில் போட்டியில் தெரிவாகி மாவட்ட மட்டப் போட்டிக்குத் தகுதி பெற்ற போட்டியாளர்கள் குறித்த போட்டியில் பங்குபற்றியிருந்தனர். இதன்போது மாற்றுத் திறனாளிகளிற்கான விளையாட்டுக்கள் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது. (க)

# மேற்கிந்தியத்தீவை துவம்சம் செய்து இறுதிக்கு முன்னேறியது அவுஸ்திரேலியா




பெண்கள் 20 ஓவர் உலகக் கோப்பை கிரிக்கெட் போட்டியில் அரை இறுதியில் நடப்பு சம்பியன் மேற்கிந்தியத்தீவுகள்-அவுஸ்திரேலிய அணிகள் மோதின. முதலில் பட்டிங் செய்த அவுஸ்திரேலியா 20 ஓவரில் 5 விக்கெட்டுக்கு 142 ஓட்டங்கள் எடுத்தது.

அடுத்து விளையாடிய மேற்கிந்தியத்தீவுகள் அணி 17.3 ஓவரில் 71 ஓட்டங்களுக்கு சுருண்டது. இதன் மூலம் அவுஸ்திரேலியா 71 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்று இறுதிப் போட்டிக்கு தகுதி பெற்றது. 3 முறை சம்பியனான (2010, 2012, 2014) அவுஸ்திரேலியா 5 ஆவது முறையாக இறுதிப் போட்டிக்கு தகுதி பெற்றது. கடந்த (2016) உலகக்கோப்பை இறுதிப் போட்டியில் மேற்கிந்தியத் தீவுகளிடம் தோற்றதற்கு அவுஸ்திரேலியா தக்க பதிலடி கொடுத்துள்ளது. (க)

## அன்பு வாசகர்களே!

உங்கள் பிரதேச விளையாட்டுச் செய்திகளை
Valampurisp@gmail.com அல்லது 076 636 3378
என்னும் Viber இலக்கத்துக்கு அனுப்பி வையுங்கள்.
உங்களை உலகறியச் செய்ய நாம் தயார்

## மாவீரரை நினைவுகூர தடை...

காணியில் முன்னாள் பாராளு மன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் என்பவரால் நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

2011ஆம் ஆண்டு நடைமுறைக்கு வந்த பயங்கரவாத தடைச் சட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பு இலங்கையில் தடை செய்யப்பட்ட பயங்கரவாத அமைப்பாகும். அந்த அமைப்பில் இருந்து உயிரிழந்த உறுப்பினர்களை நினைவு கூருவதற்காக நவம்பர் 27ஆம் திகதி மாவீரர் நாள் கடைப்பிடிக்கப்படுகிறது.

எனவே இலங்கை தண்டனைச் சட்டக்கோவை 120ஆம் பிரிவின் கீழ் வெறுப்பைத் தூண்டுதல் அல்லது எத்தனித்தல் என்ற ஏற்பாடுகளின் கீழ் நிகழ்வுக்கு தடை உத்தரவு வழங்க வேண்டும்.

அத்துடன், நிகழ்வில் தடை செய்யப்பட் பயங்கரவாத அமைப்பான தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் கொடிகள், இலச்சினைகள் என்பவையும் பயன்படுத்த தடை உத்தரவை மன்று வழங்க வேண்டும் என கோப்பாய் பொலிஸார் யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் கடந்த புதன்கிழமை வழக்குத் தாக்கல் செய்தனர்.

குறித்த வழக்கு விசாரணை நேற்று எடுத்துக்கொள்ளப்பட்டது. அதில் "வீரசிங்கம் சிறிதரன் என்பவருடைய காணியில் தடை செய்யப்பட்ட இயக்கம் ஒன்றின் சின்னங்கள், கொடிகள் மற்றும் வரைபடங்கள் பயன்படுத்தப்பட்டு நிகழ்வு நடத்தப்படவுள்ளதாக பொலிஸாரின் புலன் விசாரணையின் அடிப்படையில் அறியப்பட்டுள்ளதாக மனுவில். குறிப்பிடப்பட்டுள்ளது. எனினும் குற்றம் இடம்பெற்றதாக பொலிஸாரால் குறிப்பிடப்படவில்லை.

எனவே வீரசிங்கம் சிறிதரன் மற்றும் அவர் சார்ந்தவர்கள் அந்தக் காணியில், பயங்கரவாத தடைச் சட்டத்தில் ஒழுங்குமுறைகள் வர்த்தமானி அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் கொடிகள், சின்னங்கள் மற்றும் வரைபடங்களைப் பயன்படுத்தி நிகழ்வுகளை நடத்த தடைவிதிக்கப்படுகிறது என நீதவான் கட்டளை வழங்கினார். (3-9)

## மண்டைதீவில் முன்பள்ளி திறப்புவிழா

(மண்டைதீவு)

மண்டைதீவு மகா வித்தியாலய வளாகத்தில் அமைக்கப்பட்ட முன்பள்ளி கட்டிடத் திறப்புவிழா இன்று சனிக்கிழமை முற்பகல் 11.55 மணியளவில் இடம்பெறவுள்ளது.

மண்டைதீவு மக்கள் முன்னேற்ற ஒன்றியத்தின் காப்பாளர் வே.ஞானோதரன் தலைமையில் இடம்பெறும் இந் நிகழ்வில் வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் எஸ்.சத்தியசீலன் பிரதம விருந்தினராக கலந்துகொள்வார். (3)

## வட, கிழக்கு மக்களுக்கு...

கள் கொள்கை ரீதியானவையே ஒளிய பிரபல்யம் பெறச் செய்பவைகள் அல்ல எனவும் தெரிவித்துள்ளார்.

வாராந்த கேள்வி பதிலில், பொருளாதார அபிவிருத்தியில் உங்களுக்கு நாட்டமில்லை. வெறுமனே அரசியல் ரீதியாகவே பேசிக் கொண்டிருக்கின்றீர்கள். வெறும் பேச்சு மட்டுமே. காரியம் எதுவும் சாதிக்கவில்லை என்று உங்கள் பற்றி விமர்சனங்கள் எழுந்துள்ளன என கேட்கப்பட்ட கேள்விக்கு.

மேலும் தெரிவிக்கையில்,

வடகிழக்குத் தமிழ் மக்கள் மற்றைய சிறுபான்மையோர் போலல்லாது தமது முன்னுரிமைகளை (Priorities) முன்னிலைப்படுத்த வேண்டிய ஒருகடப்பாடு அவர்களுக்கு உண்டு.

வடகிழக்கு மக்களுக்கு உடனே தேவையானது என்ன? என் கருத்துப்படி அரசியல் தீர்வே முக்கியம்.

பொருளாதார அபிவிருத்தி எமது மக்களின் வாழ்க்கை நிலையைப் பொருளாதார ரீதியாக மேம்படுத்தும். ஆனால் அரசியல் ரீதியாக எம்மைத் தொடர்ந்து இரண்டாந்தரக் குடிமக்களாகவே வாழ இடம் அளிக்கும்.

எமது உரிமைகள், உரித்துக்கள் படிப்படியாக எம்மிடம் இருந்து பறிக்கப்பட்டு வருகின்றன. அதற்கு முற்றுப்புள்ளி போடாமல் பொருளாதார அபிவிருத்தியே முக்கியம் என்று அதனுள் முழுமையாக நுழைந்து விட்டோமானால் தெற்கின் ஊடுறுவலைக் கட்டுப்படுத்த முடியாமல் போய்விடும். இப்பொழுதே அது நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. பொருளாதார அபிவிருத்தியின் போது அது பன் மடங்கு அதிகமாகும்.

உதாரணம் ஒன்றைத் தருகின்றேன். ஒரு இலட்சத்துக்கும் அதிகப்படியான அரச படையினர் வட மாகாணத்தில் நிலைநிறுத்தப்பட்டுள்ளார்கள். எமது மக்களைத் துன்புறுத்தி, கொன்று குவித்து, உடமைகளை இல்லாதாக்கி, சிலரை முடவர்கள் ஆக்கி, கண் இழந்தவர்கள் ஆக்கி, நடைப்பிணங்கள் ஆக்கிய இராணுவத்தினர் தமக்குக் குடியிருக்கக் காணிகள் கேட்கின்றார்கள்.

அவற்றைத்தமது பூரண உடமைகளாக்கக் கேட்கின்றார்கள். மக்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுக்கப் போகின்றோம், வாழ்வாதாரங்கள் கொடுக்கப் போகின்றோம் என்கின்றார்கள்.

ஆனால் முதலமைச்சராக நான் இருந்த வரையில் அவ்வாறான கோரிக்கைகளை நிராகரித்துள்ளேன். இராணுவத்தினரை வெளியகற்றவே எமக்கு மக்களின் ஆணை கிடைத்தது. அவர்களை நிரந்தரமாக இங்கு குடியிருக்கச்செய்ய அல்ல.

சிலர் கேட்கின்றார்கள் ஏன் இராணுவத்தினரைப் பகைத்துக் கொள்கின்றீர்கள்? அவர்கள் கேட்கும் காணிகளைக் கொடுத்தால் என்ன? என்று கேட்கின்றார்கள்.

அதற்கு நான் கூறும் பதில் இராணுவத்தினருடன் எனக்குப் பகை ஏதும் இல்லை. ஆனால் அவர்களின் கோரிக்கைகளுக்கு இடம் அளித்தால் வனாந்தரத்தில் மனிதன் படுக்கும் கூடாரத்தினுள் ஒட்டகத்தை உள்நுழைய விட்ட கதையாகிவிடும். காலக்கிரமத்தில் ஒட்டகம் உள்நுழைய மனிதன் வெளியே அப்புறப்படுத்தப்பட்டு விடுவான்.

இராணுவத்தினர் தமது போர்க் கடமைகள் முடிவுற்றதும் அவர்களின் தலைமையகப் பாசறைகளுக்குத் திரும்பியிருக்க வேண்டும். அவ்வாறு திரும்பாது 10 வருடங்களாக இங்கு தரித்து நிற்பது எம்மைக் கண்காணித்து எம்மைத் தமது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கவே.

நேரடியாக எமது புலம்பெயர் தமிழ் மக்கள் மாகாண சபைகளுடன் சேர்ந்து முதலீடு செய்வதை அரசாங்கம் விரும்பவில்லை. அதனால்தான் முதலமைச்சர் நிதியத்தை ஐந்து வருடகாலமாக மத்திய அரசாங்கங்கள் முடக்கி வைத்துள்ளன. ஆகவே இந்தப் பொருளாதார அபிவிருத்தி என்பதன் தாற்பரியத்தை நாங்கள் நன்கு புரிந்து கொள்ள வேண்டும்.

வட கிழக்கின் பொருளாதார விருத்தியில் நான் மிகவும் பற்றுறுதியுடையவனாக இருக்கின்றேன். ஆனால் எவ்வாறான முதலீடுகள், எவற்றிற்கான முதலீடுகள், யாரால் கொண்டுவரப்படும் முதலீடுகள், அவற்றின் தூரகாலப் பாதிப்புக்கள் என்ன என்பன போன்ற பலவற்றிலும் கண்ணும் கருத்துமாய் உள்ளேன்.

பாரிய இடப் பெயர்வுகள் கிராமங்களில் இருந்து நகரப்புறத் தொழிற்சாலைகள் நோக்கி இடம் பெறுவதை நாங்கள் விரும்பவில்லை. இருக்கும் இடத்தில் இருந்தே மக்கள் பொருளாதார விருத்தி பெற நாங்கள் திட்டங்களைத் தீட்டியுள்ளோம். அத் திட்டங்களை நடைமுறைப்படுத்தியும் வருகின்றோம். சிறுகச் சிறுகச் செய்து மக்கள் நலனைப்பெருகச்செய்யவே விரும்புகின்றோம்.

பெரியவைகளைத் தகாதவர்களிடம் இருந்து உள்ளேற்று எமது நிலைகளில் இருந்து நாம் காற்றடித்துச் செல்லப்பட ஆயத்தமாக இல்லை. என்னுடைய காரியங்கள் கொள்கை ரீதியானவையே ஒளிய பிரபல்யம் பெறச் செய்பவைகள் அல்ல என மேலும் தெரிவித்தார். (3-9)

## எனக்கு எதிராக பிரேரணை...

சர்ச்சைகளுக்கு பின்னர் நேற்று கூடிய பாராளுமன்றில் தெரிவுக் குழு உறுப்பினர்கள் தொடர்பில் வாக்கெடுப்பு நடாத்தப்பட்டு 121 வாக்குகளால் நிறைவேற்றப்பட்டது. நேற்று இரவு பாராளுமன்ற செயற்பாடு குறித்து சபாநாயகர் காரியாலயம் வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே சபாநாயகர் மேற்கண்டவாறு நேற்றைய பாராளுமன்ற அமர்வின் போது தெரிவித்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது. (3)

## அரசியலமை...

கட்சி தெரிவித்தது.

பாராளுமன்றத்தில் அரசாங்கத்துக்கு எதிராக எத்தனை நம்பிக்கையில்லா பிரேரணை நிறைவேற்றப்பட்டாலும் நாமே அரசாங்கம் எனவும் அவர்கள் குறிப்பிட்டனர்.

பாராளுமன்றத்தில் நேற்று சபையிலிருந்து வெளிநடப்பு செய்த பின்னர் பாராளுமன்ற கட்டிடத் தொகுதியில் ,அவர்களால் நடத்தப்பட்ட செய்தியாளர் சந்திப்பிலேயே இவ்வாறு தெரிவித்தனர். (3)

## இரு இளைஞர்...

கைது செய்துள்ளனர்.

கடந்த 1ம் திகதி சந்தை வீதி கொடிகாமத்தில் உள்ள சிறு வர்த்தக நிலையத்தில் 5 ஆயிரம் ரூபாய் போலி நாணயத்தாளை கொடுத்து 500 ரூபாய்க்கு சிகரட் மற்றும் மீள்நிரப்பு அட்டை என்பவற்றை பெற்றுக் கொண்டு 4500 ரூபாய் மிகுதிப் பணத்தினை பெற்றுக் கொண்டு சென்றுள்ளனர்

இதே 5 ஆயிரம் ரூபாய்ப் பணத்தினை வர்த்தக நிலைய உரிமையாளர். மொத்த பொருள் கொள்வனவு நிலையமொன்றில் பணத்தினை வழங்கிய போது அது போலி நாணயத்தாள் என்று தெரிய வந்துள்ளது.

இது தொடர்பாக கொடிகாமம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது.

இது போன்ற சம்பவம் ஒன்று 19ம் திகதி அன்று கொடிகாமம் எரிபொருள் நிலையத்தில் இடம் பெற்றுள்ளது. எரிபொருள் நிரப்பு நிலையத்தில் உள்ள சீ.சீ.ரீ.வி கமராவில் பதிவுகளை பரிசோதித்த பொலிஸார் இரண்டு சம்பவத்துடன் தொடர்புடைய நபர்கள் ஒரே கும்பலைச் சேர்ந்தவர்கள் என்பதனை அறிந்து தொடர்ந்து விசாரணையை நடத்தியதன் மூலம் மந்துவில் கிழக்குப் பகுதியைச் சேர்ந்த இருவரை நேற்று மாலையில் கைது செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

குறித்த சந்தேக நபர்களை இன்று சாவகச்சேரி நீதிமன்றத்தில் முற்படுத்த நடவடிக்கைகளை கொடிகாமம் பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (3-89)

## சபாநாயகருக்கு...

சபாநாயகருக்கு எதிராக ராஜபக்ஷக்களின் சகாவான முன்னாள் கடற்படைத் தளபதி ரியட் அட்மிரல் சரத் வீரசேகர தாக்கல் செய்த மனு வரும் டிசம்பர் 4,5 மற்றும் 6ஆம் திகதிகளில் விசாரணைக்கு எடுக்கப்படும் என்று அறிவித்து உயர் நீதிமன்றம் மனுவை ஒத்திவைத்தது. (3)

## ஞானசார...

ள்ளார்.

கொழும்பு மேல் நீதிமன்றத்தினால் வழங்கப்பட்ட தீர்ப்பொன்றை எதிர்த்து சட்டமா அதிபரால் இந்த மனு தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

கடந்த 2008 ஆம் ஆண்டு கொஸ்வத்த - தலஹேன பிரதேசத்தில் உள்ள கல்வாரி தேவஸ்தானத்தினுள் பலவந்தமாக நுழைந்து, சேதங்களை ஏற்படுத்தியமை தொடர்பில் கலகொட அத்தே ஞானசார தேரர் உள்ளிட்ட 13 பேர் மேல் நீதிமன்றத்தினால் விடுதலை செய்யப்பட்டிருந்தனர்.

மேல் நீதிமன்றத்தினால் வழங்கப்பட்ட இந்த தீர்ப்பை எதிர்த்து சட்டமா அதிபரால் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது. அத்துடன், இந்த மனுவிற்கு எதிர்த்தரப்பினரால் எதிர் மனு தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

இந்த நிலையில், குறித்த வழக்கினை தாங்கள் தொடர்ந்தும் முன்னெடுத்து செல்லவில்லையென சட்டமா அதிபர் சார்பில் மேன்முறையீட்டு நீதிமன்றத்திற்கு தெரியப்படுத்தப்பட்டது.

இதனையடுத்து மேன்முறையீட்டை விலக்கிக்கொள்ள நீதிமன்றம் அனுமதி வழங்கியுள்ளதாக தெரியவருகிறது. (3)

## இலங்கையின் அரசமைப்...

சிறிசேன இதனை தெரிவித்துள்ளார்.

சபாநாயகர் கரு ஜெயசூரியவை பாராளுமன்ற நிலையியல் கட்டளைகளை பின்பற்றுமாறு நான் தெளிவாககேட்டுக்கொண்டேன் என தெரிவித்துள்ள சிறிசேன இலத்திரனியல் முறையை பயன்படுத்தி வாக்கெடுப்பை நடத்துமாறும் அல்லது பெயர்மூல வாக்கெடுப்பை நடத்துமாறும் கேட்டுக்கொண்டதாகவும் சிறிசேன தெரிவித்துள்ளார். இதற்கு பதிலளித்துள்ள பொது நலவாயத்தின் செயலாளர் நாயகம் ஆசியாவின் பழமையான ஜனநாயக நாடு என்ற அடிப்படையில் இலங்கை ஜனநாயகத்தை பின்பற்றுவதை பொதுநலவாயம் முக்கியமான விடயமாக கருதுகின்றது என தெரிவித்தார் என்று ஜனாதிபதி ஊடக பிரிவு தெரிவித்துள்ளது.

இலங்கை தற்போதைய நெருக்கடியை உரிய முறையில் தீர்வை காணும் என்ற நம்பிக்கையை அவர் வெளியிட்டுள்ளார். (3)

## தெரிவுக்குழு...

விடுதலை முன்னணி மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் இருந்து தலா ஒரு உறுப்பினருமாக தெரிவுக் குழுவில் இடம்பெறுவர் என சபாநாயகர் அறிவித்தார்.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியிலிருந்து நாடாளுமன்றத் தெரிவுக் குழுவுக்கு 7 பேரின் பெயர் சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிலையில், ஐவர் மாத்திரமே தெரிவுசெய்யப்பட்ட நிலையில், அது தொடர்பில் சர்ச்சை கிளம்பியது. அதனை தொடர்ந்து தினேஸ் குணவர்த்தன, உதய கம்மன்பில, டக்ளஸ் தேவானந்தா, விமல் வீரவன்ச ஆகியோர் ஆவேசமாக உரையாற்றிய பின்னர், ஆளுந்தரப்பு சபையிலிருந்து வெளியேறியது.

அதனை தொடர்ந்து ஐ.தே.க மற்றும் ஜேவிபியின் கோரிக்கைக்கு அமைய- தெரிவுக்குழு நியமனத்தை அங்கீகரிப்பதற்கான வாக்கெடுப்பு நடத்தப்பட்டது. இதன போது, 121 வாக்குகள் ஆதரவாகக் கிடைத்தன. எந்தவொரு வாக்கும் எதிராக அளிக்கப்படவில்லை.

தெரிவுக்குழு நியமனத்தை தொடர்ந்து பாராளுமன்றம் ஒத்திவைக்கப்படுவதாக சபாநாயகர் கரு ஜயசூரிய தெரிவித்துள்ளார். அதன்படி, அடுத்த பாராளுமன்ற அமர்வுகள் எதிர்வரும் 27ஆம் திகதி பிற்பகல் 1.30 மணிக்கு கூட்டப்படும் என சபாநாயகர் அறிவித்தார். (3)

### தன நிதானய

திகதி 2018-11-23
சீட்டிழுப்பு இலக்கம் 79
ஆங்கில எழுத்து U
வெற்றி இலக்கங்கள் 07 08 62 71

### மஹஜன சம்பத

திகதி 2018/11/23
சீட்டிழுப்பு இலக்கம் 3796
ஆங்கில எழுத்து B
வெல்லப்பட்ட இலக்கங்கள் 7 9 0 5 9 1

### கொவிசெத

திகதி 2018.11.23
சீட்டிழுப்பு இலக்கம் 1952
ஆங்கில எழுத்து N
வெல்லப்பட்ட இலக்கங்கள் 24 32 40 79

### மெகா பவர்

திகதி 23/11/2018
சீட்டிழுப்பு இலக்கம் 309
வெற்றி எழுத்து L
சுப்பர் இலக்கம் 14
வெற்றி இலக்கங்கள் 21 45 50 72

தேசிய லொத்தர் சபை

## தென்மராட்சியில்...

டுள்ளார்.

சாவகச்சேரி பொலிஸாருக்கு கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில் விரைந்து சென்ற பொலிஸார் மறவன்புலவு கடற்கரைப் பிரதேசத்தில் மணல் அகழ்வில் ஈடுபட்ட நபரைக் கைது செய்ததுடன், உழவு இயந்திரத்தினையும் மணலோடு கைப்பற்றியுள்ளனர்.

கைது செய்யப்பட்ட 22 வயதான மறவன் புலவைச் சேர்ந்த நபரை பொலிஸார் நேற்றைய தினம் சாவகச்சேரி நீதிமன்றத்தில் முற்படுத்தியுள்ளனர். (3-30)

www.AusTamilMatrimony.com.au
ஆஸ்திரேலியா, இலங்கை மற்றும் உலக நாடுகளில் வாழும்தமிழ் மணமக்களை இணைக்கும்சேவை.



Register your profile today
Ph: +61 415 150 483
(6499)

## விரைவு பொதிகள் சேவை
விசேட விலை குறைப்பு



DELIVERY IN 3-5 DAYS
(C-4482)
UK- 550 */=Kg
கனடா-900 */=Kg
ஜேர்மனி- 700 */=Kg
நெதர்லாந்து-700 */=Kg
(நிபந்தனைகளுக்குட்பட்டது)
0768226240
V2 TRAVELs
● மானிப்பாய் ● யாழ்ப்பாணம் ● கிளிநொச்சி ● சாவகச்சேரி ● நெல்லியடி ● பருத்தித்துறை ● வல்வெட்டித்துறை

## மணமகள் தேவை
யாழ், இந்து கௌரவ, 1988, சுவாதி நட்சத்திரம், செவ்வாய் தோஷம் அற்ற, கிரக பாவம் 06, CIMA, B.Sc முடித்த கொழும்பில் தனியார் கம்பனியில் பிரதம கணக்காளராக (Chief Accountant) தொழில் புரியும் மணமகனுக்கு மணமகள் தேவை.
(C-4494)
தொடர்புகளுக்கு: 075 028 4640

## வேலைவாய்ப்பு
யாழ் – கொழும்பு செல்லும் கனரக வாகனத்துக்கு வாகன உதவியாளர் (Cleaner) தேவை.
தொடர்புகளுக்கு: 077 027 7365, 077 069 6816
(C-4494)

வெளிநாடு-உள்நாடுகளுக்கான விரைவுப் பொதிகள் சேவை
WESTERN UNION 070 330 5500 WESTERN UNION
அண்ணா பொதிகள் சேவை
976,கே.கே.எஸ் வீதி,நாச்சிமார் கோவிலடி
021 221 5656 யாழ்ப்பாணம் 077 888 9388
பொதிகள் மற்றும் கடிதங்களை துரிதமாகவும், நம்பிக்கையுடனும்,குறைந்த கட்டணங்களுடனும் அனைத்து நாடுகளுக்கும் மிகக் குறுகிய நாட்களுக்குள் அனுப்பிடவும் எம்மை நாடுங்கள்.
3 - 6 நாட்களுக்குள் உங்கள் கைகளில்
வேலணை – அரியாலை – சங்கானை – சுன்னாகம்
கரணவாய் –மீசாலை–கிளிநொச்சி–கனகராயன்குளம்
முல்லைத்தீவு–மன்னார்–வவுனியா–திருகோணமலை
(C-4397)

# ஓராண்டு நினைவலைகள்

தாயின் மடியில்
02 . 05 . 1953



ஆண்டவன் அடியில்
05 . 12 . 2018

## அமரர் இராஜதாஸ் சுமதி

(ராஜா டெக்ஸ், 483/8 தர்மபுரம், பரந்தன்.) திதி: 24/11/2018

குடும்பம் என்னும்
கோயிலுக்கு தெய்வம்
அம்மா நீங்கள்
நெறி தவறாமல்
வாழ்ந்தவர்
அம்மா நீங்கள்
பாசமாக நீங்கள்
வளர்த்த பிள்ளைகள்
அம்மா நாங்கள்!
எல்லா பிறப்பிலும்
எங்களுக்கு அம்மாவாக
வரவேண்டும் தாங்கள்!



(சி-4486)

திகுவல்:
சத்தியசீலன் ரோகினி (மருமகள்)
குவேனன் பல்பொருள் வாணிபம்
இல.146, அம்பாள்நகர், சாந்தபுரம்.
0772038151, 0775374314

என்றும் உங்கள் நினைவுகளுடன்...
கணவன், பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்
மற்றும் உறவுகள்.
077 9079851

## வடக்கு, கிழக்கு...

யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்ற நீதவான் சின்னத்துரை சதீஸ்தரன், பருத்தித்துறை மாவட்ட நீதிபதியாகவும் பருத்தித்துறை மாவட்ட நீதிபதி பெருமாள் சிவகுமார், அக்கரைப்பற்று மாவட்ட நீதிபதியாகவும் மாற்றம் செய்யப்பட்டுள்ளனர். அக்கரைப்பற்று மாவட்ட நீதிபதி ஏ.பி.போல். யாழ்ப்பாணம் நீதிமன்ற நீதவானாக மாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

மேலும் மட்டக்களப்பு நீதிவான் எம்.ஐ. எம்.ரிஷ்வி சம்மாந்துறை நீதவானாகவும் வாழைச்சேனை மாவட்ட நீதிபதி ஏ.சி.ரிஷ்வான், மட்டக்களப்பு நீதவானாகவும் சம்மாந்துறை நீதவான் பைசல் வாழைச்சேனை மாவட்ட நீதிபதியாகவும் இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது.

இந்த இடமாற்றம் வரும் ஜனவரி முதலாம் திகதி முதல் நடைமுறைக்கு வரும் என நீதிச் சேவை ஆணைக்குழுவின் செயலாளர் சஞ்சீவ சோமரட்ண அறிவித்துள்ளார்.

இதேவேளை, யாழ்ப்பாணம் தொழில் நியாய சபையின் தலைவர் திருமதி தாரணி கணேசநாதன், திருகோணமலை மற்றும் மட்டக்களப்பு தொழில் நியாய சபையின் தலைவராகவும் மட்டக்களப்பு தொழில் நியாய சபையின் தலைவர் வி.எம். சியான் யாழ்ப்பாணம் தொழில் நியாய சபையின் தலைவராகவும் இடமாற்றம் பெற்றுள்ளனர்.(3-9)

## ஓம் ஸ்ரீ சிவபார்வதி ஜோதிட நிலையம்
ஓலைச்சுவடிகள் மூலம் காண்டம் வாசிக்கப்படும்
வட்டுக்கோட்டை சங்கரத்தை சந்திக்கு அருகில்,
திருமணத்தடை, புத்திரபாக்கியம்/புத்திரபாக்கியத்தடை, தொழில் வியாபாரம் தடைகள், வெளிநாட்டு பயணத்துக்கான பரிகாரம், முற்பிறப்பு தோஷங்கள் விலகல் போன்றவற்றுக்கான பரிகாரங்கள், வவுனியா பண்டாரிக்குளத்திலும்...
(புதன், வியாழன், வெள்ளி, சனி, ஞாயிறு - யாழ்ப்பாணம்)
(திங்கள், செவ்வாய், - வவுனியா) (C-4491)
தொடர்புகளுக்கும் முன்பதிவுகளுக்கும்:- 076 328 7119

## திறன் வகுப்பறையில் (Smart Class Room)
தரம் 3, 4, 5 மாணவர்களுக்கான புதிய பிரிவுகள்
● ஆரம்பம் : 01.12.2018 (சனிக்கிழமை)
● இடம் : Science Guide Center
116/21, இராசாவின்தோட்ட வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.
● ஆசிரியர் : N.சுந்தா (தேசிய பாடசாலை)
தொடர்புகளுக்கு: 077 899 9940
(6540)

தரம் 4. 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கு தொடர் மாதிரி பரீட்சைகள்
ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமைகளிலும்
● முதலாவது பரீட்சை : 09.12.2018
● ஆசிரியர் : N.சுந்தா (தேசிய பாடசாலை)
● இடம் : Science Guide Center
116/21, இராசாவின்தோட்ட வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
04.12.2018க்கு முன்னர் பதிவுகளை மேற்கொள்ளவும்
குறிப்பு: பரீட்சைக்கு தோற்ற முடியாதவர்கள் பரீட்சை வினாத்தாள்களை நேரடியாகவோ அல்லது தபால் மூலமாகவோ பெற்றுக்கொள்ளலாம்.
தொடர்புகளுக்கு: 077 899 9940
(6540)

## சொர்க்கம் திருமண சேவை
அமெரிக்காவில் (USA) வசிக்கும் 29வயதுடைய செவ்வாய் குற்றம் உள்ள பட்டதாரி மணமகனுக்கு தகுந்த இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த மணமகளைத் தேடுகிறோம். கனடாவில் வசிக்கும் 36 வயதுடைய பிராமண குடும்பத்தைச் சேர்ந்த பட்டதாரி மணமகளுக்கு தகுந்த மணமகனைத் தேடுகிறோம். T.P & Viber:
001416661855, 001647504336
(C-4490)

## பதவி வெற்றிடம்
கணினி தமிழ் ரைப்பிங் மற்றும் பக்கவடிவமைப்பாளர்கள் (இருபாலாரும்) தேவை
முன் அனுபவம் உள்ளவர்கள் தொடர்பு கொள்ளவும்
070 220 2206

## Study in ITALY
Full Scholarship
ஐரோப்பாவில் குடியேறுவதற்கு ஓர் அரிய வாய்ப்பு
Admission open for 2019 Feb Intake



Why Study in ITALY ?
★ Bachelors & Master Degree
★ Study in English Medium
★ கற்கை நெறியுடன் கூடிய பகுதி நேர வேலை வாய்ப்பு.
★ கல்வியின் பின் 26 நாடுகளில் ஒரு நாட்டில் வேலை வாய்ப்புடன் பிரஜா உரிமை பெறும் வாய்ப்பு.
★ 100% விசா உத்தரவாதம்.
★ குறைந்த பாட நெறி கட்டணம்
★ Dependent visa to spouse
★ Schengen visa
(சி-4492)
iCS A Complete Visa Solutions Study Abroad
Admissions :- 077 3013060
77, மணிக்கூட்டு கோபுரவீதி, யாழ்ப்பாணம்
107 B 1/1 . Galle Road . Colombo 6

## இலங்...

ள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

பாராளுமன்ற வளாகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடக வியலாளர் சந்திப்பில் அவர் கருத்து வெளியிட்டார்.

அரசியல்வாதிகளின் செயற்பாடு காரணமாக பாதிக்கப்படுவது அப்பாவி மக்கள் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

அதிகார ஆசையுடையவர்கள் மற்றும் நாட்டுப்பற்றாளர்கள் என கூறிக்கொள்ளும் குழுவினர் அரசியல்வாதிகளாக செயற்படுவதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

எங்கள் ஆட்சியின் போது வெளிநாட்டு வருமானம் பாரியளவு அதிகரித்தது. ஏற்றுமதி பாரியளவில் அதிகரித்து காணப்பட்டது. எனினும் தற்போது சர்வதேச தடை விதிக்கும் நிலைமை ஏற்பட்டுள்ளதாக சஜித் பிரேமதாஸ மேலும் தெரிவித்துள்ளார்.(3)

## பிரத...

குறித்த மனுவில் புதிய பிரதமர் மகிந்த ராஜபக்ஷவிற்கு எதிராக நம்பிக்கையில்லா பிரேரணை நிறைவேற்றப்பட்ட தன் பின்னரும் அவர் தொடர்ந்தும் பதவியில் இருக்க முடியாது என கோரி 122 பாராளுமன்ற உறுப்பினர்களும் மேன் முறையீட்டு நீதிமன்றில் மனுத்தாக்கல் செய்துள்ளனர். (3)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 24.11.2018 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.